Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
நவ.13-19,1994 ரூபா 9/00
දිනමුරසු වාරමලර්

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 76

அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



கடற்புலிகளின் புதிய படகு வெள்ளோட்டம் நடத்துகிறார் பிரபாகரன் பிரபாவின் அருகில் கடற்புலித் தளபதி சூசை

அதிரடியான அரசியல் தொடர்.......



## சந்திரிக்கா + சிறிமா காமினி மோதல்

தெரிவும்–தவறும்

□□□ எக்ஸ்ரே ரிப்போர்ட்



இலக்கிய நயம்

52 வருடம் தாமதமான காதல் கடிதம்

## அழுதால் உயிர் பிரியும் ஆபத்து!

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.
ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள்
செவிகளில் வந்து விழுவதற்கு முன்னரே
இது எழுதப்படுகிறது.

முடிவு முன்கூட்டியே
எதிர்பார்க்கப்பட்டதாகவே இருக்கப் போகிறது.

எனினும் அசுரத்தனமான
பெரும்பான்மை பலத்தை
இரு பெரும் அணிகளிலும்
எந்தவொரு அணியும் தற்போது
பெற முடியாத சூழல்
அரசியல் அரங்கில் காணப்படுகிறது.

ஜனநாயகத்திற்கு இது ஒரு பலம்.
ஆயினும், பாதகமும் உண்டு.
இரு பெரும் அணிகளும்
விரும்பத்தகாத விரோத மனப்போக்கை
வெளிப்படுத்தி வருகின்றன.

ஒரு அணிமீது மறு அணி
கொலைக் குற்றச்சாட்டை சுமத்துமளவுக்கு
குரோதம் வியாபித்திருக்கிறது.

அனுதாப அலையை
அளவுக்கதிகமாக நம்பியிருப்பதும்
குரோதத்தை வளர்க்கக்கூடிய
குற்றச்சாட்டுகளின் குறியாக இருக்கிறது.

குற்றம் சாட்டும் தலைவர்களுக்கு
உண்மை எது பொய் எது என்று தெரியும்.

யாரையெல்லாம் குற்றவாளிகள் என்று
சுட்டிக்காட்டுகிறார்களோ
அவர்களை நாளை கட்டியணைத்துக்கொள்ள
தலைவர்கள் தயாராகவே இருப்பார்கள்.

பிரேமாவை குற்றவாளியாக்கியவர் காமினி.
ஆனால்-அவரே
பிரேமா குடும்பத்தினரை தேடிப்போய்
ஆதரவு கேட்டார்.
பிரேமாவை புகழ்ந்தும் பேசினார்.

காமினியோடு அன்று கைகுலுக்கியவர்கள்
பொதுஜன முன்னணித் தலைவர்கள்.
இன்று அவர்களே
காமினி மறைந்தபோதும் அவரை
சுட்டிக்காட்டி குற்றம் சுமத்துகிறார்கள்.

காமினி மறைவுக்கு காரணம்
சந்திரிக்கா-புலிகள் கூட்டுச் சதி
என்று சொல்கிறது ஐ.தே.கட்சி.

அப்படியிருக்காது என்று தெரிந்தும்
அனுதாப அலைக்கு வசதி செய்ய
எப்படிச் சொன்னால் லாபம் என்று
திட்டமிட்டு குற்றம் சாட்டுகிறார்கள்.

பிரச்சனைகளை தீர்க்கவேண்டும் என்று
திருமதி சந்திரிக்கா
மேற்கொண்ட தீவிர முயற்சியை

சதி முயற்சிக்கான தயாரிப்பாக
சுட்டிக்காட்டுவதால் பாதிப்பு
பொதுஜன முன்னணிக்கல்ல;
நாட்டின் பொது நலனுக்குத்தான்.

புலிகளோடு அரசாங்கம் பேசுவதை
ஜனாதிபதி வேட்பாளராகும் வரை
காமினியும் கண்டிக்கவில்லை.

புலிகள் ஒரு பலமான சக்தியாக
இருப்பது மறுக்க முடியாத உண்மை.
அதனால், தீர்வுக்கான முயற்சிகளில்
ஈடுபடும் எவருமே
புலிகளோடு பேசுதல் தவிர்க்க முடியாதது.

பொதுஜன முன்னணி அரசும்
அதனையே செய்தது.
சூழலுக்கேற்ப மேற்கொண்ட முயற்சியை
சூழ்ச்சி என்று கூறுவதும்
அவ்வாறான கருத்தை
ஆழமாய் மக்களிடம் விதைப்பதும்
துணிச்சலான தீர்வு முயற்சிகளுக்கு
தொடர்ந்தும் தடையாகிவிடும்.

ஏட்டிக்குப் போட்டியாகவே
இரு பெரும் அணிகளும்
பொதுப் பிரச்சனைகளிலும் நடந்துகொள்வது
ஒருமித்த முடிவுகளுக்கு
எப்போதும் வரமுடியாமலாக்கிவிடும்.

உள்ளமார்ந்த விருப்பம்
கொள்ளவேண்டிய தேவையுள்ள
இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு
முயற்சிகளுக்கு-
சிங்கள மக்களையும் ஒருமுகமாக்க
இரு அணிகளதும் புரிந்துணர்வும்
பொறுப்புணர்வும் அவசியமாகின்றன.

உடனடி அரசியல் லாபங்களுக்காக
உண்மைக்கு மாறான
உள்நோக்கங்கள் கற்பிக்கப்படுமானால்
தீர்வுகள் எட்டாக் கனியாகிவிடும்.

அடித்துக்கொள்ளும் தலைவர்கள்
அணைத்துக்கொண்டாலும்கூட
அவர்கள் விதைத்த விரோதங்கள்
ஆதரவாளர்கள் மத்தியில்
வேர்விட்டு நீடிப்பதும் உண்டு.

பொதுவான பிரச்சனைகளிலும்
தவறான அபிப்பிராயங்கள்
தோற்றுவிக்கப்படுவது தொடருமானால்
விடிவு தோன்றுவது
வினாக்குறியாகவே நீடிக்கும்.

புதிய ஜனாதிபதிக்கு
பொதுப் பிரச்சனைகளில் நியாயமான
தீர்வு காண உதவும் முயற்சியில்
இரு அணிகளதும் பங்கு முக்கியமானது.
பொறுப்புணர்வோடு இரு தரப்பும் நடப்பது
நாட்டின் நலனுக்கு ஆரோக்கியமானது.

□□

என்றென்றும் அன்புடன்
-ஆசிரியர்-

## ஆன்மீகம்

### மோட்சவாழ்வு யாருக்கு?



நாள்தோறும் தற்காலிக சந்தோஷத்தினைத் தரக்கூடிய உலக வாழ்க்கையைவிட, பரிபூரண நித்திய சந்தோஷத்தை அளிக்கக்கூடிய மோட்ச வாழ்க்கை யாருக்குத்தான் பிடிக்காமல் போகும்?

மோட்ச வாழ்வைப் பெற விரும்பி ஓர் இளைஞன் இயேசுவிடம் வந்து கேட்கிறான்,

"நல்ல போதகரே! நித்திய ஜீவனை அடையும் மோட்ச வாழ்வினைப் பெறுவதற்கு நான் எத்தகைய நன்மைகளைச் செய்ய வேண்டும்?"

கிறிஸ்து, "நீ என்னை நல்லவன் என்று சொல்வது ஏன்? தேவன் ஒருவரைத் தவிர நல்லவர் ஒருவருமில்லை. நீ நித்திய ஜீவனை அடைய விரும்பினால் பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடி" என்றார்.

"எந்தக் கட்டளைகளை நான் கடைப்பிடிக்க வேண்டும்?" என்று அவன் மீண்டும் கேட்கிறான்.

கிறிஸ்து, "கொலை செய்யாதிருப்பாயாக, விபசாரம் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக, பெற்றோரைக் கனம் பண்ணுவாயாக, அயலவனிடத்தில் அன்பு கொள்வாயாக," என்றார்.

இளைஞனோ, "இவைகளை என் சிறுவயதுமுதல் கடைப்பிடித்து வருகிறேன்" என்றான்.

"அப்படியானால் உனக்கு உண்டானவற்றை எல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடு, அப்போது உனக்கு பரலோக ராஜ்ஜியத்தில் இடம் கிடைக்கும்" என்றார் இயேசு.

ஆனால் இந்த வார்த்தைகளைக் கேட்ட அந்த இளைஞன் மிகவும் கவலையுடன் சென்றான்.

மோட்ச வாழ்வில் இப்படிப்பட்டவர்களுக்கு எப்படி இடம் கிடைக்கும்?

'பணக்காரன் தேவனுடைய ராஜ்ஜியத்தில் நுழைவதைப் பார்க்கிலும் ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது'. (மத்தேயு 19:24)

ஜி.டானியல்.

### தொழுகையின் சிறப்பு

உலகிலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் [illegible] அடையாளங்கள் இருக்கின்றன. அதேபோல் [illegible] தொழுகை இருக்கிறது. தொழுகை இல்லாதவரிடம் ஈமான் இல்லை. [illegible] இறைவனின் பாதுகாப்பை விட்டும் நீங்கி விடுகிறார், தொழுகையை விட்டவர் [illegible] இடித்து விட்டார் என்னும் அண்ணலாரின் பொன்னுரைகளை [illegible]

எனவே நாம் ஈமான் கொண்டவர்கள் என்பதை எடுத்துக்காட்டவும் [illegible] பலப்படுத்தவும், உள்ளும் புறமும் உண்மை முஸ்லிம்களாக திகழவும் [illegible] இறைவனின் அன்பையும் அருளையும் அடையவும் தூய்மையான மனதுடன் தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.

மறுமையில் இறைவன் சொர்க்கத்தில் புகும்படி எல்லாத் தொழுகையாளிகளுக்கும் உத்தரவிடுவான். அப்போது முகங்கள் சூரியனைக் காட்டிலும் சுடரான ஒரு கூட்டத்தினர் சொர்க்கத்தில் பிரவேசிக்கச் செல்வார்கள். இவர்கள் தொழுகை நேரம் வருமுன்பே பள்ளிக்கும் சென்று தொழுகை நேரத்தை எதிர்பார்த்து அமர்ந்திருந்து நேரம் வந்தவுடன் தொழுது வந்தவர்கள். இன்னொரு குழுவினரின் முகங்கள் சந்திரனைப் போன்று பிரகாசித்த வண்ணம் சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செல்வார்கள். இவர்கள் பாங்கு சொல்வதற்குமுன்பே வுழூச் செய்து தொழுகைக்கு ஆயத்தமாக இருந்து தொழுது வந்தவர்கள். மற்றொரு கூட்டத்தினரின் முகங்கள் நட்சத்திரங்கள் போன்று ஒளிபெற்ற வண்ணம் சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செல்வார்கள். இவர்கள் பாங்கு சத்தத்தை கேட்டவுடன் உழுச் செய்து தொழுது வந்தவர்கள். எனவே உலகில் நாம் ஐவேளைத் தொழுகைகளையும் எவ்வளவுக்கெவ்வளவு பேணித் தொழுது வந்தோமோ, வருகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு நமக்கு சுவர்க்கத்தில் வசதியும், வாழ்வும் சுகபோகங்களும் கிடைக்கும்.

இர்பானா றியால்-மக்கொன.

## பார்த்த ஞாபகம் இல்லையோ?



இவர்களை பார்த்த ஞாபகம் இல்லையோ உங்களுக்கு? சுட்டித்தனமாய் தெரியும் அந்தக் குட்டிப் பெண்ணையாவது தெரிகிறதா?
யோசித்துவிட்டு விடை சரியா என்றறிய பக்கம் 13க்கு செல்லுங்கள்.

## கவிதைப் போட்டி இல-76



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும் சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா நூறு. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 19.11.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 76
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

## வாசகர் சாலை

எம் இனிய முரசிற்கு,
உன் ஆக்கங்களில் எங்களை கவராதது எதுவென்று செல்வது? உன் முகப்பக்கம் இளமங்கையின் புன் சிரிப்பு! என்றும் உன்சேவை தொடர வாழ்த்தும் இள நெஞ்சங்கள்.

புவாட்,பௌஸ், சிபாஸ், இக்ராம்-வரக்காமுரை.

□□

தெள்ளு தமிழில் துள்ளி வரும் முரசே!
வாரா வாரம் உன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்து உன்னை அள்ளிப் பருகும் எனக்கு நீ ஒரு நாள் தாமதித்தாலும் சந்திரனைக் காணாமல் அல்லி மலர் வாடுவதுபோல, உன்னைக் காணாமல் என் இதயம் சோர்ந்துவிடுகிறது. என்னுள்ளத்தில் ஆழப் பதிந்துள்ள முத்தான முரசே, நீ என்னை ஏமாற்றாமல் வாரம் வாரம் என் கரம் பற்றிவிடு. சுவையான முரசே! உனை ஒரு நாளும் மறவாத இனிதான வரம் வேண்டும்.

செல்வி.நஸீராஜ் சம்சுதீன்-கந்தளாய்.



அன்பின் தினமுரசே,
நீ கவிதைப்போட்டி எனும் தலைப்பில் சூழலைப் புரிந்து அதற்கேற்ற படங்களை பிரசுரித்து இலைமறைகாயாய் இருக்கும் இளம் கவிஞர்களை ஒளி மயமாக்கி வைத்து பரிசினையும் வழங்கும் உன் சேவையை பாராட்ட வார்த்தையின்றி தவிக்கிறேன்.

க.லிங்கேஸ்வரன்-பெரியநீலாவணை-01.

□□

தினமுரசில் வரும் அனைத்து ஆக்கங்களும் சிறப்பாக உள்ளன. மற்றும் எக்ஸ்ரே ரிப்போர்ட், அரசியல் அலசல் என்பன நாட்டில் நடக்கும் அரசியலை மக்களுக்கு தோலுரித்து காட்டுகின்றன.

ஏ.பி.டிக்சன்-நாவற்காடு.

□□

உள்ளத்தை கொள்ளைகொண்ட தினமுரசே, எக்ஸ்ரே ரிப்போர்ட், அலசுவது ராஜதந்திரி மூலம் அரசியல் விடயங்களை அறியத் தருவில் உன் பாணி மிகவும் நன்றாக இருக்கின்றது.

இர்பானா றியால்-மக்கொன.

□□

தினமுரசு
தித்திக்கும்
தேனமுதமும்
முக்கனியும் கலந்து
இரசிகர்களுக்கு
சுவையான விருந்தளிக்கிறாய்.

அ.வா.சபறுல்லாஹ்-மருதமுனை-07.

□□

தித்திக்கும் தினமுரசே,
வாரம் 'ஒருமுறை மலர்ந்தாலும் இளம் வாலிபரின் வாழ்த்து உனக்குண்டு. ஆரையம்பதியினிலே.

த.ரவிக்குமார்-ஆரையம்பதி.

□□

அரசியல் கட்டுரைகள் எழுதியவிதம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அது எனக்கில்லை- எல்லோருக்கும் பிடித்திருக்கும் என நினைக்கிறேன். இத்துடன் நின்றுவிடாமல் என்னும் உங்கள் பத்திரிகை மிகவும் வளர்ந்து இலங்கை பத்திரிகைத்துறையில் முன்னோடியாகத் திகழவேண்டும் என வாழ்த்தி இம் மடலை முடிக்கிறேன்.

ந.றூபன்-சுவிட்ஸர்லாந்து.

□□

அன்பின் முரசே!
வாரத்தின் இறுதியில் வண்ண அட்டையுடன் உறுதி குலையாமல் உண்மை செய்திகளை கொண்டு வருவதோடு எக்ஸ்ரே ரிப்போர்ட், மருத்துவ+ விந்தைகள், சினிவிசிட், தேன் கிண்ணம், எம்மை வியக்கவைக்க தகவல் பெட்டி, கொலை விழும் நேரம், தொடர்கதை என நீ தாங்கிவரும் அனைத்து அம்சங்களும் சுப்பர். உன் சேவை தொடர வாழ்த்துகிறேன்.

வி.எஸ்.ஆர். சந்திரசேகரன்-லூனுவத்தை.

□□

டியர் முரசே!
வாரமொருமுறை என் கரங்களில் தவழும் முரசே! உன்னைக்கண்டு விட்டால் போதும் எங்கள் வீட்டில் ஒரே போட்டி- உன்னை நீயா நானா முதலில் வாசிப்பது என்று.

பி.மஞ்சுளா-நாவலப்பிட்டிய.

□□

திக்கெட்டும் முரசொலிக்க தேன் சுவை தரும் தினமுரசே, நீ தரும் அத்தனை அம்சங்களும் ஆக்கங்களும் சிறந்தவையே, இன்றுபோல் என்றும் உன் புகழ் ஓங்கிட என் வாழ்த்துகள்- பாராட்டுக்கள் பல.

வீ.இராஜேந்திரன்-பூண்டுலோயா.

□□

## கவிதைப்போட்டி இல-73

வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும்
வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

### பரிசுக்குரிய கவிதை

**வெற்றி**
உங்களின் பலமல்ல
வெற்றி
மக்களின் தீர்ப்பே
மாபெரும் வெற்றி.

நிஸ்ருல் சுஹைறா
ஹிஜ்ராபுரம்.



### வியக்கப்பட்டவை

**நிதானித்து போ**
முட்டிக்கொள்ளும் எமக்கும்
தொட்டுக் கொள்ள ஆசை
மோதிக் கொண்டால் என்ன
முத்தமிட மகன் தானே

தெ.லோஜனா-கொழும்பு-5.

**இது தொண்டா அமைச்சராகமுன்**
துவண்டு விடாதே
தலைவா!
'தொண்டா'-எமக்கு
துணை நிற்பார்.

ஆர்.ரமேஸ்குமாரி
நானுஓயா.

**புதுப்பாடம்**
மகனே-இருக்கட்டும்
மனதில் கவனம்
மனிதாபிமானமற்ற
மனித மிருகங்கள்
மலர்ந்து உலாவும்
மரண மண்ணிது
மறந்து விடாதே!

ஐ.எம்.ஹாரிப்
கொழும்பு-10.

**கதை**
கரியிரண்டு
கதை சொல்லுது
அமைதியைக் கொன்றது
ஆயுதம்-இனி
அன்பு கொள்ளுங்கள்
அமைதி காணலாம்.

வை.நுஜிரா-கலாவெவ.

**தெளிவு**
முரண்பாடுகள்
நீங்குவதால்
ஐக்கியம்
அரங்கேறுகிறது

சு.கௌரீசன்
சின்னப் புதுக்குளம்.
வவுனியா.

**வேண்டாம் போர்**
அறிவியலில் தேறி
ஆறறிவு பெற்றவனால்
அதிகாரமோதல்
அகிலத்தில்.
ஆதலால் ஐயறிவே!
வேண்டாம் மோதல்.
வேண்டாம் அழிவு.

ஏ.சி.அப்துல் றகுமான்
ஏறாவூர்-06.

**மு(இர)த்தம்**
மிருகங்கள்
பகிர்வது
முத்தம்!
மானிடம்
தினம்
மிதிப்பது
இரத்தம்!

எம்.இம்தியாஸ்
வெலம்பொட.

**தீர்வு**
சமஷ்டியா?
ஒற்றையாட்சியா?
தாயும் சேயும்
ஆலோசனை!

ஆர்.யோகநாதன்
வவுனியா.

**அன்பு முத்தம்**
அம்மா அம்மா என்பேனே
அன்பு முத்தம் தருவேனே
பொன்னாய்க் காக்கும் உன்னை நான்
புவியில் என்றும் மறவேனே.

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

**இனிநான் பிரியேன்...**
"எங்கே போனாய்?
எந்தன் கண்மணியே!...
தனியாகிப் போய்-
தவித்துப் போனாயோ?!
எங்கெலாம் தேடினேன்...
ஏகமாய் சோகமானேன்!"
"சும்மாதான் போனேன்..
சூடுகண்ட பூனையானேன்!
அம்மாசொல் கேளாமல்..
அறிவிழுந்து போனேன்!
அம்மா(டி) இனிமேல்நான்
உனைவிட்டு எங்கும் போகேன்?"

கோட்டைமுனை வாஹிட்
ஏ.குத்தூஸ்-பதுளை.

ஸ்பெஷல் ரிப்போர்ட்

# காமினி கொலையில் இந்திய புலனாய்வாளர்கள்!

# அவர்கள் வந்தால் திருப்பம் வருமா?

(அரசியல் நிருபர்)

காமினி திசாநாயக்கா கொலைக்கு காரணமான மனித வெடிகுண்டாக செயற்பட்டது ஒரு பெண்தான் என்று விசாரணையாளர்கள் நம்புகின்றனர்.

ஏற்கனவே பெண் ஒருவரின் சிதைந்த தலை கண்டெடுக்கப்பட்டது.

பிளாஸ்றிக் அறுவை சிகிச்சை மூலம் அந்தத் தலை சீராக்கப்பட்டு பத்திரிகைகளிலும் புகைப்படங்கள் வெளியாகியிருந்தன.

குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணைகளுக்கு தனிப்பிரிவு நியமிக்கப்பட்டு துரிதமான விசாரணைகளும் நடைபெற்று வருகின்றன.

இதே வேளையில் திருமதி காமினி திசாநாயக்கா இந்திய புலனாய்வுப் பிரிவினரை விசாரணையில் ஈடுபடுத்துமாறு கேட்டிருந்தார்.

அரசாங்கம் அவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்தியாவுக்கும் புலனாய்வாளர்களைத் தந்துதவுமாறு கேட்டுக் கடிதம் அனுப்பியுள்ளது.

இது இவ்வாறிருக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட வீடியோ படத்தில் இருக்கும் சந்தேகத்துக்கிடமான பெண் பற்றியும் ஆராயப்பட்டுவருகிறது.

கடந்த அக்டோபர் 7ம் திகதி, மறைந்த காமினி திசாநாயக்கா பங்குபற்றிய தேர்தல் பிரசாரக் கூட்டம் கொழும்பு மருதானையில் நடைபெற்றது.

அக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட வீடியோப் படத்தில் காணப்படும் பெண்ணே சந்தேகத்துக்குரியவராகத் தெரிகிறார்.

பாலத்துறையில் நடந்த கூட்டத்திலும் கூட்டத்தினரைப் புகைப்படம் எடுத்துள்ளனர்.

ஆனால் படம் எடுக்கும் நேரத்தில் ஒரு பெண் தனது முகத்தை முன்வரிசையில் நிற்பவர்களின் தலை மறைவில் மறைத்துக் கொண்டிருக்கிறார்.

ஆயினும் அவரது தலைமுடியை காணக்கூடியதாக இருக்கிறது. முக அமைப்பும் ஓரளவு தெரிகிறது.

குண்டுவெடிப்பின் பின்னர் கண்டெடுக்கப்பட்ட தலையோடு புகைப்படத்தில் காணப்படும் பெண்ணின் தலைமுடி மற்றும் முக அமைப்பு ஒத்து வருகிறது.

மருதானைக் கூட்ட வீடியோவில் காணப்படும் பெண்ணோடு மேற்கண்ட தடயங்களை வைத்து ஒப்பிட்டுப் பார்த்ததில் பொருத்தமாகவே தெரிகிறது என்று கூறப்படுகிறது. மிக முக்கியமாக தலைமுடி வாரிக் கட்டப்பட்டுள்ள முறையானது விஷேடமான அடையாளமாகக் காணப்படுகிறது.

மருதானைக் கூட்ட வீடியோவில் இருக்கும் சந்தேகத்துக்குரிய பெண்ணின் படத்தை முரசு அந்த வீடியோவில் இருந்து எடுத்து வெளியிடுகிறது.

விரைவில் புலன்விசாரணையாளர்களாலும் இப்படம் வெளியிடப்படலாம் என்று நம்பப்படுகிறது.

இந்திய புலனாய்வாளர்கள் இங்கு வந்து விசாரணைகள் நடத்துவது பற்றி பரபரப்பாகப் பேசப்படுகிறது.

எனினும், ராஜீவ் கொலை விசாரணையில் ஒற்றைக் கண் சிவராசன் பற்றிய தகவல்களையும், புலிகளது உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான் என்றழைக்கப்படும் சிவசங்கர் பற்றிய தகவல்களையும் இலங்கையின் புலனாய்வு துறையினரே இந்திய சிறப்பு புலனாய்வுக் குழுவினருக்கு வழங்கியிருந்தனர்.

தமக்கு பரிச்சயமான மண்ணில் விசாரணை நடத்துவது போல் இங்கு இந்திய புலனாய்வாளர்களால் செயற்பட முடியுமா என்பது சந்தேகத்துக்குரியதே!

ராஜீவ் கொலை விசாரணையின்போது ஒற்றைக்கண் சிவராசன் மறைந்திருந்த இடத்தை கண்டுபிடிக்கவும், மற்றும் பலரை தேடிக் கண்டுபிடிக்கவும் பொதுமக்களது ஒத்துழைப்பு தாராளமாகக் கிடைத்தது.

அது தவிர 'மல்லிகை' என்ற பெயரில் தனி அலுவலகமே கொலை விசாரணைக்காக இயங்கியது.

இங்கு அவ்வாறான ஒத்துழைப்பைப் பெறுவதில் சிரமங்கள் ஏற்படும்.

சிங்கள மொழியில் இந்திய புலனாய்வாளர்களுக்கு பரிச்சயம் இன்மையும் பொதுமக்களது தகவல்களை நெருக்கமாகச் சென்று நேரடியாகப் பெறுவதில் சிரமங்களைத் தோற்றுவிக்கும்.

அதுதவிர மிக முக்கியமாக இலங்கையின் சகல பகுதிகளுக்கும் அவர்கள் சென்று விசாரணை நடத்த முடியாது.

விசாரணைக்கு தேவைப்படும் நபர் ஒருவர் புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் இருக்கிறார் என்று வைத்துக் கொண்டால் அங்கு செல்ல முடியாது.

மேலும் ராஜீவ் கொலை விசாரணை உடனடியாக நடத்தப்பட்டது.

கொலையோடு தொடர்புடையவர்களை உடனே அடையாளம் கண்டு வலை விரிக்கப்பட்டது. தமிழ்நாட்டை விட்டு தப்பிச் செல்லாதவாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஆனால், காமினி கொலை விசாரணையை இந்திய புலனாய்வாளர்கள் ஆரம்பிக்கும்போது காலதாமதம் அதிகமாகிவிடும்.

இலங்கை புலனாய்வாளர்களது ஒத்துழைப்பு இல்லாமல் அவர்கள் செயற்பட முடியாது.

வேண்டுமானால் கொலைக்கு காரணம் யார் என்பதை மட்டுமே அவர்கள் மூலம் சொல்லவைக்கலாம். அதனை காமினி திசாநாயக்காவின் குடும்பத்தினர் விரும்புவதாகத் தெரிகிறது.

இந்தியப் புலனாய்வாளர்கள் விசாரணை நடத்துவதன் மூலம் இலங்கை புலனாய்வாளர்கள் நடத்தும் விசாரணையைவிட மேலதிகமாக திருப்பம் எதனையும் ஏற்படுத்திவிட முடியாது.

ஆனால் கொலையின் சூத்திரதாரிகள் யார் என்பதை அரசியல் நிர்ப்பந்தம் காரணமாக இலங்கை புலனாய்வாளர்கள் சொல்லாமல் விடக்கூடும் என்று காமினி குடும்பத்தினர் நினைக்கலாம். அதன் விளைவுதான் அவர்களது கோரிக்கை. ●

## இவரா அவர்?!



சிதைந்தபின் சீராக்கப்பட்ட முகம்

மருதானையில் அக்டோபர் 7ம் திகதி நடைபெற்ற ஐ.தே.கட்சி கூட்டத்தில் எடுக்கப்பட்ட வீடியோப் படத்தில் சந்தேகத்துக்குரியவராக கருதப்படும் பெண்ணையே படத்தில் காண்கிறீர்கள். வீடியோவில் இருந்து எடுக்கப்பட்டது. உதவி–புறொண்ட்லைன் ஆசிரியர் திரு.ராம்.

## "அநாதைச் சிறுவர்கள் 'தமிழீழத்தின்' தலைவர்கள்"

# சிறுவர் இல்ல விழாவில் பிரபா உரை!

(வர்மா)

வடக்கே அநாதரவான சிறுவர்களை புலிகள் அமைப்பினர் பொறுப்பேற்றுப் பராமரித்து வருகின்றனர்.

யுத்தத்தில் பெற்றோர்களை இழந்த சிறுவர்களும் பராமரிக்கப்படுகின்றனர்.

கடந்த வருடம் 1.11.93 அன்று அநாதரவான சிறுவர்கள் பராமரிப்புக்காக 'காந்தரூபன் அறிவுச் சோலை' என்னும் பராமரிப்பு நிலையத்தை புலிகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்திருந்தனர்.

அந்த நிலையத்தின் ஓராண்டு நினைவு நாள் விழா கடந்த 1.11.94 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

நீண்ட இடைவெளியின் பின் பிரபாகரன் நேரடியாக் கலந்துகொண்ட பொது நிகழ்ச்சியாகவும் அது அமைந்தது.

விழாவில் கலந்துகொண்டு பிரபாகரன் வழங்கிய செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது:

"போராட்ட புயல் வீசும் எமது மண்ணில், வேரோட்டம் பெற்று விரைவான வளர்ச்சியைப் பெற்றுவரும் எமது அமைப்புகளில் ஒன்று காந்தரூபன் அறிவுச் சோலை.

"இந்தச் சோலையில் உள்ள இளஞ் செடிகள் துளிர்த்து, பூத்து, காய்த்து, செழித்து வளர்வதைக் காண எனது நெஞ்சம் நிறைகிறது.

முழுமையான மனிதர்களை உருவாக்கும், புதுமையான பரிசோதனைக் களமாக காந்தரூபன் அறிவுச்சோலை அமையவேண்டும்.

வல்லவர்களில் வல்லவர்களாக இருக்கவேண்டும். அப்படியான சிறந்த மனிதர்களை- முழு மனிதர்களை உருவாக்குவதே அறிவுச் சோலையின் இலட்சியமாக அமையவேண்டும்.

"எதிரியின் அழிப்பு வேலைகளுக்கு மத்தியில், நாம் ஆக்க வேலைகளைச் செய்து வருகிறோம். போர்ச் சூழலால் குடும்பம் சிதைந்து, அநாதரவான நிலைக்கு ஆளாகும் சிறார்களை எமது இயக்கம் அரவணைத்துக் கொள்கிறது.

அவர்களை சிறந்த முறையில் வளர்த்தெடுக்க, பராமரிப்பு இல்லங்களையும், பயிற்சிப் பள்ளிகளையும் நடத்திவருகின்றது.

"தமிழீழத்தின் எதிர்காலத் தலைவர்களாக, அறிவு ஜீவிகளாக, சமூக நிர்மாணிகளாக இவர்களை வளர்த்தெடுப்பதே எனது நோக்கமாகும்.

எனது இலட்சிக் கனவை நிறைவு செய்யும் வகையில் ஓர் [illegible]றுதியான அத்திவாரத்தைக் கட்டியெழுப்[illegible] [illegible]றிவுச் சோலை செற்பட்டு வருகின்றது.

அறிவுச்சோலைப் பொறுப்பாள[illegible]க்கும், ஆசிரியர்களுக்கும், ஏனடியோருக்கும் எனது பாராட்டுக்கள். 'புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்!" இவ்வாறு திரு.வே.பிரபாகரன் குறிப்பிட்டிருந்தார்.

## அடுத்த பிரதமர் யார்?

(நமது நிருபர்)

பிரதமர் சந்திரிக்கா ஜனாதிபதியானால் பிரதமர் பதவி யாருக்கு? அரசியல் வட்டாரங்களில் இந்தக் கேள்வி அடிபடுகிறது.

தற்போது பொது நிர்வாக, பாராளுமன்ற அலுவல்கள், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சராகவும், பாராளுமன்றச் சபை முதல்வராகவும் உள்ள ரத்னசிறி விக்ரமநாயக்க பிரதமராகலாம் என்று கருதப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தல் பிரசார பணிகளுக்கும் திரு. ரத்னசிறி விக்ரமநாயக்காவே பொறுப்பாக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# உத்தியோகபூர்வ மறுப்பில்லை!

## புலிகள் யாழில் தொடர் மௌனம்!

காமினி கொலைக்கு காரணமான குண்டுவெடிப்பு பற்றி யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பினர் இதுவரை உத்தியோகபூர்வ மறுப்பெதனையும் வெளியிடவில்லை.

புலிகள் அமைப்பினரின் வெளிநாட்டுக் கிளைகளும் இம்முறை மௌனமாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்த பின்னரே சூழ்நிலையைப் பொறுத்தே புலிகளது கருத்து வெளிவரும் என்று தெரிகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் புலிகள் மறுப்பை வெளியிட்டிருந்தால் அது அரசாங்கத்தின் கரத்தை பலப்படுத்த புலிகள் விரும்புவதாக அர்த்தமாகியிருக்கும். ஆனால் புலிகளின் தலைமைப்பீடம் மௌனம் சாதித்துள்ளமை வேதனையளிக்கிறது என்று ஆளும்கட்சி பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும் புலிகள் கருத்து எதனையும் வெளியிடவில்லை.

அயல்நாடொன்றில் நடத்தப்படும் தேர்தல் ஒன்று தொடர்பான கண்ணோட்டம் போலவே யாழ்ப்பாணத்தில் புலிகளது பிரசார சாதனங்கள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

## மட்டக்களப்பில் சுற்றிவளைப்பு!

மட்டக்களப்பில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் புலிகள் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடத்தியிருப்பதையடுத்து படையினர் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பல கிராமங்கள் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் நடத்தப்பட்டன.

கிழக்கில் தற்போதுள்ள நிலைகள் பற்றி தமிழ் கட்சிகள் எதுவும் தெரிவிக்காத போதும், யாழ்ப்பாணத்தில் புலிகள் அரசு மீது குற்றம்சாட்டியுள்ளனர். கிழக்கு வழமைக்கு திரும்பிவிட்டதாக அரசு கூறிவருவதில் உண்மையில்லை என்று புலிகளின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு நிலை குறித்து, பாதுகாப்பு வட்டாரங்கள் கருத்துக் கூறும்போது, "அங்கு சகஜ நிலை நிலவிவருவதை புலிகள் விரும்பவில்லை. அதனால்தான் அமைதியை குலைக்கும் விதமாக அங்கு நடந்து கொள்கிறார்கள்" என்று கூறியுள்ளன.

## பேச்சுவார்த்தை மூலமான தீர்வு! பெரும்பான்மையோர் பெரு விருப்பு!

இனப்பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலமான தீர்வு காணப்படவேண்டும் என்பதையே சிங்கள மக்களில் 65 சதவீதமான மக்கள் விரும்புகின்றனர்.

கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கில வார இதழ் ஒன்று நடத்திய கருத்து கணிப்பின் மூலம் இது தெரிய வந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன முன்னணி பெறும் வாக்குகள் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஆதரவான வாக்குகளாகவே கொள்ளப்பட வேண்டும்.

ஏனெனில், ஐக்கிய தேசியக் கட்சியினர் புலிகளுக்கு எதிரான பிரசாரம் மூலம் பேச்சுவார்த்தையில் பயனில்லை என்றே கூறிவந்தனர்.

இந்நிலையில் சிங்கள மக்கள் அனுதாப அலையையும் மீறி பொதுஜன முன்னணிக்கு அளிக்கும் வாக்குகள் சமாதானத் தீர்வு முயற்சிக்கு ஆதரவானதாகக் கொள்ளப்படலாம்.

## முடிவுக்கு மாறான பிரசாரம்

நுவரெலியா பகுதியில் முக்கியமான கட்சியொன்றின் வெகுஜன பிரதிநிதியும் ஆதரவாளர்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக வாக்குவேட்டையில் ஈடுபட்டதை காணக்கூடியதாக இருந்தது. அவரது கட்சித் தலைமை திருமதி சந்திரிக்காவுக்கு ஆதரவளிக்கவேண்டும் என்று தனது புதிய முடிவை அறிவித்திருந்தது.

வெளிநாட்டில் உள்ள தலைவரும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

# அமைச்சர் அஷ்ரப்பைக் காணவில்லை!

(அரசியல் நிருபர்)

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் பொதுஜன முன்னணி அரசாங்கத்தை உருவாக்கியது முஸ்லிம் காங்கிரஸ் என்று கூறிவருகிறார்.

இதேவேளையில் பொதுஜன முன்னணியில் உள்ள முஸ்லிம் தலைவர்கள் அமைச்சர் அஷ்ரப் கூறிவரும் கருத்துக்களால் அதிருப்தி அடைந்துள்ளதாக தெரிகிறது.

தென்னிலங்கையில் உள்ள முஸ்லிம் தலைமை முஸ்லிம் காங்கிரஸ் தொடர்பான அதிருப்தியை வெளிப்படுத்தி வருவதாகத் தெரிகிறது.

கிழக்கிலும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள முஸ்லிம் பிரமுகர்கள் அதிருப்தியான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இந்த பனிப்போரின் விளைவாகவே கடந்த மாதம் (21.10.94) கம்பஹா மாவட்டத்தில் திஹாரியாவில் நடந்த தேசிய மீலாத் விழாவில் அமைச்சர் அஷ்ரப் காணப்படவில்லை என்று கூறப்படுகிறது.

தேசிய மீலாத் விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட மலரிலும் அமைச்சர் அஷ்ரப்பின் செய்தி எதுவும் இடம்பெறவில்லை.

அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, பிரதி அமைச்சர் எஸ். அலவி மௌலானா ஆகியோரின் வாழ்த்துச் செய்திகள் மட்டுமே மலரில் இடம்பெற்றுள்ளன.

திருமதி சந்திரிக்காவுடன் அமைச்சர் அஷ்ரப் கொண்டிருக்கும் நல்லுறவில் எவ்விதமான மாற்றமும் இல்லை. நம்பிக்கையும் அதிகமாகியுள்ளது என்று முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

## வரவில்லை என்பதால் வாட்டம்

(காரைதீவு நிருபர்)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் அம்பாறை மாவட்ட மாநாடு 6.11.94 இன்று நிந்தவூரில் நடைபெற்றது.

திருமதி சந்திரிக்காவே மாநாட்டுக்கு தலைமை தாங்குவார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் திருமதி சந்திரிக்காவால் மாநாட்டில் கலந்துகொள்ள முடியவில்லை.

அவரை எதிர்பார்த்து வந்திருந்தவர்களும், பிரதமர் நிச்சயம் வருவார் என்று நம்பிக்கையாகக் கூறிய மு.காங்கிரஸ் பிரமுகர்களும் சற்று வாட்டமடைந்து காணப்பட்டனர்.

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

சென்ற பாராளுமன்றத் தேர்தலின் போதும் திருமதி சந்திரிக்காவின் நிந்தவூர் விஜயம் அறிவிக்கப்பட்டபின் ஒத்திவைக்கப்பட்டமை நினைவிருக்கலாம்.

அம்பாறை மாவட்டத்தில் பொதுஜன முன்னணிக்கு ஆதரவாக முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் வாக்கு வேட்டையில் ஈடுபட்டனர். மறுபுறம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பா.உ. சம்சுதீனும் தனது ஆதரவாளர்கள் சகிதம் வாக்குவேட்டையில் குதித்திருந்தார்.

அம்பாறை மாவட்டத்தில் பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் திருமதி சந்திரிக்காவுக்கு ஆதரவான அலை வெளிப்படையாகத் தெரிந்தது.

ஐ.தே.கட்சியினரிடம் அம்பாறை மாவட்டத்தில் வழக்கமான தேர்தல் பிரசார உற்சாகத்தை இம்முறை காணமுயடிவில்லை. ●

## அம்பாறை மாவட்ட ரவுண்டப் செய்திகள்

(அம்பாறை அரசியல் நிருபர்)

### வளருமா? தேயுமா?

கிழக்கிலங்கையில்- குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் ஐ.தே.கட்சியின் வளர்ச்சிக்காகப் பல்லாண்டுகள் அரும்பாடுபட்ட பலர் தற்சமயம் கட்சியின் செயற்பாடுகளிலிருந்தும், அரசியலிலிருந்தும் ஒதுங்கிக்கொண்டவர்கள்போல் காணப்படுகின்றனர். அதிலும் கட்சிக்காக உழைத்த முன்னாள் அமைச்சர் ஜனாப். எம்.ஏ.அப்துல் மஜீத், முன்னாள் பொத்துவில் முதல்வர் ஜனாப் எம்.ஐ.உதுமாலெவ்வை போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இன்று இவர்களெல்லாம் மௌனம் சாதிக்கின்றனர்.

ஐ.தே.க.இனி இங்கு வளருமா? தேயுமா?

### மரத்தை வெட்டும் வாக்குகள்

"ஜனாதிபதித் தேர்தலில் பொ.ஐ.ஐ.மு.வேட்பாளரது சின்னமான கதிரைக்கு நேரே முஸ்லிம்கள் அளிக்கும் வாக்குகள், முஸ்லிம்களின் கட்சியான முஸ்லிம் காங்கிரஸ் எனும் மரத்தை வெட்டி வீழ்த்தும் வாக்குகளாகவே அமையும்." இவ்வாறு நிந்தவூரில் நடைபெற்ற ஐ.தே.கவின் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான திரு.பீ.தயாரத்ன கூறினார்!

### தலைகாட்டாத் தலைவர்

தனித்துவக் கட்சியின் களம் எனக் கருதப்படும் அந்த கானா.. குடியில், கட்சி ஆதரவாளர்கள் பெரும் விரக்தி நிலையிலுள்ளனராம். 'கதிரை'யில் அமர்ந்தபின் களம் பக்கம் தலைவர் தலைகாட்டுவது முயற்கொம்பாகியுள்ளமையே இந்த விரக்தி நிலைக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

### ஹேமா எங்கே?

ஐ.தே.கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்று நிந்தவூரில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு முன்னாள் ஜனாதிபதி அமரர் திரு.பிரேமதாசாவின் பாரியார் திருமதி. ஹேமா பிரேமதாசாவும் வருகை தந்து உரையாற்றுவாரென 'தடபுடல்' விளம்பரம் செய்யப்பட்டது. ஆனால் ஹேமா வரவில்லை. ஹேமாவைக் காணத் திரண்டவர்கள் சலிப்படைந்துகொண்டனர். சனக் கூட்டத்தைச் சேர்க்க இப்படியெல்லாம் தந்திரங்கள்!

### ரத்துச் செய்க!

சம்மாந்துறை கல்விக் கோட்டத்தில் இடம்பெற்றுள்ள அரசியல் பழிவாங்கல் ரீதியானதும், முறைகேடானதுமான ஆசிரிய இடமாற்றங்களை ரத்துச் செய்யுமாறு இலங்கை இஸ்லாமிய ஆசிரிய சங்கக் கல்முனை மாவட்டக்கிளை சார்பில் அதன் செயலாளர் ஜனாப்.ஏ.எல். சாய்வுத்தம்பி பிரதமர், கல்வி அமைச்சர் ஆகியோரை மகஜர் மூலம் கோரியுள்ளார்.

## சமாதான ஊர்வல பஸ்ஸில் திடீர் சோதனை

(ஏறாவூர் நிருபர்)

கொழும்பில் நடைபெற்ற தேசிய சமாதான மாநாட்டு ஊர்வலத்திற்காக மட்டக்களப்பில் இருந்து சென்றுகொண்டிருந்த இரு பஸ்களும் புணானை 'பாம்' முகாமில் திடீரென நிறுத்தப்பட்டு இரு பஸ்களும் இராணுவத்தினரால் சூழ்ந்து கொள்ளப்பட்டு பஸ்ஸில் இருந்தவர்கள் நடந்து செல்லுமாறு கேட்கப்பட்டனர். பயணிகளின் பொதிகள் கீழே கொட்டப்பட்டு கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டன. இந்த இராணுவ முகாமில் வழக்கமாக சோதனை இடம்பெறுவதில்லை. இத் திடீர் சோதனைக்கான காரணம் பற்றி கூறப்படுவதாவது: புணானை புகையிரத நிலைய முகாமில் இருந்த இராணுவத்தினர் கொழும்புக்குச் செல்ல அந்த பஸ்ஸில் இடம் கேட்டனர். பஸ்ஸில் இருந்த வண.பிதாக்கள் பஸ்ஸில் இருக்க ஆசனம் இல்லையென்று கூறியதே காரணமாக இருக்கலாம் என்பதை மறுப்பதற்கில்லை.

## மன்னார் தீவுச் செய்திகள்

(மன்னார் நிருபர்)

### விவசாய நடவடிக்கை

மன்னார்த் தீவுப் பகுதியைச் சேர்ந்த கரிசல், புதுக்குடியிருப்பு, தாராபுரம் உட்பட இன்னும் சில பகுதிகளில் விவசாய நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. வெங்காயம், மரவள்ளி, மிளகாய், வெற்றிலை ஆகியவற்றுடன் இன்னும் ஏராளமான மரக்கறி பயிர்கள் செய்கை பண்ணப்படுகின்றன.

### பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு

மன்னார்ப் பகுதியில் பல பொருட்களுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கற்பிட்டியிலிருந்து சீரான முறையில் உணவுப் பொருட்கள் வந்து சேராமையே இதற்கான காரணமாகும்.

### தற்போதைய விலை விபரம்

மன்னார்ப் பகுதியில் தற்போது பொருட்கள் விற்கும் விலைகள் வருமாறு: தேங்காய் 18/=, மண் எண்ணெய்- 18/=, மரக்கறி வகைகள் ரூ 50 இற்கு மேல், விளாம்பழம்- ரூ5,வாழைப்பழம் ரூ.3 இலிருந்து ரூ.8 வரை. நாள் கூலி 200/=.

### மேட்டுநிலப் பயிர்ச் செய்கை

15000 கிராமிய கருத்திட்டத்தின் கீழ் தாராபுரம் கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மேட்டு நிலப் பயிர்ச் செய்கை திட்டத்தின் கீழ் இம்முறையும் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த இரு போகங்களிலும் இத்திட்டத்தில் அமோக விளைச்சல் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

### பஸ் சேவை வேண்டும்

தற்போது மன்னாரிலிருந்து எருக்கலம்பிட்டிக்கு செல்லும் பஸ் இரு தடவைகள் தாராபுரத்திற்கு வந்து செல்கின்றன. எனினும் இது இங்குள்ள பயணிகளுக்கு போதாது. எனவே மன்னாரிலிருந்து தாழ்வுபாடு ஊடாக மேலதிகமாக இரு சேவைகளை தாராபுரத்திற்கு நடத்துமாறு இப்பகுதி மக்கள் கோருகின்றனர்.

### தபால் சேவை

மன்னாருக்கான தபால் சேவை கப்பல் சேவையை பொறுத்து நடைபெறுகின்றது. ஓ.எம்.எஸ்.கப்பல் மூலமாகவே தபால் பொதிகள் கொண்டுவரப்பட்டு விநியோகங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## "முறைகேடான தெரிவு"

(திருமலை நிருபர்)

திருகோணமலை மாவட்ட ஆஸ்பத்திரிகளில் சிங்களச் சிற்றூழியர் குவிப்பு இடம்பெற்றுள்ளது. பிராந்திய சுகாதார சேவைகள் அத்தியட்சகரின் இந்நடவடிக்கை பொது மக்கள் மத்தியில் அதிருப்தி நிலையைத் தோற்றுவித்துள்ளது.

1992 டிசம்பரில் கோரப்பட்ட விண்ணப்பங்களை அடிப்படையாகக் கொண்ட இத் தெரிவு இடம்பெறுவது முறைகேடானது என சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இன விகிதாசாரத்தைப் பற்றியோ பாதிக்கப்பட்டோருக்கு முன்னுரிமை கொடுக்கும் அரசின் கொள்கை பற்றியோ அக்கறைப்படாமல் மனம் போன போக்கில் நியமனம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவ்வுத்தியோகத்தர் மேலும் தெரிவித்தார்.

நகரின் தள வைத்தியசாலையில் ஏற்பட்ட சிங்கள ஊழியர் குவிப்புக்கு திருகோணமலை மாவட்டப் பா.உ..அ.தங்கத்துரை ஆட்சேபனை தெரிவித்ததைத் தொடர்ந்து கண்துடைப்புக்காக 52 பதில் ஊழியர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். எனினும் ஏற்கனவே தெரிவு செய்யபடும் 50 ஊழியர்களுக்கும் தினமும் வேலை கொடுக்கப்படுகின்ற அதே வேளையில் ஏனையோருக்கு மாதத்தில் ஒன்றிரண்டு நாட்கள் மட்டுமே வேலை கொடுக்க ஏற்பாடாகியுள்ளது.

இத்தனைக்கும் இந்நியமனங்கள் பற்றி மாகாண சுகாதார அமைச்சுக்கு எதுவுமே தெரியாதாம்.

## திருமலையில் மின்சாரம் கிடைக்க உதவி

நீண்ட காலமாக மின்சாரம் இன்றி இருள் சூழ்ந்திருந்த திருகோணமலை புதுக்குடியிருப்புப் பகுதி மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் (ஈ.பி.டி.பி) தமது கட்சி நிதியிலிருந்து அறுபதினாயிரம் ரூபா செலவு செய்து அப்பகுதிக்கு மின்சாரம் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

இப்பகுதிக்கு மின்சாரம் விநியோக ஆரம்ப விழா 17.10.94 அன்று மிக எளிமையாக புதுக்குடியிருப்புக் குடியிருப்பாளர் சங்கத் தலைவர் திரு.மாணிக்கராசா தலைமையில், யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திரு.மு.சந்திரகுமார் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மின்சார விநியோகத்தை ஆரம்பித்து வைத்த திருகோணமலைப் பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் திரு.வேலும் மயில் அவர்கள், இருள் சூழ்ந்திருந்த பகுதிக்கு ஒளியேற்றி வைத்திருக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரை (ஈ.பி.டி.பி) வாழ்த்தி, இதே போல் எம் மக்கள் வாழ்விலும் ஒளிமயமான எதிர்காலம் உருவாக வேண்டும் என்றும் கூறி தனது உரையைச் சுருக்கமாக முடித்துக்கொண்டார்.

இவ்விழாவில் திருகோணமலைப் பிராந்திய மின்சார சபை உதவி பொறியியலாளர் திரு.நடராஜ் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## கனடாவின் உதவிக்கரம் தேடி வந்து உதவியது

(ஏறாவூர் நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் உதவிப் பணி புரியும் கனடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெறுமதியான சேவைகளை ஆற்றிவருவதால் மக்கள் உயரிய பலனை அடைந்துள்ளார்கள். பல நூற்றுக்கணக்கானோர் தொழில் வருமானம் பெறும் சுயதொழிலுக்கு உதவிகளையும் பெற்றுள்ளார்கள். கமக்காரர் தொடக்கம் கம்பியூட்டர்காரராக அந்நிறுவன தொழிற்பயிற்சி பெற்றோர் ஏராளம். தட்டச்சு, சாரதி, கடைச்சல், தச்சன், மேசன், குழாய் பொருத்துநர், நெசவு, கால்நடை, கமம், சிறுகைத்தொழில், வியாபாரம், மீன்பிடி, கல்வாடி, வாகனம் இயந்திரம் பழுதுபார்த்தல், உணவு பதனிடல், புலமைப் பரிசில், கம்பியூட்டர் என்று 50ற்கு மேற்பட்ட தொழிற்திட்டங்களுக்கு அந்நிறுவனம் உதவியுள்ளதோடு கிழக்கு மாகாணத்தில் தமிழ்-முஸ்லிம் நல்லுறவை வளர்ப்பதிலும் அந்நிறுவனம் கண்ணாயுள்ளது.

## மட்டக்களப்பில் சீமேந்து தட்டுப்பாடு

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் நிலவும் சீமேந்துத் தட்டுப்பாட்டை நீக்கி உதவும்படி மாநகர சபை எல்லைக்குள் உள்ள ஆறு சீமேந்து விநியோக முகவர்களையும் மட்டக்களப்பு மாநகர முதல்வர் செழியன் ஜே.பேரின்பநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார். மட்டக்களப்பு நகரப்பகுதியில் புதிய கட்டிடங்களை அமைப்போர் தொகை அதிகரித்து உள்ளது. இதனைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது இங்கு தருவிக்கப்படும் சீமேந்து போதுமானதாக இல்லை. பதுக்கல், கள்ளச்சந்தை வியாபாரம், விலை அதிகரித்து விற்றல் போன்ற குறைபாடுகள் சீமேந்து விநியோகத்தில் நிலவுவதாகவும் மாநகரப் பகுதி மக்கள் முதல்வரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

## லயன்ஸ் மகளிர் முயற்சி

மட்டக்களப்பில் மரமுந்திரிச் செய்கையை ஊக்குவிப்பதற்கும் வன்செயலால் பாதிக்கப்பட்ட கிராம மக்களின் வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கும் மட்டக்களப்பு, லயன்ஸ் மகளிர் கழகம் லியோ கழகத்துடன் இணைந்து முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மூவாயிரம் கன்றுகள்-புதூர், சேத்துக்குடா, திமிலைதீவு, கல்லடி, முகத்துவாரம், நாவற்குடா, மஞ்சந்தொடுவாய், இருதயபுரம் கிராமங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுமென மட்டக்களப்பு லயன்ஸ் மகளிர் கழகத்தின் தலைவி திருமதி. கலா மகேந்திரராஜா தெரிவித்தார்.

—தேனீ—


## விளம்பரப் பகுதி



### மலையாள மாந்திரீகம்

27 வருடங்களாக மலையாள மாந்திரீக துறையில் நுணுக்கமாக நான் கற்றறிந்த வகையில் இக்காலங்களில் அவ்வப்போது அவரவர் குறைகளுக்கு என்ன பரிகாரம் என அச்சொட்டாக அவ்வேளைகளிலே மலையாள பகவதி வெளிச்ச வீடாக எனக்கு காட்டிக் கொடுக்கின்றது.

இதையொட்டியே வளர்ந்த எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாறியது. அத்துடன் நவீன உலகத்துக்கு தகுந்தவாறு என்னிடம் மாந்திரீகம், ஜோதிடம், கைரேகை இவைகளுக்கான அதி அற்புத கம்பியூட்டர் உண்டு. உங்கள் குறை என்ன? காதல் தோல்வியா? கல்யாணம் நடக்கவில்லையா? நினைத்தது நினைத்தவாறு நடக்கவேண்டுமா? காதலுக்காக சாவா? வாழ்வா என நினைப்பதை விட்டு என்னை சந்திக்கலாமே.

இவ்வாண்டு மாந்திரீக சக்தியின் வெற்றி பெற்ற ஜபிதா இதோ?

இவ்வாண்டு மலையாள மாந்திரீக காந்த சக்தியும் வெற்றியும்:

- நிறைவேறாத காதல் வசியம்- 100/97
- கடல் கடந்து செயல் புரியும் காதல் வசியம்- 100/97
- கணவன் மனைவி பிணக்கு- 100/45
- பெற்றோர் விரும்பாத காதல்-100/87
- குத்தகை குடியிருப்போர் பிரச்சனை-100/33
- தீரா ஆஸ்துமா நோய்- 100/100
- திருமணத் தங்குதடை நிவர்த்தி-100/97
- குடிபோதை நிவர்த்தி- 100/97
- கல்வி ஞான விருத்தி- 100/72
- சகல வியாபார விருத்தி- 100/83
- மீன்பிடி, பண்ணை, ஆடு,மாடு,கோழி வளர்ப்பு- 100/27
- புத்திர பாக்கியம்-100/33
- பிசாசு தோஷம், சூனிய நிவர்த்தி-100/97

கொழும்பில் மாதந்தோறும் மாதக் கடைசியில் 30,31 திகதிகளில் தான தர்மமும் துர்க்கை உச்சாட பூசை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும். அன்று நிச்சயம் உண்மை அறியலாம்.

**தலைமைப்பீடம்**
P.K.சாமி JDGAN
(மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: 052-2508, 052-3093

**கொழும்பு இல்லம்-**
இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: 342463, 342464



### நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு | ரூபா 440/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் | ரூபா 225/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் | ரூபா 115/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.



### ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
*187, செட்டியார் தெரு,*
*கொழும்பு 11,*
*போன்: 421398*


## புகார் பெட்டி

## தரத்திலும் நிறையிலும் குறைவான பாண்!

கல்முனையிலும் கல்முனைக் குடியிலும் உள்ள பேக்கரி சொந்தக்காரர்கள் சிலர் பாணின் விலை குறைக்கப்பட்டுள்ளதால் அதன் நிறையையும் தரத்தையும் குறைத்துள்ளனர்.

அரசு அடிக்கடி வெகுஜன தொடர்பு சாதனங்கள்மூலம் 450 கிறாம் பாணின் விலை 3 ரூபா 50 சதம் என்று அறிவித்த போதிலும் அதனைக் கவனத்தில் கொள்ளாது தரக் குறைவான பாணை உற்பத்தி செய்து அதன் நிறையிலும் மோசடி செய்துவருகின்றனர்.

இங்கு விற்கப்படும் பாண்கள் முறையே 300,350 கிறாம் நிறைகளையே கொண்டுள்ளதோடு சில பேக்கரி சொந்தக்காரர்கள் நிறையையும் குறைத்து விலையையும் 4 ரூபாவாக அதிகரித்துள்ளனர்.

தரக் குறைவான பாண்களை உண்பதால் ஒருவகை மயக்க நிலையை அடைவதோடு வாந்தியும், வயிற்றோட்டமும் உண்டாகிறது.

மாரடைப்பு உள்ளவர்கள் டாக்டரின் ஆலோசனைப்படி இராப்போசனமாக பாணை உட்கொள்வோரும் உள்ளனர்.

இவர்களுக்கு இன்னும் பல நோய்கள் இத் தரக் குறைவான பாணை உண்பதால் ஏற்படுகின்றன.

எனவே இத்தோடு அனுமதிபெற்ற அதிகாரிகள் இப்பகுதியில் அடிக்கடி சோதனையிட்டு சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும்.

எம்.சி.கலீல்–கல்முனை.

## வாய்க்கால் வெட்டுவதற்கு நடவ்டிக்கை எடுக்கப்படுமா?

புத்தளம்-கொழும்பு பிரதான பாதையின் இரு மருங்கிலும் நீர் ஓடுவதற்கு வாய்க்கால் இல்லாமையால் அண்மையில் பெய்த மழையின் நீர் தேங்கி துர்நாற்றம் வீசுகிறது. இப்பாதையால் பயணிகளுக்கு பயணம் செய்ய முடியாத நிலை.

ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் வாய்க்கால் வெட்டுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவும். புத்தளம் நிருபர்

## எதிர்பார்ப்பு

கண்டி மாவட்டத்திலுள்ள திகனை, கும்புக்கந்துறை, அம்பகஹலந்த கிராமங்களில் குடிநீர் பிரச்சினை தொன்று தொட்டு இருந்து வருகிறது. எவ்வளவோ முயன்றும் எவ்வித ஏற்பாடுகளும் இதுவரை ஏற்பட்டதில்லை. ஒரு சில கிணறுகளின் மூலமாகவே முழுக் கிராமமும் குடிநீர் பெறவேண்டிய துர்ப்பாக்கியநிலை. கோடை காலங்களில் இக்கிராம வாசிகள் படும்பாடு வார்த்தைகளில் அடங்காது. ஆகவே புதிய அரசாங்கமாவது இப்பிரச்சினையை தீர்த்து வைக்கும் என்பதே கிராமவாசிகளின் ஏகோபித்த எதிர்பார்ப்பாகும். ஏ.எச்.எம்.மௌஜுத்-ஹிஜ்ராபுரம்.

## எம்.ரி.வி. கவனிக்குமா?

பிரதி ஞாயிறு தோறும் எம்.ரி.வி. தொலைக்காட்சியில் மகாபாரதம் தொடர் ஒளிபரப்பாகி வருவது யாவரும் அறிந்ததே. ஆரம்பத்தில் இத் தொடர் ஒளிபரப்பானபோது சிங்கள மொழியில் மாத்திரம் மொழி பெயர்த்து போட்டார்கள். 'தமிழ் வடிவில் தினமுரசில் இராஜகுமாரன் தந்தமையினால் நாங்கள் கதையினை விளங்கிக்கொண்டோம்.

தற்போது இம் மகாபாரத தொடரில் கேள்வி பதிலும் கேட்கப்படுகிறது. ஆனால் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் மாத்திரமே கேட்கப்படுகிறது. தமிழர்களாகிய எங்களை புறக்கணிப்பது ஏன்? தயவு செய்து இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் தக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழ் இரசிகர்கள் சார்பில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

செல்வி.நிர்மலா முருகையா
பண்டாரவளை.



விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்குங்கள்.

விளம்பர மேலாளர்
இல.5, காவிந்த பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-06.

Phone 852041

Advertising Manager
No.5, Kavinda Place,
Kirulapone
Colombo-06.





# வாரிசு என்ற அறிமுகம் மட்டுமே வாக்குகளை குவிக்க போதுமானதாக இருக்காது!



# சந்திரிக்கா + சிறிமா காமினி மோதல்

## தெரிவும்- தவறும்!

### எக்ஸ்ரே ரிப்போர்ட்

**நாரதர்**

ஐ.தே.கட்சியின் தேர்தல் வியூகத்தில் மாபெரும் தவறு திருமதி சிறிமா காமினி ஜனாதிபதி வேட்பாளராக்கப்பட்டதுதான்.

திருமதி சிறிமா காமினிக்கு ஜனாதிபதி வேட்பாளராவதற்குரிய தகுதி இருக்கிறதா இல்லையா என்பதல்ல பிரச்சனை.

தனிப்பட்ட ரீதியிலும் பெரிதொரு இழப்பை சந்தித்த நிலையிலும் உடலியல், உளவியல் ரீதியில் ஒரு பலப்பரீட்சைக்கு அவர் தயாராக இருந்திருக்க முடியாது.

உடனே தேறக்கூடிய சோகமல்ல அது.

கணவரின் உடல் சிதைக்கு செல்ல முன்னரே அவரை வேட்பாளராக அறிவித்தார்கள்.

இழப்பின் துயர் சூழ்ந்த கட்டத்தில் இருந்து அவர் மீண்டுவரக்கூட சந்தர்ப்பமே வழங்கப்படாமல் ஜனாதிபதி வேட்பாளர் என்ற சுமையைத் தூக்கி தோளில் வைத்துவிட்டார்கள்.

திணிக்கப்பட்ட சுமையோடும், தயாரித்துக்கொடுக்கப்பட்ட உரையோடும் அவர் தொலைக்காட்சியில் தோன்றிய போது கூடவே சோகத்தின் நிழலும் தெரிந்தது.

வெள்ளைச் சேலையும், தணிந்த குரலும் அனுதாபத்தை ஏற்படுத்தியது உண்மைதான்.

அதனைத்தான் அவரை வேட்பாளராக நிறுத்தியவர்களும் எதிர்பார்த்தனர்.

ஆனால் அனுதாபம் அவருக்கு ஏற்பட்ட இழப்புக்காகவே தவிர அவரது தலைமைத்துவத்திற்கு கிடைத்த அங்கீகாரமாக இருக்கவில்லை.

திருமதி காமினியை வேட்பாளராக நியமித்திருக்காவிட்டாலும்கூட அனுதாப அலை மூலமான வாக்குகள் கிடைத்தேதான் இருந்திருக்கும்.

உளவியல் ரீதியில் தேர்தல்கள மோதலுக்கு தயாராக இருந்திருக்கக்கூடிய ரணில் போன்றவர்கள் வேட்பாளராக நியமிக்கப்பட்டிருந்தால் அனுதாப அலையை இன்னும் சற்று வேகமாக பொதுஜன முன்னணிக்கு எதிராக திருப்பியிருக்கலாம்.

ஐ.தே.கட்சி ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் கீழ் மாலுமி இல்லாத கப்பலாயிற்று.

காமினி மறைந்தவுடன் ஜனாதிபதி வேட்பாளரை தீர்மானிக்க கொஞ்சம் ஆர்ப்பாட்டக்காரர்களும் அவர்களை தயார் செய்தனுப்பிய சில புத்திசாலிகளும் போதுமானதாய் இருந்தார்கள்.

ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவில் ஏற்பட்ட தவறுக்கு சில முன்னுதாரணங்களை மோசமாக பின்பற்ற முயன்றமையும் காரணம் எனலாம்.

அமரர் பண்டாரநாயக்காவுக்கும் பின்னர் சிறிமாவோ பண்டாரநாயக்கா.

சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பின்னர் அவரது மக்கள் திருமதி சந்திரிக்கா.

லலித் மறைவுக்குப் பின் திருமதி சிறிமாணி.

இந்தியாவில் நேரு குடும்பத்தினர்.

தமிழ் நாட்டில் எம்.ஜி.ஆர். மனைவி ஜானகி.

எம்.ஜி.ஆர் விசுவாசிகளால் அண்ணி என்று அங்கீகரித்து அழைக்கப்பட்ட ஜெயலலிதா.

மன்னராட்சியில் மட்டுமல்ல, மக்களாட்சியிலும் வாரிசுகளுக்கு மதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

இந்தியாவில்கூட திருமதி சோனியா காந்தியை அரசியலுக்கு வருமாறு இழுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய இந்திய பிரதமரைவிட சோனியாவால் வாக்குகளை அமோகமாக அறுவடை செய்ய முடியும் என்று காங்கிரஸ் கட்சிக்காரர்களே நம்புகிறார்கள்.

இதனையெல்லாம் முன்னுதாரணமாகக் கொண்டால் திருமதி காமினி வாரிசாக வந்தது நியாயம் என்று வாதிடலாம்.

ஆனால், விசயம் என்னவென்றால் தொப்பி அளவாக இருந்தால் போட்டுக் கொள்ளலாம் என்பது மாதிரி, வசதியாக இருக்கும் உதாரணங்களை வாதத்திற்காக தூக்கிக்கொள்கிறார்கள்.

அமரர் எம்.ஜி.ஆரின் துணைவியார் ஜானகி அம்மாளை முதலமைச்சராக்கினார்கள்.

ஆனால், சட்டசபைத் தேர்தல் வந்த போது ஜானகி அம்மாள் பரிதாபகரமாகத் தோற்றுப்போனார்.

பிரபலமான இரட்டை சிலை சின்னம் இருந்தும்கூட அவரால் தான் போட்டியிட்ட தொகுதியில்கூட வெற்றிபெற முடியவில்லை.

ஆனால், அந்தத் தேர்தலில் ஆட்சியைப் பிடிக்க முடியாவிட்டாலும்கூட ஜெயலலிதா வெற்றி பெற்றார். எதிர்க்கட்சி தலைவியுமானார்.

ஜானகி அம்மாளை எம்.ஜி.ஆர். விசுவாசிகள் வெறுத்துவிட்டார்கள் என்பது அதன் அர்த்தமல்ல.

ஜானகிமீது அனுதாபப்பட்டார்கள்.

ஆனால் ஜெயலலிதாவுடன் ஒப்பிடும் போது ஜானகியை தலைவியாக அங்கீ கரிக்கமறுத்துவிட்டார்கள்.

அங்கே ஜானகியின் பலவீனம் ஆளுமை இன்மை.

ஆளுமை என்னும்போது அதற்குள் தன்னை நோக்கி ஈர்க்கும் கவருதல் தோற்றமும் அடக்கம்.

ஒருவேளை ஜானகிக்கு போட்டியாக ஜெயலலிதா களத்தில் இருந்திருக்காவிட்டால் ஜானகி வெற்றி பெற்றிருக்கக்கூடும்.

களத்தின் நிலையைப் பொறுத்தே மோதலின் வியூகம் வகுக்கப்படவேண்டும்.

இந்திரா காந்தி மறைந்த பின்னரும் அனுதாப அலை ஏற்பட்டது.

அமரர் ராஜீவ் காந்தி பிரதமரானபோது சிறு பையன் என்றெல்லாம் கேலி செய்தார்கள்.

எனினும் ராஜீவின் ஆளுமையும் பிரதமராக பொறுப்பை ஏற்ற பின்னர் அவர் காட்டிய வேகமும், மக்களிடம் செல்வாக்கை ஏற்படுத்தின.

அடுத்து வந்த தேர்தலில் ராஜீவ் தனது தலைமையில் மாபெரும் வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார்.

ஆனால் ராஜீவ் மறைந்தபோதும் அனுதாப அலை ஏற்படவே செய்தது.

ஆனால் காங்கிரஸ் கட்சியால் அனுதாப அலையை சாதகமான வாக்குகளாக்கக் கூடிய தலைமையை மக்கள் முன்னர் நிறுத்த முடியாமல் போய்விட்டது.

தற்போதைய இந்திய பிரதமர் நரசிம்ம ராவ் திறமைசாலி. சிறந்த நிர்வாகி.

ஆனாலும் அந்த நேரத்தில் ஈர்ப்புச் சக்தியுள்ள தலைவராக அவர் இருக்கவில்லை.

எனவே, அனுதாப அலையை வைத்து தனிப் பெரும்பான்மை பலத்தை அறுவடை செய்ய அவரால் முடியவில்லை.

பிரேமதாசா கொல்லப்பட்டபோதும் அனுதாப அலை ஏற்படவே செய்தது.

திரு.டி.பி.விஜேதுங்காவால் அந்த அலையை மாபெரும் வெற்றிக் குரியதாக கொண்டு செலுத்த முடியவில்லை.

எனவே, மேற்கண்ட அனுபவங்கள் மூலமாக அறியப்படும் உண்மை என்னவென்றால் அனுதாப அலை மட்டுமே வெற்றிபெறப் போதுமானதல்ல.

அது மட்டுமல்ல, வாரிசுகள் என்ற அறிமுகம் மட்டுமே வாக்குகளைக் குவிக்க போதுமானதல்ல.

அமரர் பண்டாரநாயக்காவுக்கு திருமதி சந்திரிக்காவும், திரு.அநுராவும் பிள்ளைகள்தான்.

ஆனால், திரு.அநுராவால் சுதந்திரக் கட்சிக்குள் இருந்தபோது அந்தக் கட்சியின் உறுப்பினர்களைக்கூட தன் பக்கம் கவர முடியவில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கோ, பொது ஜன முன்னணிக்கோ திரு.அநுரா தலைவராக இருந்திருந்தால் திருமதி சந்திரிக்கா இன்று தனக்கென்று ஏற்படுத்தியுள்ள செல்வாக்கைப் போல் அநுராவால் ஏற்படுத்தியிருக்க முடியாது.

பிரேமதாசா, அத்துலத் முதலி, காமினி திசாநாயக்கா போன்றோர் எல்லாம் ஓரணியில் நின்று, ஐ.தே.கட்சி விரிசல் இன்றி இருந்திருந்தால் அதன் எதிரணிகள் பாடு கஷ்டமானதாக இருந்திருக்கும்.

அவ்வாறான ஒரு பலமான அணியை எதிர்கொள்ள பண்டாரநாயக்காவின் மகன் என்ற தகுதி மட்டும் போதுமானதாக இருந்திருக்காது.

ஆக காலம், இடம், சூழல், மற்றும் ஆளுமை என்பவற்றை பொறுத்தே வாரிசுகளாக இருந்தாலும் அவர்கள் வெற்றி பெறக்கூடியதாக இருக்கும்.

தமது ஜனாதிபதி வேட்பாளர் தெரிவில் ஐ.தே.கட்சி முன்னுதாரணங்களை மிக மோசமான முறையில் பின்பற்றியிருக்கிறது.

முடிவு ஐ.தே.கட்சிக்குப் பாடமாக இருக்கப் போகிறது.

□□

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்-முஸ்லிம் கட்சிகள் அநேகமானவை திருமதி சந்திரிக்காவையே ஆதரித்துள்ளன.

இதே கட்சிகளில் சில சென்ற பாராளுமன்றத் தேர்தலில் இரு சிங்களக் கட்சிகளுமே பேரினவாதக் கட்சிகள் என்று கூறியதையும் நினைத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது.

சில கட்சிகள் விடுத்த ஆதரவு அறிக்கைகளில் திருமதி சந்திரிக்காவை பற்றிய புகழ் புராணங்களே அதிகம்.

இத்தனைக்கும் தமிழ் கட்சிகளது அடிப்படைக் கோரிக்கையான வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றி பொதுஜன முன்னணி தெளிவாக எதனையும் கூறவில்லை.

ஆனால், "நிபந்தனையில்லாத ஆதரவை தருகிறோம்" என்ற வார்த்தையோடு அறிக்கை விடுவதில் சில தமிழ் கட்சிகளிடையே கடும் போட்டி.

கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது வாதாடவும், போராடவும் கூடியவர்களான தங்களையே பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி கூறியது.

ஆனால், பாராளுமன்றத்தில் அரசாங்கத் தரப்பினரின் முகச் சுளிப்புக்கு காரணமாகிவிடக்கூடாது என்பதிலேயே தமிழர் விடுதலைக் கூட்டணியும் கவனமாக இருக்கிறது.

அவசரகால சட்டத்தை எதிர்த்துப் பேசிவிட்டு அந்தச் சட்டம் ஏகமனதாக நிறைவேறவும் அமைதியாக ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு.ஜோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பு கூட்டமொன்றில் உரையாற்றும் போது, "புலிகளோடு பேச்சுவார்த்தை, இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு என்பவற்றின் அடிப்படையில்தான் அரசாங்கத்தை ஆதரிக்கிறோம்" என்று கூறியிருந்தார்.

அவற்றில் அரசாங்கம் உறுதியாக இல்லாது போனால் தமது ஆதரவை விலக்கிக்கொள்ளுவோம் என்றும் தெரிவித்திருந்தார்.

ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் நிபந்தனையற்ற ஆதரவு என்று கூட்டணி விடுத்த அறிக்கையால் அவரது கொள்கை உறுதிப் பேச்சு அடிபட்டுப் போயிருக்கிறது.

தமிழ் கட்சிகளுக்கிடையே நிலவிவரும் போட்டி காரணமாக அவற்றால் ஒன்றுபட்டு நின்று அரசாங்கத்தோடு பேச முடியவில்லை.

இனப்பிரச்சனைக்கு தீர்வை முன்வையுங்கள் என்று கேட்கவோ வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்புப் பற்றிய நிலைப்பாட்டை அறியவோ அவற்றால் முடியவில்லை.

சென்ற பாராளுமன்ற தேர்தலில் அரசாங்கத்தோடு நிற்கும் கட்சிகளை தீண்டத்தகாத கட்சிகள் என்று கூறிய ஈ.பி.ஆர்.எல்.எஃப். நிலையோ மிகவும் பரிதாபம்.

நிபந்தனை விதிக்க அவர்களிடம் எதுவுமேயிருக்கவில்லை.

அரசாங்கத்தின் தயவில் இப்போது பாராளுமன்ற உறுப்பினர்களது தங்குவிடுதியில்தான் ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த இலட்சணத்தில் நிபந்தனையில்லாத ஆதரவு என்று அவர்கள் அறிக்கை விட்டதுதான் வேடிக்கை.

சென்ற பாராளுமன்ற தேர்தலிலும், அதற்கு முன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சியை கிழி கிழியென்று கிழித்தது ரெலோ.

'மரம் செடி கொடிப் பேச்சுக்கு பதிலடி கொடுப்போம்' என்று மூச்சு விடாமல் பேசினார்கள்.

இப்போது தாம் படருவதற்கு மரம் தேவையென்று நினைத்தார்களோ தெரியவில்லை, ஐ.தே.கட்சியை ஆதரித்து மூச்சுவிடாமல் முழங்குகிறார்கள்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தம்மை புலிகளது அனுதாபிகளாக காட்டிக்கொண்டது ரெலோ.

இப்போது ரெலோ உறுப்பினர்களை புலிகள் சுட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)



**த**னித்துவத் தலைவருக்கு உடனடியாக பதவி கொடுக்கும் முடிவு தலைவியால் செய்யப்பட்டதாம். அதிகார அணி வட்டாரத்தில் பலரே தொலைக்காட்சி மூலம்தான் செய்தியை அறிந்து கொண்டார்கள் எண்டுதான் தகவல்.

**ரெ**ண்டு எழுத்தாரோடு பேச்சு விவகாரங்களை அயலகம் உன்னிப்பாய்த்தான் கவனிச்சுக் கொண்டிருக்குதாம். பலியானவர் அயலகத்தின் நெருக்கமான நண்பராம். அதனால் அயலகத்திற்கும் வேதனைதானாம்.

**ம**றைந்தவரின் இறுதிச் சடங்கில் பங்குகொள்ள, மறைந்த அயலக முன்னாள் பிரதமரின் துணைவியார் வரவிரும்பினாராம். பாதுகாப்பு ஆலோசகர்கள் இப்ப போறது நல்லாயிருக்காது எண்டு சொன்னதாலை அவர் வரேல்லையாம்.

**கி**ழக்கின் தனித்துவக் கட்சியின் தேர்தல் விளம்பர வாசகங்கள் கொழும்பில் முன்னணி வட்டாரங்களில் சந்தோசத்தைக் கொடுக்கேல்லையாம். இந்த வெற்றியிலும் பங்கு கேட்கலாம் எண்டு நினைக்கிறார்களாக்கும் எண்டு முணுமுணுக்கிறதாய் கேள்வி. எல்லாம் ஒரு போட்டிதான்.

**வ**டக்கு-கிழக்குக்கு தமிழர் ஒருவரை ஆளுநராக நியமிக்கத்தான் பிரதம இடத்தில் விருப்பம் தெரிவிக்கப்பட்டதாம். பெரியவர் மறுத்து தலையாட்டிவிட்டாராம். இனிச் செய்யலாம்தானே? பெரியவருக்கு 'குட்பை' சொல்லிப்போட்டு செய்ய வேண்டியதுதானே?

## அதிரடி அய்யாத்துரை

**யா**ழ்ப்பாணத்திற்கு போன பத்திரிகையாளர்கள் வீதிகளில் நிண்ட சனத்தோடை கதைக்கேக்கை ரெண்டு எழுத்தார் வீடியோவாலை அதைப் படம் எடுத்தவையாம். சில பத்திரிகையாளர்கள் ஆட்சேபித்தும் பயனில்லையாம். எவை என்ன கதைக்கினம் எண்டு கவனிச்சுக் கொள்ளத்தான் வீடியோ படப்பிடிப்பாம். படம் எடுத்ததைப் பார்த்த சனம் வாய் திறந்திருக்குமோ? யோசித்துப் பாருங்கோ. நான் சொல்ல விரும்பேல்லை.

**அ**து யாழில் உள்ள பழமையான பெரிய விடுதி. அதன் உரிமையாளரிடம் சில கோடிகள் கேட்டிருக்கினமாம் ரெண்டு எழுத்தார். வியாபாரமே இல்லை. எப்படிக் கொடுக்கிறது எண்டு காதும் காதும் வைச்சமாதிரிச் சொல்லி கவலைப்பட்டாராம்.

**கொ**ழும்பிலை குண்டு வெடிச்சது எண்ட செய்தியைக் கேட்டவுடனை யாழ்ப்பாணத்திலை நிண்ட கொழும்பு பத்திரிகையாளர் சிலருக்கு உதறல். முக்கியமான யாராவது கொழும்பிலை மாட்டினால் அங்கை தங்களை பணயம் வைச்சுக்கொண்டு 'அவரை விடுதலை செய்' எண்டு சொன்னா என்ன செய்யிறது? அதுதான் உதறல். உங்களுக்கு சிரிப்பாய் இருக்கும். அங்கை போய் நிண்டு யோசிச்சாத்தான் உங்களுக்கும் வயித்தைக் கலக்கும்.

**ப**ச்சை அணி இளம் தலைவர் எதிர்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் எண்ட நம்பிக்கையிலை இருக்கிறாராம். பார்த்துக் கொள்ளலாம் எண்டு நினைச்சு எல்லாராலையும் தள்ளுப்பட்டு நிண்டு பார்க்கிறதே அவர் ராசியாப் போச்சு.

**ம**றைந்த தலைவரின் இறுதிச் சடங்கு சன வெள்ளத்திலை நடந்தது உண்மைதான் பாருங்கோ. ஈ.டி.வி.யிலை கொழும்பு சனம் பார்த்திருக்கும். யாழ்ப்பாணத்திலை ஈழநாதம் பத்திரிகையிலை செய்தி என்ன தெரியுமோ? "சொற்ப அளவான மக்களே கலந்து கொண்டனர்." யாழ்ப்பாணத்திலை அனுதாபம் வரக்கூடாது எண்டதிலை அத்தனை கவனம்.

**வ**ன்னியில் உள்ள முக்கிய தமிழ் கட்சிதான் சந்திரமானவரின் பிரசாரக் கூட்டத்திற்கு முன்வரிசையில் நிண்டு எல்லாத்தையும் கவனிச்சதாம். வடக்கு-கிழக்கு முன்னாள் அதிகாரக் கட்சி அங்கை இங்கை முகத்தைக் காட்ட முயற்சி செய்தும் ஏலாமல் போச்சுதாம். அதுமாதிரி யாழிலும் அங்கை உள்ள முக்கிய கட்சி மட்டுமே பிரசாரத்தைக் கவனிச்சதாம்.

**க**டைசியாக ஒரு சமீபகால ஜோக். "ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால்" என்றார் நண்பர். பிற்போக்குத்தனமாய் பேசாதையும் எண்டு செல்ல, அவர் சிரிச்சுப்போட்டு, "நான் தவறான அர்த்தத்திலை சொல்லேல்லை. "ஆள்வதும் ஒரு பெண். பாலத்துறையில் அழித்ததும் ஒரு பெண்." எண்டார். நான் சிரிக்கவேயில்லை. பயம்!

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# அரசியல் தொடர்...

## அற்புதன்

**'அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை' என்னும் இந்த அரசியல் தொடரில் தமிழர் போராட்ட வரலாற்றை விரிவாக விளக்குவது நோக்கமல்ல. அது ஒரு கடினமானதும் கால அவகாசம் தேவையானதுமான சுமையான முயற்சி. மாறாக இத் தொடரில் முக்கியமான அரசியல்வாதிகளது கொலைகள் பற்றியே சொல்லப்படும். அவற்றை ஒட்டி அந்தக் கொலைகள் நடந்த காலச் சூழலின் அரசியல் வெப்ப தட்ப நிலைகள் பற்றியும் சுருக்கமாக சொல்லப்படும். இடைக்கிடையே சில சுவையான சம்பவங்கள், சூடான திருப்பங்கள், மற்றும் சில சுத்துமாத்துகள் பற்றியும் தொட்டுக் காட்டப்படும். தொடர் முடியும் போது உங்கள் அபிப்பிராயங்களை அறிய மிக மிக ஆவல்!**

பிரியமுடன்,
-அற்புதன்-

**1970**களில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் பேசுவதே இளைஞர்களுக்கு வேதம்.

**"ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில்.... என்ன குறை?"**

இது காசி ஆனந்தன் எழுதிய கவிதையொன்றில் உள்ள வரிகள்.

மட்டக்களப்பு அமிர்தகழியில் பிறந்த காத்தமுத்து சிவானந்தன் தனது பெயரை காசி ஆனந்தன் என்று சுருக்கி வைத்துக் கொண்டு நிறைய கவிதைகள் எழுதினார்.

அநேகமான காசி ஆனந்தன் கவிதைகள் தமிழக புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதைகளது சாயலில் பிரசவமாயின.

பாரதிதாசனின் ஒரு கவிதை-

**"கொலை வாளினை எடடா- மிகு**
**கொடியோர் செயல் அறவே.**
**குகைவாழ் ஒரு புலியே**
**உயர் குணமேவிய தமிழா"**

என்று உணர்ச்சி தந்து அழைக்கும்.

அதேசாயலில் காசி ஆனந்தனின் ஒரு கவிதை,

**"பத்துத்தடவை பாடை வராது**
**பதுங்கிப் பாயும் புலியே தமிழா,**
**செத்து மடிதல் ஒரு தரமன்றோ**
**சிரித்துக் கொண்டே செருக்களம் வாடா"**

செருக்களம் வருமாறு அன்று இந்தக் கவிதையை எழுதிய காசி ஆனந்தன் இப்போது களத்தில் இல்லை. தமிழ்நாட்டில் இருக்கிறார்.

**"வெறிகொள் தமிழர் புலிப்படை**
**அவர் வெல்வார் என்பது வெளிப்படை.**
**மறவர் படைதான் தமிழ் படை.**
**குலமானம் ஒன்றே அடிப்படை."**

இதுவும் காசி ஆனந்தன் எழுதிய கவிதைதான்.

ஆனால், காசி ஆனந்தன் அந்தக் கவிதையை எழுதியபோது புலிகள் இயக்கம் உருவாகியிருக்கவில்லை.

ஒரு சுவையான சம்பவம் சொல்கிறேன் கேளுங்கள்.



காசி ஆனந்தன்

த.வி.கூட்டணியினரால் தமிழீழ 'அரசவைக் கவிஞர்' என்றழைக்கப்பட்ட காசி ஆனந்தன் இப்போது புலிகளுக்கு சார்பாக உள்ளார். ஆனால் 'அரசவைக் கவிஞர்' என்ற பட்டத்தை புதுவை இரத்தினத்துரையிடம் இழந்துவிட்டார்.

1978ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ம் திகதிதான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது நடவடிக்கைகளுக்கு முதன் முதலாக உரிமை கோரியது.

அதன் பின்னர்தான் புலிகள் இயக்கம் என்ற ஒரு அமைப்பு இருக்கிறது என்று வெளியே தெரியவந்தது.

பத்திரிகைகளில் புலிகள் இயக்கத்தின் அறிக்கை வந்தவுடன் சி.ஐ.டி. பிரிவினரின் சந்தேகப் பார்வை காசி ஆனந்தன் மீது விழுந்தது.

எப்போதோ எழுதிய கவிதைக்காக சந்தேக வலையில் சிக்கிய காசி ஆனந்தன் சிறைக்கும் போகவேண்டி ஏற்பட்டது.

காசி ஆனந்தன் கதையை இந்த அரசியல் தொடரில் சொன்னதற்குக் காரணம் இருக்கிறது.

காசி ஆனந்தன் போலத்தான் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் தமது பேச்சுக்கும் செயலுக்கும் எந்த தொடர்புமில்லாமல் மேடைகளில் முழங்கிக் கொண்டிருந்தார்கள்.

இன்னமும் தெளிவாகச் சொல்வதானால் தன் வினை தன்னைச் சுடும் என்பதற்கு தாமே பிற்காலத்தில் உதாரணமாக மாறப் போவது தெரியாமல் உணர்ச்சிகளை விதைத்துக் கொண்டிருந்தார்கள்.

1972ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய மூன்று கட்சிகள் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகியது.

அந்த ஒற்றுமையும் தமிழ் பேசும் மக்களிடையே புதிய நம்பிக்கையைத் தோற்றுவித்தது.

1971ம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசு கொண்டுவந்த 'தரப்படுத்தல் கல்வி முறை' தமிழ் மாணவர்களை கொதிப் பேற்றியது.

பல்கலைக்கழக அனுமதியை நாடிய தமிழ் மாணவர்கள் தரப்படுத்தலால் தூக்கி வீசப்பட்டனர்.

அன்றைய கல்வி அமைச்சர் பதியுதீன் மஹ்மூதின் கொடும்பாவிகள் தமிழ் மாணவர்களால் கொழுத்தப்பட்டன.

**தமிழ் மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் 'தமிழனுக்கு ஒரு நாடு வேண்டும்' என்ற எண்ணத்திற்கு விதை போட்ட பெருமை தரப்படுத்தல் முறைக்கே சேரும்.**

தமிழ் இளைஞர்களதும், மாணவர்களதும் நாடித்துடிப்பையறிந்து கொண்ட தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்கள் தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைக்க ஆரம்பித்தார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைப்பதற்கு முன்னரும் வேறு சிலர் தமிழ் ஈழக் கோரிக்கையைப் பற்றி பேசினார்கள்.

தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் வி. நவரட்ணம். அடங்காத் தமிழர் எனப்படும் அமரர் சுந்தரலிங்கம் போன்றோரே அவர்கள்.

அவர்களது தமிழ் ஈழக் கோரிக்கை தமிழர்களது ஆதரவினை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

"நாமே முதலில் தமிழ் ஈழம் கேட்டோம்" என்று அவர்களும், அவர்களது விரல்விட்டு எண்ணக்கூடிய சில ஆதரவாளர்களும் பின்னர் சொல்லிக்கொள்ள மட்டுமே அது பயன்பட்டது.

தமிழ் ஈழம் கேட்ட தமிழர் சுயாட்சிக் கழக தலைவர் வி. நவரட்ணம் தமிழரசுக் கட்சியிடம் படுதோல்வியடைந்தார்.

ஊர்காவற்துறைத் தொகுதியில் தமிழரசுக்கட்சி வேட்பாளர் பண்டிதர் கா.பொ. இரத்தினத்திடம் பரிதாபமாகத் தோற்றுப் போனதே முதலில் தமிழ் ஈழம் கேட்டவரின் வரலாறு.

எந்தவொரு கோரிக்கையும் அது எத்தகைய சூழலில் முன்வைக்கப்படுகிறது என்பதனைப் பொறுத்தே மக்களைப் பற்றிக்கொள்கிறது.

மாக்சிச தத்துவ வித்தகர் தோழர் மாக்ஸ் சொன்னது இது: "கருத்து மக்களை பற்றிக்கொண்டால் அது சக்தியாய் உருவெடுக்கும்."

தமிழர் விடுதலைக் கூட்டணி காலமறிந்து போட்ட உணர்ச்சி விதை தமிழ் தேசிய நெருப்பாகியது.

இளைஞர்கள், மாணவர்கள் மத்தியில் உணர்ச்சி வெள்ளம்.

**தலைவர் அமுதர் முதல் அடிமட்டப் பேச்சாளர்வரை தமது எதிராளிகளை யெல்லாம் துரோகிகள் என்று தமிழ் மக்களிடம் சுட்டிக்காட்டத் தொடங்கினார்கள்.**

அவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டவர்களில் முதன்மையானவர்கள்-

யாழ் நகர முன்னாள் மேயர் அல்பிரட் துரையப்பா, முன்னாள் அமைச்சர் செல்லையா குமாரசூரியர், மட்டக்களப்பு பா.உ. இராஜன் செல்வநாயகம், நல்லூர் பா.உ. அருளம்பலம், வட்டுக்கோட்டை பா.உ. தியாகராசா, யாழ்ப்பாணம் பா.உ. சி.எக்ஸ். மார்டின்.....

இவர்களில் நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் அருளம்பலமும், வட்டுக்கோட்டை பா.உ. தியாகராசாவும் தமிழ் காங்கிரஸ் கட்சி மூலம் தேர்தலில் வென்று பாராளுமன்றம் சென்றவர்கள். பின்னர் கட்சி மாறிய பட்சிகளானவர்கள்.

யாழ்ப்பாணம் பா.உ. சி.எக்ஸ். மார்டின் தமிழரசுக் கட்சி மூலம் வெற்றிபெற்று பின்னர் கட்சி தாவியவர்.

மார்டின் கட்சி மாறியது பற்றி பருத்தித்துறை பா.உ. துரைரத்தினம் மேடைகளில் கேலி செய்து பாடுவார்.

**"எட்டடுக்கு மாளிகையில் ஏற்றிவைத்த எம் மார்டின் எம்மை விட்டுப் போனானடி"**

கூட்டத்தில் சிரிப்பொலி அலைமோதும். ஆனால் பாராளுமன்றம் அப்போது இருந்தது இரண்டு அடுக்கு மாடியில்தான்.

எப்படியோ சொல் அலங்காரங்களாலும், இடி முழக்கப் பேச்சுக்களாலும் 'துரோகிகள்' எனத் தம்மால் கூறப்பட்டோரை கூட்டணியினர் தாக்கினார்கள்.

இளைஞர்கள் மத்தியில் 'துரோகிகளை' வாழவிடக்கூடாது என்ற எண்ணம் வெறியாகியது.

வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் தியாகராசாவை கொழும்பில் அவரது இல்லத்தில் வைத்து சுட்டுக் கொல்ல முயற்சி ஒன்று நடந்தது. (ஆண்டு நினைவில் இல்லை)

இரு இளைஞர்கள் தியாகராசாவின் வீட்டுக்கதவை தட்டினார்கள்.

ஒரு பத்திரிகையின் பெயரைச் சொல்லி "ஐயாவைப் பேட்டி காண வந்திருக்கிறோம்" என்று சொன்னார்கள்.

"குமாரசூரியர் பேட்டி கொடுக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார். இருங்கோ தம்பி"

ஒரு இளைஞர் ஆசனத்தில் அமர, மற்றவர் கதவருகில் நின்று சூழலை அவதானித்தபடி தன் இடுப்பில் இருந்த கைத்துப்பாக்கியை உருவிக்கொண்டார்.

**(வரும் வாரமும் வரும்)**

---

தமிழீழ விடுதலைப் புலிகள
LIBERATION TIGERS OF THAMIL EALAM

25th April 1978

TO WHOM IT MAY CONCERN

The founder name of the organisation Tamil NEW TIGERS (T.N.T.) was changed on 5-5-76 and the new name is LIBERATION TIGERS OF TAMIL EALAM. We claim responsibility for the following deaths.

1. Mr. Alfred Duraiappah (Mayor for Jaffna, S.L.F.P. Organiser Northern region. Shot Dead.
2. Mr. N. Nadarajah (Proprietor Petrol Garage, Urumpirai, and S.L.F.P. Organiser Kopay (Bombed)
3. Mr. A. Karunanithi (C.I.D. Police K.K.S.) Shot dead.
4. Mr. Shanmuganathan (C.I.D. Police. K.K.S.) Same day shot dead.
5. Mr. Shanmuganathan (C.I.D. Police V.V.T.)
6. Mr. Thangarajah (Sec. of the former S.L.F.P. M.P. Nallur Mr. Arulampalam)
7. Mr. C. Kanagaratnam (MP for Pottuvil former T.U.L.F. and present U.N.P.)
8. Mr. Bastiampillai (C.I.D. Inspector of Police)
9. Mr. Perampalam (C.I.D. Sub- Inspector of Police)
10. Mr. Balasingam (C.I.D. Sergent of Police)
11. Mr. Siriwardene (C.I.D. Police Driver).

The Bastiampillai Party came in search of LIBERATION TIGERS of EALAM about 6 a.m. on 7th April, 1978 with S.M.G., shot gun, Revolvers Pistol, and attacked Tigers but the Tigers destroyed them without any d... or body injury to Tigers and the car was also destroyed.

No other groups, Organisation or Individuals can claim this death. Serious action will be taken against those who claim the above other than Tigers in Ceylon or Abroad.

We are not responsible for Past robberies of any kind.

Secretary
CENTRAL COMMITTEE

T.U.L.F - Tamil United Liberation Front.
U.N.P. - United National Party
S.L.F.P. - Sri Lanka Freedom Party.
K.K.S. - Kankesanturai.
V.V.T. - Valvettiturai.
C.I.D. - Criminal Investigation Department
M.P. - Member of Parliament.

Tigers claim their armed actions

## 78ல் உரிமை கோரியவை:

**1978ம் ஆண்டு ஏப்ரல் .மாதம் 25ம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற கடிதத் தலைப்போடு ஓர் அறிக்கை சகல புத்திரிகைகளுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. அதன் பிரதியே இங்கே காணப்படுகிறது.**

**அந்த அறிக்கையில் புலிகள் உரிமை கோரியிருந்த நடவடிக்கைகள்:**

1. அல்பிரட் துரையப்பா (யாழ் மேயரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வடபகுதி அமைப்பாளரும்)
2. திரு.என். நடராஜா (உரும்பிராய் பெற்றோல் நிலைய அதிபரும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளரும்)
3. திரு. கருணாநிதி (காங்கேசன்துறை சி.ஐ.டி. பொலிஸ் உத்தியோகத்தர்)
4. திரு.சண்முகநாதன் (காங்கேசன்துறை சி.ஐ.டி. பொலிஸ்)
5. திரு. சண்முகநாதன் (வல்வெட்டித்துறை சி.ஐ.டி. பொலிஸ்)
6. திரு.தங்கராசா (சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர், நல்லூர் பா.உ. அருளம்பலத்தின் செயலாளர்)
7. திரு.சி. கனகரத்தினம் (தமிழர் விடுதலைக் கூட்டணி பா.உ., பின்னர் ஐ.தே.கட்சி பா.உ., இவர் சுடப்பட்டுஉயிர் தப்பியவர்)
8. திரு.பஸ்தியாம்பிள்ளை (சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர்)
9. திரு. பேரம்பலம் (சி.ஐ.டி. சப் இன்ஸ்பெக்டர்)
10. திரு. பாலசிங்கம் (சி.ஐ.டி. சார்ஜன்ட்)
11. திரு. சிறிவர்தன (சி.ஐ.டி. பொலிஸ் சாரதி)

**இக்கொலைகள் நடந்த சூழல்களும் இத்தொடரில் விளக்கப்படும்.**

---

### (எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி)

ரெலோ விடயத்தில் புலிகளது கோபம் நியாயம் என்றுகூடக் கூறலாம். தேர்தலை புறக்கணித்து புலிகள் பிரசுரம் விடுத்த போது, ரெலோ புலிகளின் பெயரை பாவித்து வாக்குக் கேட்டமையானது நாகரிகமில்லாத செயல்.

புலிகள் மீது குற்றம் சொல்லும் தமிழ் கட்சிகள் பல தமக்கென்று எந்தவொரு நோக்கமும் இல்லாமல் நேரத்திற்கு ஏற்ப பேசிக்கொண்டிருப்பதுதான் கொள்கை என்று நினைக்கத் தொடங்கிவிட்டன.

வடக்கு-கிழக்கு-மலையகத்தில் தமிழ் பேசும் மக்கள் சந்திரிக்காமீது நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.

அதனை தமது செல்வாக்கின் விளைவு <u>மட்டுமே</u> என்று எந்தவொரு கட்சியும் உரிமை கோர முடியாது.

ஆனால், அவ்வாறு உரிமை கோரத் தான் போட்டி போட்டு அறிக்கைகள் கிளம்பின. நிபந்தனையில்லா ஆதரவு என்று திருப்பித் திருப்பி ஒப்புவிக்கப்பட்டது.

---

### யார் இவர்?



தெரிகிறதா இவரை? யோசித்து வையுங்கள். வரும் வாரம் சொல்கிறேன். இந்தத் தொடரில் இவர் பற்றியும் அதிகம் சொல்லவேண்டியிருக்கிறது.

---


இன்னிசை இரவு

தென் இந்தியாவின் முடிசூடா மன்னன்
மதுரக்குரலோன்
மனோ
இந்திய இளம் இசைத்திலகம் A.R.ரகுமான்
தமிழ் இசை உலகுக்கு அறிமுகப்படுத்திய
பிரபல தென்னிந்தியப் பாடகர்
S.சாகுல் ஹமீது
இலங்கை முன்னணி இசைக்குழுவான
சித்தாரா
இசைக்குழுவினருடன் வழங்கும்
மாபெரும் இன்னிசை இரவு
இடம்:
சுகததாச உள்ளரங்கு
NO SMOKING INSIDE THE AUDITORIUM
நாள்:
20.11.1994
மாலை- 6.30 மணி
ரிக்கெற்று கள் அன்றைய தினம் மண்டப வாயிலிலு ம்
அனைத்து பிரதான வியாபார ஸ்தாபனங்களிலு ம் கிடைக்கும்.
LIONS CLUB OF COLOMBO MID.TOWN
District 306 B. SRI LANKA.

# அலசுவது - இராஜதந்திரி

# அரசியல் வன்முறைகளை சாடிவரும் சந்திரிக்கா!



# அரசு-புலிகள் உறவு பற்றிய விஷமத்தனக் குற்றச்சாட்டுக்கள்!!

எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கியதேசியக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளருமான காமினி திசாநாயக்கா குண்டுவெடிப்பில் கொலையுண்டதையடுத்து தென்னிலங்கை அரசியலில் ஏற்பட்ட 'அசமந்த' நிலை தற்போது பெரிதும் தணிந்துள்ளது.

காமினி திசாநாயக்கா தென்னிலங்கை அரசியலில் தன்னைப் பலப்படுத்திக்கொண்டு வந்திருந்த தறுவாயிலேயே 'கொலைக்குண்டு'க்கு இரையாகியிருந்தார்.

இலங்கையைப் பொறுத்தவரை அரசியல் கொலைகள் அதிகரித்துள்ளனனன; அரசியலாளர்கள் கொலை செய்யப்படுமிடத்து அவர்களது விதவை மனைவிமார் அரசியலில் தமது கணவர்மார் விட்டுச்சென்ற இடத்தை நிரப்புவதும் ஒரு நியதியாகவே தற்போது மாறியுள்ளது.

காமினி திசாநாயக்காவின் பூதவுடல் அவரது இல்லத்தை விட்டுக் கொண்டு செல்லப்படுமுன்னரேயே அவரது விதவை மனைவியார் திருமதி.சிறிமா திசாநாயக்கா ஐக்கியதேசியக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருந்தார்.

காமினியின் மனைவியை ஐக்கியதேசியக் கட்சி முழு விருப்பத்துடனோ அல்லது கட்சியின் ஏகோபித்த ஆதரவுடனோ ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தவில்லை.

ஐ.தே.க. தலைமையகமான ஸ்ரீகொத்தவில் இடம்பெற்ற கடும்போட்டி, காரசாரமான வாதப் பிரதிவாதங்கள், இறுதியாக 'அடிபிடி' ஆகியவற்றையடுத்தே காமினியின் பாரியார் ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

பாராளுமன்றத் தேர்தலையடுத்து எதிர்க்கட்சித் தலைவரைத் தெரிவு செய்வதில்கூட ஐ.தே.கவினுள் ஒற்றுமை நிலவியிருக்கவில்லை. திரு.ரணில் விக்கிரமசிங்க மற்றும் காமினி திசாநாயக்கா ஆகியோருக்கிடையில் போட்டி ஏற்பட்டு ஒருசில வாக்கு வித்தியாசத்திலேயே காமினி எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவாகியிருந்தார்.

கடந்த பதினேழு வருடகாலமாக பெரும்பலத்துடன் ஆட்சி செய்துவந்த ஐக்கியதேசியக் கட்சியினுள் ஒரு தகுந்த தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்ப முடியாத நிலையே தற்போது காணப்படுகின்றது.

இதே வேளை பொதுசன ஐக்கிய முன்னணி பல்வேறு இடதுசாரிக் கட்சிகளையும் ஒன்றுசேர்த்த நிலையில் இலங்கை அரசியலில் தனது நிலையை பலப்படுத்திவரக் காணப்படுகின்றது.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் பிரதம மந்திரியாகத் தெரிவான திருமதி.சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஜனாதிபதித் தேர்தலையும் சந்தித்த நிலையில் இலங்கையின் சமூக, பொருளாதார அரசியல் துறைகளில் பல்வேறு மாற்றங்களையும் ஏற்படுத்த முனைபவராக இருக்கின்றர்.

கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக இலங்கையின் ஆட்சியாளருக்குப் பெருஞ்சவாலாக இருந்துவரும் வடக்கு-கிழக்கு யுத்தமே புதிய ஆட்சியாளர் சந்திரிகாவுக்கும் தலையிடியைக் கொடுத்திருக்கக் காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்னையை வரட்டுத்தனமான அரசியல் சித்தாந்தங்களைப் பேசியோ, அல்லது வெறும் 'கண்துடைப்பு' நடவடிக்கைகளை மேற்கொண்டோ அணுகாமல் யதார்த்தபூர்வமாக மனிதாபிமானக் கண்கொண்டு சந்திரிகா அணுகியிருந்தார்.

பிரதமராகத் தெரிவானதுமே வடக்கு-கிழக்கில் நிலவிவந்த பொருளாதாரக் கெடுபிடிகளை நீக்குவதில் பிரதமர் சந்திரிகா ஆர்வங்காட்டியிருந்தார். தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பூர்வாங்கப் பேச்சுக்களையும் அவர் ஆரம்பித்திருந்தார்.

புலிகளுடனான பூர்வாங்கப் பேச்சுக்களை நடத்திய அரச தரப்புப் பிரதிநிதிகள் இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களுக்குச் செல்ல தயாராக இருந்தவேளையிலேயே எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளருமான காமினி திசாநாயக்கா குண்டுவெடிப்பில் பலியாகியிருந்தார்.

புலிகளுடனான பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றிய அரச தரப்பு குழுவில் இடம்பெற்ற முன்னாள் யாழ் அரச அதிபரும், வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநருமான திரு.லயனல் பெர்னாண்டோ, "குண்டு வெடிப்புச் சம்பவம் ஒரு துரதிஷ்டவசமானது. இச்சம்பவம் அரசு-புலிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களை இடைநிறுத்தியுள்ளது. அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகள் குறித்து எதுவும் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை" என்று குண்டுவெடிப்புச் சம்பவத்தையடுத்து இடம்பெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

இலங்கையின் கடந்தகால அரசியல் சூழ்நிலைகளை உற்றுநோக்கும்போது அரசியல் வன்முறைகள் என்பது கடந்த தசாப்த காலமாகவே தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

திருமதி.சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தமது ஜனாதிபதித் தேர்தல் பிரசார உரைகளில் அரசியல் வன்முறைகளினால் தனது தந்தையாரைச் சிறு வயதினிலும் பின்னர் தனது கணவரை குடும்ப வாழ்விலும் தாம் பறிகொடுத்ததுபோலவே ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் தத்தமது சொந்த பந்தங்களையும் பறிகொடுத்திருக்கக் காணப்படுகின்றனர் என்று தெரிவித்திருந்தார்.

சந்திரிகாவின் இக்கருத்து அவரை நடைமுறைச் சாத்தியமாகவும், மனித உணர்வுகளை நன்கு எடைபோட்டும் சிந்திக்கத் தெரிந்தவராகவே இனங்காட்டியுள்ளது.

காமினியைக் கொன்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து சந்திரிகா அரசுக்கு எதிராக பல்வேறு கண்டன விமர்சனங்களும் வெளியாகியிருந்தன.

முன்னாள் சபாநாயகரும், ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட பிரமுகர்களில் ஒருவருமான எம்.எச்.மொஹமட் காமினியின் மரணம் தொடர்பாக சந்திரிகா அரசைக் கடுமையாகச் சாடியிருந்தார். "சந்திரிகா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்ட உறவே இக்குண்டு வெடிப்புச் சம்பவத்துக்குக் காரணமாகும். இருசாராரும் கூட்டாகச் சேர்ந்து செய்த சதியே இக்குண்டுவெடிப்பாகும்" என்று எம்.எச்.மொஹமட் கூறியிருந்தார்.

இக்குற்றச்சாட்டுக்குப் பதிலளித்த சந்திரிகா, முன்னைய ஆட்சியில் பாராளுமன்றில் காமினி, லலித் ஆகியோர் அன்றைய ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவுக்கு எதிராகக் கொண்டுவந்த குற்றவியல் பிரேரணை (IMPEACHMENT) தொடர்பாக அப்போது சபாநாயகராக இருந்த எம்.எச்.மொஹமட் செயல்பட்ட விதத்தைக் குறிப்பிட்டிருந்ததுடன், அவர் எவ்வாறு அப்பிரேரணை தொடர்பாக லலித், காமினி ஆகியோரின் 'காலை வாரி' விட்டிருந்தார்.
எனவே திரு.எம்.எச்.மொஹமட்டின் குற்றச்சாட்டு அர்த்தமற்றதொன்றென்பதனையும், அரசு-புலிகள் தொடர்பாக அவர் கூறியவை விஷமத்தனமானதென்பதனையுமே சந்திரிகா குறிப்பிட்டவை புலப்படுத்தியிருந்தன.



காமினியைக் கொன்ற குண்டு வெடிப்பையடுத்து சந்திரிகா அரசின் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் இனிவருங்காலங்களில் எப்படி இருக்கும் என்பதே இன்று ஒரு முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

கொழும்பிலுள்ள மகாவலி நிலையத்தில் காமினியின் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தவேளை பெருந் திரளான மக்கள் நீண்ட வரிசையில் அவருக்கு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

அஞ்சலி செலுத்த வந்தோரில் சிலரை தொலைக்காட்சி நிறுவனமொன்று (TNL) பேட்டி கண்டிருந்தது.

காமினி திசாநாயக்காவின் மரணம் தொடர்பாக நாட்டு மக்கள் கொண்டுள்ள கண்ணோட்டத்தை மதிப்பிடுவதாக அத்தொலைக்காட்சிப் பேட்டி நிகழ்ச்சி அமைந்திருந்தது.

காமினிக்கு அஞ்சலி செலுத்த நின்ற ஒரு வயோதிப சிங்கள அன்பரிடம், காமினி கொல்லப்பட்டது தொடர்பாகக் கேட்டபோது அவர் இப்படிக் கூறினார்:

"காமினி திசாநாயக்கா ஓர் இளந் தலைவர். அவரது மறைவு ஒரு பேரிழப்பாகும். அவரது மரணத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே பொறுப்பாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்த இயக்கம் இக்கொலையில் சம்பந்தப்பட்டிருக்கலாம். அல்லது சம்பந்தப்படாதிருக்கலாம். ஆயினும் அந்த இயக்கம் ஒரு பலம்வாய்ந்த ஆயுதப் போராட்ட இயக்கமென்பதனை எவருமே மறுக்கமுடியாது. கடந்தகாலங்களில் அவர்கள் வெளிப்படையாகவே பல இராணுவ ரீதியிலான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளார்கள். அவர்களிடம் சக்திமிக்க ஆயுதங்கள் மற்றும், வெடி பொருட்கள் என்பன உண்டு என்பதை அனைவருமே நன்கறிவர். இந்நிலையில் தொடர்ந்தும் அவர்களுடன் மோதலில் குதித்து பகைமையை வளர்த்துக்கொள்வதைவிட அவர்களுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தி அமைதியை ஏற்படுத்துவதே புதிய அரசின் புலிகளுடனான சமரச முயற்சிகள் தொடரவேண்டும்". என்று அந்த சிங்கள அன்பர் கூறியிருந்தார்.

அவரின் இக்கருத்து நாட்டு மக்களில் அநேகர் இலங்கையின் இன்றைய நெருக்கடி நிலையின் தன்மையை நன்கு புரிந்திருப்பதையே வெளிக்காட்டுவதாக இருக்கின்றது.

வடக்கு-கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வளர்ச்சி, முழு நாட்டுக்குமே ஓர் அச்சுறுத்தலாக இருக்கின்றது.

நாட்டில் ஒரு பெருந் தாக்குதலோ அல்லது காமினியைக் கொன்ற குண்டு வெடிப்பையொத்த அசம்பாவிதமோ இடம்பெறும் பட்சத்தில் பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்மீதே உடனடியாக சந்தேகத்தை வெளியிடுகின்றன.

இத்தகைய நிலைக்கு புலிகள் இராணுவ ரீதியாகக் கொண்டுள்ள நிலைப்பாடே முக்கிய காரணமாக விளங்கியிருக்கின்றது.

எனவே நாட்டின் ஏகோபித்த பாதுகாப்பு மற்றும் சமாதான சகவாழ்வில் ஆட்சியாளர்கள் உண்மையிலேயே ஆர்வங்கொண்டிருந்தால் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டியதே மிகவும் இன்றியமையாததாகின்றது.

சந்திரிகா அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பூர்வாங்கப் பேச்சுக்களையே ஆரம்பித்திருந்தது. ஆயினும் துரதிஷ்டவசமாக அப்பேச்சுக்களை தொடர முடியாதவாறு காமினியைப் பலியெடுத்த குண்டு வெடிப்புச் சம்பவம் விளங்கியிருந்தது.

இருந்தபோதிலும் சமாதான முயற்சிகளை முற்றிலுமாகக் கைவிட்டு விடவில்லை என்றே சந்திரிகா அரசு தெரிவித்துள்ளது.

சமாதான முயற்சிகளில் நம்பிக்கை தளராத சந்திரிகா அரசின் உறுதிப்பாடு நம்பிக்கை தருவதாகவே இருக்கின்றது.

பூர்வாங்கப் பேச்சுக்களே புலிகளுடன் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அப்பேச்சுக்களில் பங்குபற்றிய அரசதரப்புப் பிரதிநிதிகள் புலிகளுடன் சேர்ந்து கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் பேச்சுவார்த்தைகள் நல்ல புரிந்துணர்வுடனும், எதிர்காலத்தில் தொடர்ந்து மேற்கொள்ளக்கூடிய வகையிலும் இடம்பெற்றிருந்தன என்று தெரிவித்திருந்தனர்.

இராணுவ ரீதியிலான நடவடிக்கைகள் தொடரும்போது நிதானம், மற்றும் அரசியல் சாணக்கியம் என்பவற்றை எவ்வகையிலும் எதிர்பார்க்க முடியாது.

வடக்கு-கிழக்குப் பிரச்னையின் அடிப்படை அம்சம் அரசியல் சார்ந்தது. எனவே அது அரசியல்ரீதியாகவே தீர்க்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

இலங்கையின் விஸ்தீரணம், அதன் சமூக, பொருளாதார அரசியல் வரம்புகள் என்பவற்றை சரிவர எடைபோடாது "போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்" என்று இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜயவர்த்தனா வடக்கு-கிழக்குப் பிரச்னை குறித்து அன்று கூறியிருந்தார்.

நிறைவேற்று அதிகாரங்களுடன் ஜனாதிபதியாகப் பதவியேற்று தமது நடவடிக்கைகளைப் படிப்படியாக ஆரம்பித்திருந்த காலத்திலேயே திரு.ஜயவர்த்தனா அவ்வாறு கூறியிருந்தார்.

எனவே ஜே.ஆரின் இந்த 'இறுமாப்பான' கருத்தின் பிரதிபலனையே இன்று முழு நாடும் அனுபவித்து வருவதைக் காண முடிகின்றது.

புதிய ஆட்சியாளர்கள் ஜே.ஆர்.ஜயவர்த்தனா குறிப்பிட்டிருந்த "போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்" என்ற கூற்றை நன்கு ஆராயும் பட்சத்தில் போரினால் வந்த நாசத்தினை தெளிவாக அறிந்து கொள்ளமுடியும்.

இந்நிலையில் "சமாதானம் என்றால் சமாதானம்" என்ற கருத்தையே நிலைபெறச் செய்து, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஆரம்பித்த சமாதான முயற்சிகளை மேலும் உறுதியாக முன்னெடுப்பதன் மூலமே 'கெட்ட போருக்கு' நிரந்தரமாகவே ஆப்பு வைக்கமுடியும்.

> "'சமாதானம் என்றால் சமாதானம்' என்பதை ஆட்சியாளர்கள் நிலைபெறச் செய்யவேண்டும்"

# சேலை கட்டும் பெண்ணுக்கொரு யோசனை



## ருக்கா-நாதன்

### நீங்கள் உயரமான பெண்களா?

நீங்கள் அளவுக்கு அதிகமாக உயரமாக இருப்பதாக உங்களுக்குத் தோன்றினால் சேலையைத் தரையில் புரளுமாறு தழையத் தழைய அணியுங்கள். முந்தானையைக் குறைந்த பட்சம் முழங்காலைத் தொடுமாறு அணியுங்கள். இவ்வாறு செய்வதால் உங்கள் உயரத் தோற்றம் சற்று குறைந்ததுபோல் இருக்கும்.

### உடல் பருமன் தோற்றமா?

உங்கள் உடல் அளவுக்கு அதிகமாகப் பருமனாக இருப்பதாக நீங்கள் நினைத்தால் சற்று அழுத்தமான வர்ணம் கொண்ட சேலைகளை வழக்கமாக அணியுங்கள். தோற்றத்தில் சற்று மெல்லியதாக இருக்கும்.

### மாநிறம் கொண்ட பெண்களின் ஆடை

மாநிறம் கொண்ட பெண்கள் தூய வெள்ளை நிற ஆடையினை அணிந்தால் எடுப்பாக-அழகாக இருக்கும்

### கறுப்பு நிறமான பெண்களுக்கு

கறுப்பு நிறமுடைய பெண்கள் முற்றிலும் வெண்மையான ஆடைகளை அணிந்து கொள்ளக்கூடாது. அவ்விதம் செய்தால் கறுப்பு நிறத்தை அதிகப்படுத்திக் காண்பிக்கும். கறுப்பு நிறமுடைய பெண்கள் இளநீலம், ரோஜா வர்ணம் அல்லது ஒரேஞ்ச் நிறம் போன்ற லேசான வர்ணமுடைய சேலைகளை அணிந்தால் அழகாக இருக்கும்.

### சிவப்பு நிறப் பெண்களுக்கு

அழுத்தமான வர்ணமுடைய சேலைகளை உடுத்தினால் அழகாக இருக்கும்.

### உயரத் தோற்றம் குறைய

அகலமான கரையும் படுக்கைக் கோடுகளும் கொண்ட சேலைகளை உடுத்தினால் மிகவும் உயரமான பெண்கள் சற்று உயரம் குறைவாக தோன்றுவார்கள். சேலையின் வர்ணத்துக்கு முற்றிலும் மாறுபட்ட வர்ணமுடைய கலரில் பிளவுஸ் அணிந்தாலும் உயரமான பெண்களின் தோற்றம் சற்று உயரக் குறைவாக மாறித் தோன்றும்.

### ஒல்லியான பெண்களுக்கு

உடல் மிகவும் ஒல்லியாகத் தோற்றமளிக்கும் பெண்கள் இறுக்கமாக உடையணியக்கூடாது. மேலும் சோளியின் கைகள் மிகவும் பிடிப்பாக இல்லாமல் சற்று தளர்ச்சியாக இருப்பது நல்லது.

### சேலைக்கு கஞ்சி போடுவது

கஞ்சி போட்ட கொட்டன் சேலைகளை எப்பொழுதும் கட்டும் அநேக பெண்களுக்கு லோண்டரியில் போடுவதற்கு முடியாது. நாமே வீட்டில் கஞ்சி போடலாம்.

அதிக விலைகூடிய கஞ்சி போடாமல் சவ்வரிசி கஞ்சி போடலாம்.

மைதாமாவு அல்லது சவ்வரிசி மாவை தண்ணீரில் நீர்க்கக் கரைத்துக் கொதிக்க விடவும். ஒரு புடவைக்கு ஒரு மேசைக் கரண்டி அளவு எடுத்து கொதிக்கவிட்டு இறக்கவும். கொதித்த கஞ்சியை வடிகட்டி விடவும். எப்பொழுதும் காய்ந்த புடவைகளைமட்டும் கஞ்சியில் நனைக்கவும்.

மிகவும் இறுக்கமாகப் பிழியக்கூடாது. நல்ல கடும் கலர் புடவைகளுக்கு கஞ்சியில் சிறு துளி நீலம் கலந்த பிறகு நனைக்கவும். சாயம் போகும் புடவைகளை கடைசியாக நனைக்கவும். கூடுமானவரை வெய்யிலில் சுருக்கம் இல்லாமல் இழுத்து காய விடவும். ஒரு பாயை நிலத்தில் போட்டு அதன்மேல் போடுவது நல்லது.

கஞ்சியில் ஏதாவது 'பெர்பியூம்' கலந்தால் கஞ்சியின் மணம் வராமல் இருக்கும். பிறகு அயன் பண்ணவும்.

### சேலைகளை பாதுகாப்பது எப்படி?

#### கொட்டன் புடவைகள்

வெய்யிலுக்கு ஏற்ற கலர்ப் புடவைகளை குளிர்ந்த நீரில் நல்ல தரமான சோப்புப் பவுடர் போட்டு பதினைந்து நிமிடங்கள் ஊற வைக்கவேண்டும். தோய்த்து அலசிய பிறகு மைதாமா கஞ்சியில் ஊறவிட்டு உலர்த்தி இஸ்திரி செய்யுங்கள். வெளியில் போகும்போது பளிச்சென்று இருப்பதுடன் பெண்களுக்கு ஒரு தனி மதிப்பு ஏற்படும்.

#### டெரி கொட்டன் புடவைகள்

இஸ்திரி செய்ய வேண்டிய அவசியமில்லாதது. குளிர்ந்த நீரில் நல்ல தரமான சோப்புப் பவுடர் போட்டு பத்து நிமிடங்கள் ஊற விட்டால்போதும். அழுக்கு விட்டுப் போய் அலசி எடுத்தவுடன் புடவை பளிச்சென்றிருக்கும்.

#### பொலியெஸ்டர் புடவைகள்

100 வீதபொலியெஸ்டர் புடவைகளுக்கு மேற்கூறியபடியே துவைத்து நிழலில் காய வைக்கவேண்டும். இவைகளும் நன்றாகப் பாவிக்கும்.

#### பட்டுப் புடவைகள்

திருமணம் மற்றும் விசேஷங்களுக்கு அவசியமாக அணிய வேண்டியதாகக் கருதப்படும் சேலைகளை 'ட்ரைகிளீனிங்' செய்துதான் பாவிக்க வேண்டும். அதிக காலம் புடவைகளைத் துவைக்காமல் வைத்திருந்தால் சில புடவைகள் படபட வென்று கிழிந்துபோகும்.

---

## லேடீஸ் ஸ்பெஷல்

## சமைப்போம் சுவைப்போம்

### தொகுத்துத் தருவது-சுகந்தினி

### ஆட்டுக்கால் சூப்



**தேவையானவை:**

இளம் ஆட்டுக்கால் எலும்பு-1/4 கிலோ
எண்ணெய்-50 கிராம்
வெங்காயம்-50 கிராம்
மிளகு- ஒரு தேக்கரண்டி
பூண்டு-10 கிராம்
கறுவாப்பட்டை-சிறுதுண்டு
பெருஞ் சீரகம்-10 கிராம்
கராம்பு-4
உப்பு-அளவாக

**செய்முறை:**

ஆட்டு எலும்பை தண்ணீரில் சுத்தமாகக் கழுவி, துண்டு துண்டாக ஒரு அகலமான பாத்திரத்தில் போட்டு அதில் சுமார் ஒரு லீற்றர் தண்ணீர் ஊற்ற வேண்டும். அத்துடன் மஞ்சள்தூள், மிளகுஆகியவற்றை சேர்த்து விழுதாக அரைத்து, உப்புடன் கலந்து, வெங்காயத்தை நீளவாக்காக வெட்டி பொடிப்பொடியாக நறுக்கி இவற்றுடன் சேர்த்து அடுப்பில் வைத்து மூடி நன்றாகக் கொதிக்க விடவும். எலும்புத்துண்டுகள் வெந்தவுடன் கீழே இறக்கி வைத்துவிட்டு, மற்றொரு வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி பொடி செய்த வெங்காயம் பெ.சீரகம், கராம்பு போன்றவற்றைப் போட்டு தாளித்து- இறக்கி வைத்திருந்த எலும்பு சூப்பை இதில் எடுத்துக்கொட்ட வேண்டும். அவ்வளவுதான். ஆட்டுக்கால் சூப் தயார்.

---

## முரசின் பரிசு

யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.

* 50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.
* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.
* நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.
* மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.
* இன்றுமுதல் கூப்பன்களை சேகரிக்க ஆரம்பியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.

**முரசின் பரிசு**
**கூப்பன் இல 15**
உண்மை-நேர்மை-
வெளிப்படைத்தன்மை

---

## சூப்பர் மசாலா







### ★ பலாத்கார கணவன்



இங்கிலாந்தில் வாழும் ஆண்டருக்கு பொல்லாத கோபம். எல்லாம் தனது மனைவிமீதுதான். ஆசையோடு அழைத்தும் அருகே செல்ல மறுத்துக்கொண்டிருந்தாள். இரண்டு வாரம் பொறுத்துப் பார்த்தார் தாங்க முடியவில்லை. கெஞ்சிப் பார்த்தாராம் மிஞ்சிப் போனானாம். உடனே போர் கத்தியை கையில் எடுத்துக் கொண்டார். குத்திக்கொல்லவல்ல- சும்மா பயம் காட்டிப் பணியவைக்கத்தான். மனைவி பயந்துவிட்டாள். ஒத்துழைத்துவிட்டு உடனே ஓடினாள் நீதிமன்றத்திற்கு.

நீதிபதி வழக்கை துருவிப் பார்த்துவிட்டு மனைவியே என்றாலும் மறுத்தபின் பலாத்காரம் மாகுற்றம் என்று தீர்ப்பளித்தார். சின்னதாக ஒரு தண்டனையும் கொடுத்தார், ஆறு வருடச் சிறை!

### ★ விண்ணிலும் குப்பை!

விண்வெளிக்கு செயற்கை கோள்களை பல நாடுகள் படபடவென்று அனுப்பிக்கொண்டிருக்கின்றன.

அந்த செயற்கை கோள்களின் ஆயுள் முடிந்ததும் விண்வெளியிலேயே குப்பைகளாகத் தங்கிவிடுகின்றனவாம்.

செயற்கை கோள்கள் மற்றும் ரொக்கெட்டுக்களின் சில பாகங்கள் என்று இதுவரை விண்வெளியில் சேர்ந்துள்ள குப்பைகள் எவ்வளவிருக்கும் என்று ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் நீண்டநாட்களாக ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது.

ஏறக்குறைய 18 ஆயிரம் துண்டுக் குப்பைகள் சேர்ந்திருக்குமாம்.

அந்தக் குப்பைகள் பூமியைச் சுற்றி ஒரு வளையம் போல் உருமாறிக் கொண்டிருக்கின்றனவாம். குப்பைகளது எண்ணிக்கை அதிகமாகும்போது எதிர்காலத்தில் அனுப்பப்படும் செயற்கைக் கோள்களுக்கு பாதிப்பு ஏற்படலாம் என்றும் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் சொல்லியிருக்கிறது.

### ★ சின்ன சின்ன ஆசை

கமலஹாசனின் மனைவி சரிகாவுக்கு ஏராளமான சின்ன சின்ன ஆசைகள். தமிழ் படிக்க ஆசை. படம் ஒன்றை இயக்க ஆசை. கொடைக்கானலில் குடியேற ஆசை. பம்பாய்க்கு அடிக்கடி பறந்து செல்ல ஆசை.. ஆசைகளை நிறைவேற்றும் முயற்சியாக தமிழ் படித்து வருகிறார். சிவாஜி பற்றிய தொலைக்காட்சி தொடர் ஒன்றும் தயாரித்து வருகிறார். கமல்-சரிகா தம்பதிக்கு கொடைக்கானலில் பங்களா இருக்கிறது. எதிர்காலத்தில் அங்கு குடியேறும் எண்ணமும் இருக்கிறது.



### ★ இப்போது மட்டும் ஏனாம்?

உலகக் கோப்பை கால்பந்து போட்டி நடைபெற்றபோது கணவர்மார்கள் தங்களைக் கவனிக்கவே இல்லையென்று மனைவிமாருக்கு கோபமாம். பழிக்குப் பழி வாங்க காத்திருந்தார்களாம். உலகக் கோப்பை முடிந்தவுடன் கணவர்மார்களுக்கு காத்திருந்தது ஏமாற்றம். பள்ளியறை பகிஷ்கரிப்பு அமோகமாக நடந்ததாம். அமெரிக்க ஆங்கிலப் பத்திரிகையின் கருத்துக்கணிப்பொன்றில் இந்த விபரம் வெளியாகியிருக்கிறது.

### ★ பிரியங்காவின் பிரியத்துக்குரியவர்

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா மிக இரகசியமாக ஒருவரை காதலித்து வருகிறாராம்.

காதலர் யார் என்று வலைபோட்டு தேடிய புதுடில்லி பத்திரிகைகள் அவர் ஒரு பிரபல தொழிலதிபரின் மகன் என்று மட்டும் கண்டுபிடித்துள்ளன.

காதலுக்கு அம்மா சோனியா தடை இல்லை. காதலர் வீட்டிலும் பச்சைக்கொடி- என்றாலும் இருவரும் சந்திக்க இடையூறு இல்லாமல் இல்லை. பிரியங்காவுக்கு பலத்த காவல் வழங்கிவரும் பாதுகாவலர்கள்தான் நந்தி மாதிரி இடையூறாய் உள்ளார்களாம்.

### ★ அசாருதீனுக்கு கார்



இந்திய கிரிக்கெட் காப்டன் அசாருதீனிடம் வெள்ளைநிற ஹோண்டா கார் இருக்கிறது. துபாய் இரசிகர்கள் கொடுத்த பரிசு அது. இப்போது இன்னொரு கார் பரிசாகக் கிடைத்திருக்கிறது. மெர்சிடஸ் பென்ஸ் (200 இடிசல்) கார்- ஊதா நிறம். இங்கிலாந்து சென்று கவுண்டி அணிக்காக அசாருதீன் ஆடினார். அவரது ஆட்டத்தை இரசித்த இரசிகர்கள் கைதட்டுவதோடு மட்டும் நிற்காமல் கையோடு ஒரு காரையும் கொடுத்து அனுப்பிவிட்டார்கள்.

---

## தங்க நகைப் பரிசுத் திட்டம்

### பரிசுக்குரியவர்களில் சிலர்

தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ் இணைந்து நடத்திய தங்கநகைப் பரிசுத்திட்ட போட்டியில் வெற்றிபெற்ற அதிஷ்டசாலிகளிடம் புகைப்படங்களை அனுப்பிவைக்குமாறு கேட்டிருந்தோம். அனுப்பி வைத்தவர்களது புகைப்படங்கள் இங்கே இடம்பெறுகின்றன.

முதல் பரிசாக நெக்லஸ் பெறுபவர்-



எஸ்.ஜெயலட்சுமி
பங்கதெனிய.

ஆறுதல் பரிசுக்குரியவர்கள்:



தனலக்சுமி
இராமநாதன்
கல்லடி
மட்டக்களப்பு



ரி.சாந்தி
முல்லைத்தீவு



விஸ்வநாதன் தனலக்சுமி
கந்தப்பொல.



பாத்திமா சப்ரின்
கற்பிட்டி.



திருமதி சித்தி ஆயிஷா
பதுளை.

# தலைகீழாய் நின்றாலும் ஓவியம் அபாரம்!



வண்ணக்கலவை கொண்ட பாத்திரம் தலையான தூரிகையில் அமிழ்த்தப்படுகிறது

## தலைமுடி இருக்க தூரிகை எதற்கு?

மக்களின் கவனத்தை ஈர்க்க புதுமையான ஏதாவதொன்றைச் செய்ய வேண்டும் என்பதுதான் ஸ்கொட் ஹோர்ணரின் விருப்பம். ஹோர்ணருக்கு 23 வயது.

ஃபுளொரிடா மத்திய பல்கலைக்கழகத்தில் பயிலும் ஸ்கொட், ஓவியம் வரைவதில் ஒரு புதிய உத்தியைக் கடைப்பிடித்தான். இதனால் இன்று பெரும் புகழுடன் பணமும் குவிகிறது.

தன்னுடைய தலைமுடியையே ஓவியம் வரைவதற்கான தூரிகையாக ஸ்கொட் பயன்படுத்துகிறான். ஒரு மரத்தில் தனது கால்களை மேலே கட்டிக்கொண்டு தலை கீழாகத் தொங்குகிறான்.


பாத்திரங்களில் வர்ண மைகளைக் கலக்கி வைத்துக் கொள்கிறான். தலையின் கீழ்ப்பகுதியில் ஓவியம் வரைவதற்கான துணி (கான்வெஸ்) அட்டைகளில் பொருத்தப் பட்டிருக்கும். தன் தலை முடியில் வர்ணக் கலவைகளை நனைத்துக்கொண்டு துணியில்-தனது தலையினை அங்கு மிங்கும் ஆட்டியவண்ணம் மையினைப் பூசுகிறான். இந்தப் பணி நடக்கும் போது எத்தகைய உருவம் அமைகிறது என்பதை ஸ்கொட்டினால் பார்க்க முடியாது. ஆனால் தனது உள்ளுணர்வு அறிவுறுத்துவதற்கேற்ப ஓவியம் அமைந்து விடுகிறது என்று கூறுகிறான். பணி முடிந்ததும் தனது கட்டுகளை அவிழ்த்துக்கொண்டு கீழிறங்கிய பின்னரே ஓவியத்தைப் பார்க்கிறான்.

இவ்வாறு தனது தலை முடியினைத் தூரிகையாக்கி, இயல்புக்கு மாறாக வரையப்படும் ஓவியம் ஒவ்வொன்றும் 500 டொலர்வரை உடனடியாக விற்பனையாகிவிடுகிறது. இதனால் ஸ்கொட் புகழுடன் பணமும் குவிக்கிறான்.

**தகவல் பெட்டி**



# ஓநாய் பையன்



அருகில் சென்றால் கடித்துக் குதறுவான்

வட இந்தியாவில் ஒரு இரயில் பாதையில் ராமு ஓடிக்கொண்டிருக்கும்போது சிலரால் பிடிபட்டான். தன்னைப் பிடித்தவர்களைக் கடித்துக் குதறினான். கால்-கைகளில் கூர்மையுடன் நீளமாக வளர்ந்திருந்த நகங்களால் பிராண்டி காயப் படுத்தியுள்ளான்.

ராமு ஓடும்போது மிருகங்களைப்போல் கால்களையும் கைகளையும் நிலத்தில் குத்திய வண்ணம் பாய்ந்து பாய்ந்து வேகமாக ஓடியிருக்கிறான். இவனை லக்னோவிலுள்ள மருத்துவமனையில் வைத்தே பல்கலைக்கழக மேதைகள் இரு ஆண்டுகளாக ஆராய்ந்தனர். இப்பொழுதும் இவனுடைய 'மிருக' சுபாவத்தை மாற்றுவது கடினமாக இருப்பதாகவே விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

பாத்திரத்தில் வைக்கப் படும் உணவுப் பண்டங்களை கையால் எடுத்து உண்பதில்லை. வாயினால் கவ்வியே உண்கிறார். நீரை நாக்கினால் நக்கியே குடிக்கிறான். ஒரு வருடகால மாக சங்கிலியால் பிணைத்தே ராமுவை வைத்திருந்தார்கள்.

அவனருகில் எவர் போனாலும் பயங்கொள்ளுவான். அருகில் செல்வோரை கடித்துக் காயப்படுத்துவான். இப்பொழுது சமூகமாகப் பழக ஆரம்பித் துள்ள போதிலும் சில குணங்கள் மாற்ற மடைய வெகுகாலமாகலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

லக்னோவிலுள்ள பால்ராம்பூர் மருத்துவமனை உளவி யல் நிபுணரான டாக்டர் காளி பிரசாத் கருத்துத் தெரிவிக்கையில் ராமுவின் மூளை இன்னும் பக்குவப்படாத நிலையில் இருப்பதாகக் கூறினார்.

"இளமைக் காலம் முதல் காட்டில் மிருகங்களுடன் வாழ்ந்தமையினால் மூளை வளர்ச்சி குன்றியிருக்கிறது. அத்துடன் இவன் ஓநாய்களுடன் திரிவதை கண்கூடாக எவரும் காணவில்லை. இருப்பினும், இவனுடைய நடவடிக்கைகள் அத்தனையும் ஓநாய்களினுடையவற்றையே ஒத்ததாக இருக்கின்றன" என்கிறார் அவர்.



## நீ பாதி நான் பாதி


அவுஸ்திரேலிய மிருகக் காட்சிச்சாலையில் கமரா 'காச்' பிடித்த அற்புதக் காட்சி. அணைத்தபடி அன்பைப் பரிமாறும் கங்காருகள் இரண்டு.



## மலை மகிழ்வு

சாய்ந்திருக்கும் மலையின் பெயர் கேரல்வான் ஆஸ்வெகன். தற்போதைய எடை ஆக 184 கிலோ மட்டும்தான். அதனால் சந்தோசமாக இருக்கிறார். 1985ல் 221 கிலோவாக இருந்து இப்போது 7 கிலோ குறைந்திருப்பது சந்தோசம்தானே!

## வயது



## சிறிது வாங்கிய பட்டம் பெரிது

சிறு வயதில் அபார மூளைசாலிகள் பட்டியலில் மைக்கேல் கீர்ணி என்னும் பெயரையும் குறித்துக்கொள்ளலாம்.

மைக்கேல் கீர்ணியின் வயது பத்து. தெற்கு அலபாமா பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவுக்கு 4 அடி 4 அங்குல உயரமான பத்து வயது மைக்கேல் மேடையேறியபோது சபை வியப்பில் ஆழ்ந்தது. மனித இயல்துறையில் பட்டதாரியாகி தனது அபார திறமையை அவன் வெளிப்படுத்தியுள்ளதை பட்டமளிப்புக் குழு அறிவித்தபோது சபையில் எழுந்த கரகோஷம் அடங்க நீண்டநேரம் பிடித்தது.

ஆறு வயதில் அவனது தனித்தன்மை பளிச்சிட்டது. பெற்றோரும் ஆசிரியர்களும் ஊக்குவித்ததில் பத்துவயதில் மைக்கேல் பட்டதாரியாகிவிட்டான்.

# மினி சினி

- 'பாட்சா' படத்திற்காக 250 மெட்டுக்களை ரஜினி, சுரேஷ்கிருஷ்ணாவிடம் போட்டுக் கொடுத்தார் தேவா. 'அண்ணாமலை' படப் பாடல்கள் ஹிட்டானது போன்று 'பாட்சா' படப் பாடல்களும் ஹிட்டாக வேண்டும் என்று தனிக் கவனம் செலுத்தியுள்ளார் தேவா.
- 'கு கிங்' மலையாளப் படத்தில் மம்முட்டிக்கு ஜோடியாக நடித்துள்ள சுகன்யா, அடுத்து 'நாசரிதம்' என்ற மலையாளப் படத்தில் நடிக்கவுள்ளார். இந்தப் படத்திலும் மம்முட்டியே கதாநாயகனாக நடிக்கவிருக்கிறார்.
- சின்னவர் படத்தைத் தயாரித்த இந்திரானி மூவீஸ் நிறுவனம் அடுத்து பிரபு நடிக்கும் புதிய படமொன்றைத் தயாரித்துள்ளது. இப்படத்தை கே.எஸ்.ரவிக்குமார் இயக்கவுள்ளார்.
- திருவாழ்வில் அதிகமாகப் புத்தகங்களைப் படிக்கும் ரோஜா, கார் வண்ணன் இயக்கும் 'தொண்டன்' படத்தில் நாயகி வேடத்தில் நடித்து வருகிறார்.
- 'மெய்க்காப்பாளன்' படத்தை அடுத்து ராஜசேகர் தெலுங்கில் நடித்து தமிழில் மொழிமாற்றப்பட்டு வரவுள்ள படங்களின் பெயர், 'தலைவா தலைவா', 'மனிதா மனிதா'. இதை அடுத்து அவர் நேரடியாகத் தமிழில் நடிக்கும் படத்தின் பெயர் 'மனிதா மனிதா'.
- சத்தியராஜ் தமிழில் நடித்த 'பிரம்மா' இந்தியில் தயாராகி வருகிறது. தமிழில் சத்தியராஜ், குஷ்பு, பானுப்ரியா நடித்த வேடங்களில் இந்தியில் முறையே, கோவிந்தா, மதுபாலா, ஆயிஷா ஜுல்கா ஆகியோர் நடித்து வருகின்றனர்.
- நெப்போலியன் நடிக்க, எஸ்.ஏ. சந்திரசேகரன் இயக்கித் தயாரிக்க இருந்த 'பெரிய மருது' பட வேலைகள் நிறுத்தப்பட்டு விட்டன. இப்போது அதே கதை சில மாற்றங்களுடன் 'தேவா' என்ற பெயரில் விஜய் கதாநாயகனாக நடிக்க தயாரிக்கப்பட்டு வருகிறது.
- இதுவரை கஸ்தூரிக்காக வேறு ஒருவர் பின்னணி பேசி வந்தார். அண்மையில் அவர் நடித்து வெளியான 'ராஜபாண்டி' படத்தில் கஸ்தூரி முதன் முறையாக சொந்தக் குரலில் பேசி நடித்துள்ளார்.
- எம்.எஸ். விஸ்வநாதன், இளையராஜா, தேவா ஆகிய இசையமைப்பாளர்களைத் தொடர்ந்து 'மிஸ் ரேவதி' என்ற படத்தில் இசையமைப்பாளர் சிற்பி ஒரு பாடலைப் பாடியுள்ளார்.
- ஷோபனாவுக்கு தேசிய விருது பெற்றுக் கொடுத்த மலையாளப் படமான 'மணிச்சித்ரதாழ்' படம் தமிழில் தயாரிக்கப்படவுள்ளது. ஷோபனா ஏற்றிருந்த வேடத்தை தமிழில் முன்னணி நாயகி ஒருவர் ஏற்று நடிக்கவுள்ளார்.
- 'கடல்புறா' படத்தின் மூலம் அறிமுகமான பாபு கணேஷ் அடுத்து கதை, திரைக்கதை, வசனம் எழுதி, இசையமைத்து, இயக்கி, கதாநாயகனாக நடிக்கும் படத்திற்கு 'பாரதி' என்று பெயரிட்டுள்ளது.



முகப்பில்
ஜெயராம்-யுவராணி
படம்-நிலா

பிருதிவிராஜ்-மீரா
படம்-தாட்பூட் தஞ்சாவூர்

## மாறியது பெயர்

சரவணன் நடித்துவரும் 'அழகு சுந்தரம்' படத்தின் பெயரை 'சுந்தரம் ப்ரண்டு' என்று மாற்றிவிட்டார்கள். முன்பு இப்படத்தில் கதாநாயகியாக வைதேகி நடிப்பதாக இருந்தது. அவர் திருமணம் செய்துகொண்டு விட்டதால் வைதேகி நடிக்க இருந்த வேடத்தில் சொர்ணா நடித்து வருகிறார்.

## 'ஆம்னி' அங்கே?

'ஆம்னி'யிடம் கவர்ச்சி தேவையான அளவுக்கு இருக்கிறது. நடிப்புத் திறமை மட்டும் அப்படி இப்படித்தான். 'பாலைவனப் பறவைகள்' படத்தில் அறிமுகமான மீனாட்சி என்ற பெயரில் 'பாலைவன...' போக தெலுங்கில் புகுந்தார். அங்கு 'ஆம்னி' தமிழில் வாய்ப்பு இல்லாமல் ... கவர்ச்சியைப் பிழிந்து கொட்டினார். ... படத்தில் நடிக்க மீண்டும் தமிழில் விஜயகாந்துடன் 'ஆனஸ்ட் ராஜ்' ... தாராளமாக உடலைக்காட்டி பிரவேசித்தார். தமிழிலும் இரவுசகம் காட்டாமல் ... நடித்தபோதும் தொடர்ந்து வாய்ப்பு வரவில்லை. அதனால் மீண்டும் தெலுங்குப் பக்கம் போய்விட்டார் 'ஆம்னி'.

ஆம்னி

## நாயகன் இறக்குமதி

அபிலாஷா தயாரித்து நடித்த 'பாதுகாப்பு' படத்தை இயக்கியவர் என்.ஏ.சந்திரமோகன். இவர் தற்போது 'பாடும் பாடல் உனக்காக' என்ற படத்தை இயக்க இருக்கிறார். இந்தப் படத்தில் கதாநாயகனாக நடிப்பதற்காக நவின் என்ற புதுமுகத்தை பம்பாயிலிருந்து இறக்குமதி செய்திருக்கிறார். இதுநாள்வரை பம்பாயிலிருந்து நாயகிகளை இறக்குமதி செய்து வரும் தயாரிப்பாளர்களும், இயக்குநர்களும் தற்போது நாயகர்களையும் இறக்குமதி செய்யத் தொடங்கிவிட்டனர்

## 'டேக் இட் ...'

தானே படத்தை தயாரித்த ராதிகா ... தயாரிக்கிறார். ராதிகாவின் ... தெரியும். ஒரு படத்தில் ... பெயர்தான் ஹீ விக்னேஷ் ... 'டேக் இட் ஈஸி ஊர்வசி' ... டகாஸ். ஒரு ... இன் பெண்ணுக்கும் ... ஆண் நண்பர்களுக்கும் ... நடபை வைத்து கதை உருவாக்கியுள்ளார்கள்.

## கண்ணாடிக் குஷ்பு

குஷ்புவுக்கு வயதாகிவிட்டதா என்ன? விஷயம் வேறொன்றுமில்லை. இப்போதெல்லாம் குஷ்பு கண்ணாடி அணியத் தொடங்கிவிட்டார். படப்பிடிப்பின் ஓய்வு நேரத்தில் ஏதாவது புத்தகம் படிக்க வேண்டி இருப்பின் அணிந்து கொண்டுதான் படிக்கிறார். வீட்டில் இருக்கும்போதுகூட பெரும்பாலும் கண்ணாடி அணிந்துதான் காணப்படுகிறார். விசாரித்தபோது ஒற்றைத் தலைவலி காரணமாகத்தான் கண்ணாடி அணிகிறேன் என்கிறாராம்.

## நக்மாவுக்கு அதிகம்

ரஜினிக்கு ஜோடியாக 'பாட்சா'வில் நடிக்க ஒப்பந்தமான பின்னர் தனது சம்பளத்தை பல லகரங்களாக உயர்த்தியுள்ளார் நக்மா.

அர்ஜுன் நடிக்கும் புதிய படமொன்றில் கதாநாயகியாக நடிப்பதற்கு நக்மாவை ஒப்பந்தம் செய்யப்போன தயாரிப்பாளர் அவரது சம்பளத்தைக் கேட்டதும் உடனடியே வேறொரு நடிகையை ஒப்பந்தம் செய்துள்ளார்.

## ஆடாமல் நடிக்க ஆசை

'முதல் பயணம்' படத்தில் ஷாமிலியுடன் சேர்ந்து நடனமாடிய விமல்ராஜ், தான் ஒரு டான்ஸர்தான் என்றாலும், இனியும் ஒரு பாடல் காட்சிக்கு மட்டும் ஆடாமல் நல்ல வேடங்களில் நடிக்கப் போவதாகவும் 'முதல் பயணம்' தான் ஏற்கனவே ஒப்புக்கொண்ட படம் என்று தனது நண்பர்களிடம் கூறியுள்ளார்.

இவரது இந்தத் திடீர் மாற்றத்திற்குக் காரணம், இவர் மெயின் வில்லனாக நடித்த 'ஜெய்ஹிந்த்' படம் வெற்றி பெற்றதுதானாம்.

## சரத் ராசி

பவித்திரன் இயக்கிய எல்லாப் படங்களிலும், 'வசந்தகாலப் பறவை', 'சூரியன்', 'ஐ லவ் இந்தியா', இந்தப் சரத்குமார் நடித்துள்ளார்.

தற்போது பவித்திரன்-சரத்குமார் கூட்டணியில் 'மூக்குத்தி காசி' வளர்ந்து வருகிறது. 'மூக்குத்தி காசி' முடிவடைந்ததும் பவித்திரன் இயக்கத்தில் சரத் நடிக்கவில்லை. விஜயகாந்த் நடிக்கிறார். படம் திருமூர்த்தி. சரத் ஏன் விலகிச் சரத்திற்கும், பவித்திரனுக்கும் இடையில் ஏதாவது தகராறா? என்ற பேச்சுக்கள்தான் திரையுலக வட்டாரங்களில் அடிபடுகிறது.

## மீனா பற்றி சில தகவல்கள்

அறிமுகமான படம் 'எங்கேயோ கேட்ட குரல்'. அதில் ராதாவின் மகளாக நடித்தார்.

மொத்தம் 45 படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்துள்ளார்.

முதல் படத்தில் கதாநாயகியாக நடித்தபோது 8ம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். கதாநாயகியாக தமிழில் நடித்த முதல் படம் 'என் ராசாவின் மனசிலே'.

சிறந்த நடிகைக்கான 'நந்தி' விருதை ஒரு தடவை பெற்றுக்கொண்டார்.

தமிழில் ரஜினி, சத்யராஜ், பாக்யராஜ், சரத்குமார், கார்த்திக் என்று முன்னணி கதாநாயகர்கள் பலருடன் நடித்துவிட்டார். தற்போது மீனா எதிர்பார்ப்பது 'ஒரு ஊரில் ஒரு ராஜகுமாரி' படம் பிரமாதமாக ஓடவேண்டும் என்பதுதான்.

## இரு காதல...

பம்பாய் படவுலக கவர்ச்சி ... அலி. அவருக்கு ஒரு ... இந்திப்படவுலகில் ... கதாநாயகர்கள் ... கிசுக்கப்பட்டு ... இப்போது ஒரே நேரத்தில் ... கிசுக்கப்படுகிறா...

சோமி அலியால் ... காதலிக்கப்படும் இருவரில் ... கான். மற்றவர் ... கான். சோமி அலி ...

கொஞ்சம் அதிகம் ... இப்போதுதான் காதலிக்கி... சல்மான்கான் சங்கீதா...

சோமி அலியையும் ... சந்தித்தும் கொ... ஒரு முறை சல்மானும் ... சோமி அலி வீட்டில் ... சந்தித்துக் கொள்ள, இரு... இல்லாமல் நாசுக்காக ... அனுப்பிவைத்தாராம் ...







கார்த்திக்-சௌந்தர்யா
படம்-முத்துக்காளை



"மனிதருக் குள்ளே சமத்தன்மை தொடர்
ந்றுஞ் சகோதரத் தன்மை
யாருக்கும் தீமைசெய் யாது- புவி
யெங்கும் விடுதலை செய்யும்."
-சுப்பிரமணிய பாரதியார்-



## மழை செய்த பிழை

சின்னச் சின்ன துளிகளாய்
சிதறி மழை கொட்டுது
பென்னம் பெரிய வெள்ளமாய்
பெருக் கெடுத்து ஓடுது
முன்னும் பின்னும் தண்ணீராய்
முட்டி மோதிக் கொள்ளுது
என்ன மாரி காலமோ?
எங்கும் மழைக் கோலமே.
□□
ஓலைக் குடிசை எங்கும்
ஒழுகி வெள்ள மாகுதே
வேலை வெட்டி செய்யவே
வெள்ளம் வந்து தடுக்குதே.
ஏழை மக்கள் வெள்ளத்தால்
ஏங்கி நித்தம் தவிக்கிறார்.
காலை மாலை எப்போதும்
கண்ணீர் விட்டு அழுகிறார்.
□□
வானம் அழுகின்றபோது
வையம் சிரிக்கும் என்றாரே!
வானம் அழுகின்ற போதினிலே
வையம் அழுவது பார்த்தீரா!
ஆனது ஆகி விட்டதப்பா!
அடடா! பாவம் ஏழைகள்!
தானம் தர்மம் செய்து
தயவாய் அவர்களைக் காப்போமே!

கிண்ணிக்கன்னி ரஸ்னா
கிண்ணியா-02.

## பாப்பா முரசு சிறுகதை

# படித்தால் மட்டும் போதுமா?

அந்த ஊரில் அரியநாயகம் என்ற பண்டிதர் ஒருவர் இருந்தார். இவர் பல பண்டிதர்களுடன் போட்டியிட்டு, அவர்களைத் தோற்கடித்துப் பாராட்டுதல்களும், பரிசும் பெற்றவர். இதனால் இவருக்குக் கர்வம் வந்துவிட்டது.

தனக்கு மிஞ்சிய பண்டிதர் இவ்வுலகத்தில் இல்லை. இனி புதிதாக யாரும் பிறக்கப் போவதுமில்லை, என்ற கர்வமே அவருக்கு ஏற்பட்டது.

தெருவில் யார் போனாலும் சரி அவரை அழைத்துப் பெரிய பெரிய கேள்விகளையெல்லாம் கேட்பார். அவர்கள் பதில் சொல்ல முடியாமல் திணறுவதைப் பார்த்துக் கேலி செய்வார். இதனால் அந்த ஊர் மக்கள் இவரது தொல்லை தாங்க முடியாமல் வேறு தெரு வழியாகச் செல்வார்கள். இதனால் பண்டிதருக்கு மேலும் கர்வம் ஏற்பட்டது.

ஒருமுறை பக்கத்து ஊரில் அறிவுப் போட்டி நடக்க இருக்கும் விஷயத்தைக் கேள்விப்பட்டார் பண்டிதர். அந்தப் போட்டியில் கலந்துகொள்வதற்காக ஒரு வாடகை மாட்டு வண்டியை அமர்த்திக்கொண்டு அந்த ஊருக்குப் புறப்பட்டார்.

மாட்டு வண்டி ஒரு அடர்ந்த காட்டின் வழியே சென்று கொண்டிருந்தது. அதுவரை பேசாமல் இருந்த பண்டிதர், வண்டிக்காரனிடம் ஏதாவது கேள்வி கேட்டு அவனைத் திணறடிக்க வேண்டும் என்று தோன்றியது. உடனே அவர் வண்டிக்காரனிடம் ஒரு கஷ்டமான கேள்வியைக் கேட்டார். அதற்கு வண்டிக்காரன், "ஐயா! நான் அதிகம் படிக்காதவன். உங்கள் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை" என்று அமைதியுடன் சொன்னான்.

அதைக் கேட்ட பண்டிதர், "முட்டாளே கல்வியறிவில்லாமல் நீயெல்லாம் நாட்டில் ஏன் உயிரோடு நடமாடுகிறாய்? உன்போன்ற முட்டாள்கள் இருப்பதால்தான் நாட்டில் அதர்மங்கள் பெருகுகின்றன...படிக்காதவன் இதோ இந்த மாட்டிற்குச் சமம். எனக்கு மட்டும் அதிகாரம் இருந்தால், உன்னைப் போன்ற படிக்காதவர்களை எல்லாம் பிடித்து ஒரே நாளில் தூக்கில் போட்டு விடுவேன்," என்று கடுகுபோல வெடித்தார்.

வண்டிக்காரன் அதைக் கேட்டும் ஒன்றும் பேசாமல் மிகுந்த அமைதியுடன் வண்டியைச் செலுத்திக்கொண்டிருந்தான்.

அப்பொழுது...



ஒரு புதரினுள் இருந்து ஒரு புலி பாய்ந்து வந்தது.

புலியைப் பார்த்துப் பயந்த மாடுகள், உயிருக்குப் பயந்து தாறுமாறாக வண்டியை இழுத்துக்கொண்டு ஓடின. இதனால், வண்டிக்காரனும், பண்டிதரும் வண்டியிலிருந்து கீழே விழுந்தார்கள்.

அதற்குள் புலி அவர்களை நெருங்கி வந்துவிட்டது.

வண்டிக்காரன் விருட்டென்று எழுந்து பக்கத்தில் இருந்த மரத்தின் மீது ஏறிவிட்டான்.

மரம் ஏறத் தெரியாத பண்டிதர், "வண்டிக்காரா! என்னையும் மரத்தில் ஏற்றிவிடு," என்றார்.

அதற்கு வண்டிக்காரன், "ஐயா! நீங்களோ படிப்பறிவு மிகுந்த பண்டிதர். நானோ படிக்காதவன். அதுவும் இந்த மாட்டிற்குச் சமமானவன். நீங்கள் என் உதவியை நாடுவது உங்களுக்குக் கேவலம்," என்றான்.

பண்டிதருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

"வண்டிக்காரா! உனக்குப் படிக்கத் தெரியாது. எனக்கு மரம் ஏறத் தெரியாது. ஆகவே, இருவருமே ஒரு விதத்தில் முட்டாள்கள்தான். தயவு செய்து படித்த முட்டாளான என்னை, படிக்காத முட்டாளான நீ காப்பாற்று," என்று பரிதாபமாகக் கெஞ்சினார் பண்டிதர்.


அவரது கர்வம் அழிந்துவிட்டது என்பதை உணர்ந்த வண்டிக்காரன், சிறிதும் தாமதிக்காமல் அவரையும் மரத்தில் ஏற்றிவிட்டான்.

புலி கண்ணில் இருந்து மறைந்த பின்னர்தான் பண்டிதருக்கு உயிரே வந்தது. அவர் வண்டிக்காரனைப் பார்ப்பதற்கே வெட்கப்பட்டார்.

"வண்டிக்காரரே! என் உயிரைக் காப்பாற்றியதோடு அல்லாமல், என் கர்வத்தையும் அழித்து என்னைப் புதிய மனிதனாக்கினாய். உண்மையில் மனிதப் பண்புகளுள்ள நீதான் உண்மையான பண்டிதர். உன்னிடம் என் ஞானம் தோற்றுவிட்டது. ஆகவே அந்தப் பண்டிதர் போட்டியில் கலந்துகொள்ள நான் தகுதியற்றவன். ஆகவே நாம் ஊருக்கே திரும்பிச் செல்லலாம்" என்றார் பண்டிதர்.

வண்டிக்காரன் பெரிதும் அக மகிழ்ந்து, புலிக்குப் பயந்து ஓடிய மாடுகளையும், வண்டியையும் தேடிக் கண்டுபிடித்து, அதில் பண்டிதரை ஏற்றிக்கொண்டு ஊர் திரும்பினான். ■

## செய்து பாருங்கள்



ஒரு ரென்னிஸ் பந்தை எடுத்து அதை உங்கள் வலது கையில் வைத்துக் கொள்ளவும். இரு கைகளையும் நீளமாக விரிக்கவும். வலது கையில் இருக்கும் பந்தை உருட்டி தோள் வழியே வரச் செய்து அதை மார்பில் தாங்கி பின் அதை இடது தோளில் செலுத்தி உருட்டியபடியே இடது கைக்கு போகச் செய்ய வேண்டும். பந்தை விரல்களால் தொடக்கூடாது. கைகளை நீட்டியபடியே இப்படிச் செய்யவேண்டும். பலமுறை முயற்சித்தால் இதில் வெற்றி பெறலாம். உங்களது சமன் செய்யும் திறனையும், கவனத்தையும் இந்தப் பயிற்சி மூலம் வளர்த்துக்கொள்ளலாம். இதேபோல இடது கையிலிருந்து வலது கைக்கும் பந்தைப் போகச் செய்யலாம்.

## குறித்துக்கொள்ளுங்கள்

01. இலங்கையின் தேசிய மலர் எது? -அல்லி
02. தேசிய மரம் எது? -நாகா
03. தேசிய பறவை எது? -காட்டுக் கோழி
04. தேசிய மிருகம் எது? -யானை
05. தேசிய கீதத்தை உருவாக்கியவர் யார்? -ஆனந்த சமரக்கோன்
06. தேசிய கீதத்திற்கு இசை அமைத்தவர் யார்? -அமர தேவா.
07. பௌத்த கொடியை உருவாக்கியவர் யார்? -கேனல் ஒல்கொட்.
08. இலங்கைக்கான வரைப்படத்தை முதன் முதல் வரைந்தவர் யார்?-தொலமி
09. இலங்கைக்கான அரசியல் அமைப்புச் சட்டத்தை முதன் முதல் வரைந்தவர் யார்? -சேர் ஐவர் ஜன்னிங்ஸ்
10. இலங்கை பல்கலைக்கழகத்தின் முதல் உப வேந்தர் யார்?-சேர்.ஐவர் ஜன்னிங்ஸ்

உமா ஜெயந்தி மெய்யநாதன், உடபுசல்லாவ.

## கடல் பாம்பு



- **கடல் பாம்புகளில் எத்தனை வகை உள்ளன?**
அறுபது வகைக் கடல்பாம்புகள் உள்ளன. இந்திய, பசுபிக் பெருங்கடல்களின் சில இடங்களில் கரை ஓர நீரில் இவை உள்ளன.
- **கடல் பாம்புகள் எவ்வளவு நேரம் நீருக்குள் இருக்கும்?**
ஐந்து மணி நேரம்.
- **கடல் பாம்புகள் நிலப்பாம்புகளை விட எவ்வாறு வேறுபடுகின்றன?**
கடல் பாம்புகளுக்கு வால் தட்டையாக இருக்கும். அதை வைத்து அவை விரைவாக நீந்தும்.
- **இவற்றின் விஷத்தன்மை எப்படிப்பட்டது?**
கடல் பாம்பு ஒன்றின் ஒரு துளி விஷம் நன்கு வளர்ந்த நான்கு மனிதர்களைக் கொல்லக்கூடியது.
- **கடல் பாம்புகள் எங்கு முட்டையிடுகின்றன?**
பெரும்பாலான கடல் பாம்புகள் கடலுக்குள்ளேயே முட்டையிடும். சில கரைக்கு வந்து முட்டையிடும்.

## அறிவோம் மனதில் பதிவோம்



கனடா நாட்டில் 1685ம் ஆண்டு பிரான்ஸ் ஆதிக்கத்திலிருந்த பகுதியில் தான் காசுகளுக்கு கடும் பஞ்சம் ஏற்பட்டது. அப்போதிருந்த கவர்னர், விளையாடும் சீட்டுக்கட்டுகளில் தனது கையொப்பமிட்டு தாள் காசுகளாக மாற்றினார். இந்தக் காசுகள் 70 ஆண்டுகள் புழக்கத்தில் இருந்தன.

கடல் குதிரை எனப்படும் மீன், தன வாலினால் உயிரினங்களையும், செடிகளையும் வளைத்துப் பிடிக்கும். நீர்வாழ் உயிரினங்களில் இது ஒன்றிற்குத்தான் இந்தத் திறமை உண்டு.

05. அவள் என்னைத் தொட்டாள் என்னால் அவளை தொட முடியவில்லை. அது என்ன?
06. காய்க்கும் பூக்கும் கல கலக்கும் காகம் இருக்க கொப்பு இல்லை. அது என்ன?
07. ஒற்றைக் கால் கோழிக்கு வயிறு நிறைய முட்டை. அது என்ன?
08. கறுத்த வீதியில் வெள்ளைக் கார் ஓடுகிறது. அது என்ன?
09. கிணற்றைச் சுற்றி அத்திவாரம். அது என்ன?
10. குதிரை ஓடும்போது வால் குறையும். அது என்ன?
11. சிக்கு பட்டால் அவிழ்த்து எடுக்க முடியாது. அது என்ன?

**விடைகள்**

1. சப்பாத்துக்கள்ளி மரம்
2. அன்னாசிச்செடி
3. முட்டைப்பூச்சி 4. மீன் வீசும் வலை
5. காற்று 6. வேளாண்மை
7. செத்தல்மிளகாய் 8. கண் 9. கண் மயிர்
10. தையல் ஊசியும், நூலும் 11. இடியப்பம்

ஸமீம் முகமட் வெள்ளைத்தம்பி-கிண்ணியா-05.

01. ஓடினால் ஓடுவான். நின்றால் நிற்பான். யார் அவன்?
02. ஒற்றைக் காலில் நிற்கும் பறவையுமல்ல, தோகையை விரிக்கும் மயிலுமல்ல. அது என்ன?
03. கண்ணிருந்தும், பார்க்கமாட்டாள், இன்பத்திலும் துன்பத்திலும் கண்ணீர் வடிப்பாள். அவள் யார்?
04. பார்த்தால் கடலில்லை. ஆனால் நீருண்டு. அது என்ன?
05. மண்ணிலே பிறப்பேன். காற்றிலே பறப்பேன். நீரிலே மிதப்பேன். நான் யார்?
06. குற்றம் செய்யாமல் சிறைக்குள் இருப்பார்கள். யார் அவர்கள்?

**விடைகள்**

01. நிழல் 02. குடை 03. பேனை 04. கண்
05. தூசி 06. கடிகாரமுள்

எம்.என்.நிறாசா யோனகபுர, திக்வெல்ல.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 19.11.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 65
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல. 62

**பரிசுக்குரியவர்:**
எஸ்.ஏ.பாலச்சந்திரன்
சரஸ்வதி தமிழ் வித்தியாலயம்-மொனராகலை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

பி.விஸ்வநாதன்- ஆ/உடப்புத் தமிழ் மகா வித்தியாலயம்-உடப்பு.
எம்.இப்திகார் இஸ்மாயில்- க/வத்தேகெதர மு.வி- பொல்கொல்ல.
செல்வன் ஷஹிர்ஷா தாஹிம்- ஸாஹிறா மஹா வித்தியாலயம்-தர்கா நகர்.
ம.நளினி- மட்/கல்குடா நாமகள் வித்தியாலயம்-கல்குடா.
ஏ.ஏ.எம்.நிரோஸ்- அல்/பலாஹ் மகா வித்தியாலயம்-கொச்சிக்கடை.
ஜயந்திரநாத் தெய்வேந்திரன்- கோணேஸ்வர இந்துக்கல்லூரி- திருகோணமலை.
ஏ.ஆர்.பாத்திமா சலீம்- மாத்தளை.

## விடுகதைளும் விடைகளும்


01. பூப்பூவாய் உதிர்த்திடுவார் மரமுமல்ல. இருப்பதற்கு உகந்திடுவார் கதிரையுமல்ல, அது என்ன?
02. தொப்பி போட்ட பச்சை மச்சான் வந்து நிற்பான் சந்தையிலே. அது என்ன?
03. தன்னைக் கொன்றவனை புகை மூலம் கொல்லுவான். அவன் யார்?
04. குத்தின குத்தோடு குடல் நிறைந்த புண்ணோடு மடித்துக்கட்டின கட்டோடு வந்திறங்குவார், அவர் யார்?
05. மூன்று கண்களை உடைய தேவியார் நீரினைச் சுமந்து அந்தரத்தில் தொங்குகிறாள். அவள் யார்?
06. கிணற்றை வளைத்து கீரைக்கண்டு அது என்ன?

**விடைகள்**

01. திரு விலை 02. பச்சை மிளகாய்
03. சிகரட் 04. கடிதம்
05. தேங்காய் 06. கண் இமை

க.தவப்பிரியன்-தம்பிலுவில்-02.

01. ஆனை படுக்க நிழல் உண்டு. மிளகு சுருட்ட இலை இல்லை. அது என்ன?
02. மரம் அதற்கு மேல் காய், அதற்கு மேல் மரம். அது என்ன?
03. வட்ட வட்ட சொக்கனார், வால் இல்லாத சொக்கனார் என்னை வந்து எழுப்பினார். அது என்ன?
04. ஆயிரம் கண்ணுள்ள தேவி ஆற்றிலே முழுகி வெயிலிலே வாடுகிறாள்: அது என்ன?




## என்று வரும் (மு) விடிவு?

இருக்கின்ற குடிசையது ஓட்டை!–பாழ்
இரவினிலே நுளம்புடனே மூட்டை!
வரும் மழையால் சிறு குடிசை, குட்டை!–இல்
வாழ்வினிலே பெற்றதெலாம் பெட்டை!

காதலுடன் கைப்பிடித்த வஞ்சி–நாளும்
களிப்புடனே வழங்குவதே கஞ்சி!
சாதனைதான் மக்கள் மொத்தம் ஆறு!–என்
சரித்திரத்தில் பெற்ற பெறுபேறு!

வறுமையது நிதமென்னை வாட்டும்!–வாழ்வில்
வளமில்லை; துயரத்தீ மூட்டும்!
இறந்தாலும் ஈயாத நெஞ்சர்!–சற்றும்
இரக்கமிலார், ஆமவர்கள் (ந)கஞ்சர்!

கற்றவன்நான் கவிபுனையும் கவிஞன்!–வாழும்
கலையுலகு மதிக்குமொரு கலைஞன்!
பெற்ற சுகம் உலகினிலே வறுமை!–துயர்
பெற்றாலும் ஒருவகையில் பெருமை!

மனைவியுடல் காணவில்லைத் தங்கம்!–என்
மாதரசி தானெனக்குத் தங்கம்!
நினைவலைகள் பழையகதை சொல்லும்!–அன்று
நிகழ்ந்தவைகள் என் மனதைக் கொல்லும்!

ஆண்டவனே எனக்கெப்போ விடிவு?–காணும்
அல்லலுக்கு என்று வரும் முடிவு?
வேண்டுகிறேன் நல்வழியைக் காட்டு!–இன்றேல்,
விரைவினிலே என்னுயிரை ஓட்டு!

அ.கௌரிதாசன்–ஆலங்கேணி கிழக்கு.

## 'டயரிப்' பூக்கள்..!

நிஜங்களின்
நிழல்கள்..!

•

வடிக்கப்பட்ட
வாழ்க்கை
வரிகள்..!

•

நிகழ்வுகள்
நீந்தும்
பூஜ்ஜிய
விம்பங்கள்..!

•

சுவடுகள்
சுடுபட்ட
எச்சங்கள்..!

•

கனவை
கடந்த
கற்பனைகளின்

கவிச்செதுக்கு..!

•

மொத்தத்தில்..
வாழ்க்கைப் பூவின்
இதழ்ப் பரப்பில்
விழுந்த
பனித்துளியின் பசுமை
நிழல்..!

பாணகமுவ–எஸ்.முஸ்தாக்.

## முடிவிலிப் பயணம்!

கனவுப் பைகள்
தினமும் நிறைய
உணவுப் பைகள்
உலர்ந்து காய
ஏழை உடல்கள்
ஏக்கப் பயணம்!...

சந்தோஷத் தரிப்பிடங்கள்
எங்கோ தொலைவில்
நெளியும் நம்பிக்கையில்
நீண்டு செல்லும் இந்த
முடிவிலிப் பயணம்!

சின்னச் சின்ன
ஆசைகள் சேர்ந்து
பேராசையாக முகிழும்போது
விழியில் மின்னும்
ஒளிக்கீற்றுக்கள்
கண்ணீர் இருட்டில்
மறைந்து போகும்!

நம்பிக்கைச் சந்திப்புக்கள்
ஏமாற்றப் பிரிவுகளாய்
முடிவுறும் வேளைகளில்
இதயச் சுவர்கள்
இடிந்து போனாலும்
இன்னும்! இன்னும்!
பயணம் தொடரும்!

காத்தான்குடி சுபைர்கான்.

## பூ

வாசத்திற்கு இல்லாமல்
நேசத்திற்காக
இரு இதழ்களால்
பூக்கும் பூ

••

மாலைக்குள் சேராது
பூஜைக்கும் போகாது
வாடி வதங்கி
கசங்கிக் கருகாத
புதுமை பூ

••

அமுதத்தை
அருவியாய் சுரக்கும்
அற்புதப் பூ
ஆனால்
வண்டுகளின் தொல்லை
அதற்கு இல்லை

••

மஞ்சத்தின் பிரேரணையை
ஆமோதிக்கும்
மௌனப் பூ

••

மனசுக்கு
மருந்து போடும்
மூலிகைப் பூ
இது
விதைக்காமல் பூக்கிறது
உதிராமல் இருக்கிறது
காய் கனி
கட்டங்களை காணாமல்
வாழ்கிறது.

••

என்னில்
மரணிக்காத..
நான் இருந்தால்
பூத்துக்கொண்டே இருக்கும்
பூ
ஆமா...
என்னவளின்
சிரிப்பு

கதிர்–பிட்டியகந்த.

## தேசம் எரிகையிலும்...!

இந்த...
தேசத்தின் மீது,
நாசத்தின் காற்று
விசுவது எதனால்?

▫

சுத்தமான காற்றை(ச்)
சுவாசிக்கும்,
வகையறியாமல்,
நச்சுக் காற்றை(ப்)
பரவச் செய்வது ஏன்?

▫

சித்திரத்தைப்,
பார்க்க,
ஆசைப்பட்டு
சில்லறைகள்
இல்லாமல்...
கண்களை
விற்றுச் சித்திரம்
வாங்கியதாலா..?

▫

பொருளாதாரம்
தேடாமல்,
ஆயுதமே...
'ஆதாரம்' என்று
ஆணவம்,
வளர்த்ததனால்
ஐந்து விரலும்
ஒன்றிணைய முயலாமல்,
திசைமாறிப் போனதனால்,
'தீப்பற்றி' எரிவது
இந்த தேசந்தான்!

▫

அகதியாக
அலைகின்ற போதும்,
'அமைதி'தேடி
ஓடுகின்ற போதும்,
எங்கும்–
ஆயுதங்கள் மோதுகின்ற
ஒலி கேட்கும்!

▫

தீப்பற்றி...
எங்கள்,
'தேசம்' எரிகின்றபோதும்
தீந்தமிழில் கவிபாடும்
புலவர்கள்,
வயிற்றிலும்..
'வறுமைத்தீ'
எரியும்!

▫

காய்ந்த வயிறுகள்
இங்கே–
சோரும்போது,
கைகள்,
தூக்கிச் செல்லும்
ஆயுதத்தை!

▫

பொருளாதாரம்
இன்றியே..
இங்கொரு,
'போராட்டம்'தொடரும்!

▫

பகலெல்லாம்
வெய்யிலில் நின்று
'பாட்டாளி' வியர்வை
சிந்தி
சேர்த்துவைத்த
செல்வமெல்லாம்
திசையறியா
நடத்தைகளால்,
தீக்கிரையாகும்!

▫

போராட்டம் எங்கும்
நிதம்.
விழிகளில் நீரோட்டம்
எனினும்,
தொடர்கிறது
'பயணம்'தான்!

கல்வியூர் விஜயபாரதி
பெரியல்லாறு–1.

## மாலே பள்ளியெழுந்தருள்வாய்...

இறைவா மாலே மாயோனே
சற்றே கண் விழித்து
எங்களைப் பாருங்கள்...
ஏக்கப் பெருமூச்சோடு
எதிர்காலத்தை தினம்
எண்ணி...
நல்லொளியை
எதிர்பார்க்கும்
எங்களை
பள்ளியெழுந்து பாரும்
திருபாற்கடலை விட்டு
இங்கு வாரும்...

தினமும்
முகாரி ராகத்தை

பாடவிட்டு
அக்கினிக்காற்றை
சுவாசிக்க விடும்
அவலத்தை
அவனியிலே
அகற்றியருளும்....


உதயகாலப்..
பூபாளராகமதை
நாம் கேட்க
ஆவலாய் உள்ளோம்
பாவையர்
நாங்களென்ன

பாவம் செய்தோம்
பகவானே...
இதயக் கதவுகளை
இறுக மூடிவிட்ட
மானுடங்களின்
நிலைதனை
மாற்றி
பூட்டியகதவுகளை
அகல திறந்து
எங்களை
போக விடுங்கள்...

நாங்கள்...
புதிய காற்றை
சுவாசித்து

நல்லிதயமுள்ள
புதிய
சமுதாயத்தை
மலரவைத்து
அன்பூவினால்
உன்
பாதகமலமதை
அலங்கரிக்க
விரும்புகின்றோம்
பள்ளியெழுந்து
இங்கு வாரும்
பரந்தாமனே...

அக்கரைமரணிக்கவாசகம்.



## சின்னக் கவிகள்

என்னவளே,
எட்டிப்பார்
என் இதயத்தை..
கத்தை கத்தையாய்
கனவுத்தேக்கங்கள்..
எல்லாம்,

உன்
சிரிப்பில்
உதிர்ந்துவந்த
சினேகத்தின்
பாஷைகள்...
உன்
கடைக்கண்
பட்டுவந்த
காதலின் ராகங்கள்..


கற்பிட்டி முனாஸ்.

## சந்தியாவின் மகள்!





பார்த்த ஞாபகம் எப்படி இல்லாமல் போகும்? அந்தச் சுட்டிப்பெண்தான் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா. அருகில் இருப்பது அவரது தாயார் மறைந்த நடிகை சந்தியா. சந்தியாவும் எம்.ஜி.ஆரோடு நடித்தவர். சந்தியாவின் மகளோ அவரோடு நடித்தது மட்டுமல்லாமல் அவர் விட்டுச்சென்ற இடத்தையே பிடித்தும்விட்டார்.



## இந்த வாரம் உங்கள் பலன்

(13.11.94 முதல் 19.11.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

துலாம் - சூரியன், புதன், வெள்ளி, இராகு
விருட்சிகம் - வியாழன்
கும்பம் - சனி
மேடம் - கேது
கர்க்கடகம் - செவ்வாய்

சந்திரன்–கும்பம் மீனம், மேடம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்
17.11.94ல் விருச்சிகச் சூரியன்

### மீனம்: — சுப நேரம்

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | முயற்சி பலிதம், பணச்செலவு. | காலை 8 மணி |
| திங்கள்- | பொருள் வரவு, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | காலை 8 மணி |
| புதன்- | தன்னம்பிக்கை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்- | பொருள் செலவு, காரியத்தடை. | காலை 8 மணி |
| வெள்ளி- | உயர்ந்த எண்ணம், மனக்கலக்கம். | பி.ப 2 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்–வெள்ளி, அதிஷ்ட இலக்கம்– 2

### மேடம்: — சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | தொழில் மேன்மை, கௌரவம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | காரியத்தடை, மனச்சஞ்சலம். | காலை 7 மணி |
| புதன்- | புதிய முயற்சி, பெரியோர் நட்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- | உறவினர் பகை, வீண் வாக்குவாதம். | காலை 7 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், முயற்சிகள் பலிதம். | பகல் 11 மணி |
| சனி- | செலவு மிகுதி, புதிய தொழில் வாய்ப்பு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்–திங்கள், அதிஷ்ட இலக்கம்–2

### இடபம்: — சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | குடும்ப சுகம், நற்காரிய மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- | தெய்வானுகூலம், செல்வாக்கு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | திடீர்ப்பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 8 மணி |
| வியாழன்- | தொழில் மந்தம், பணச்செலவு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | தேகசுகம் பாதிப்பு, மனக்கவலை. | பி.ப. 4 மணி |
| சனி- | மனக்கிலேசம், திடீர் சுகயீனம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்–செவ்வாய், அதிஷ்ட இலக்கம்–4

### மிதுனம்: — சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வெளியிடப் பயணம், கௌரவநிலை. | காலை 8 மணி |
| திங்கள்- | முன்னேற்றமிகுதி, செல்வாக்குநிலை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பி.ப. 3 மணி |
| புதன்- | வெளிவட்டாரப் பழக்கம், கௌரவம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | துயர்நிலை நீங்கும், முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| வெள்ளி- | தன்னம்பிக்கை, செல்வாக்கு மேன்மை. | பகல் 12 மணி |
| சனி- | உயர்ந்த நிலை, பொருள் வரவு. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்–வெள்ளி, அதிஷ்ட இலக்கம்–5

### கும்பம்: — சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | கௌரவம், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், செல்வாக்கு. | காலை 9 மணி |
| புதன்- | பயனற்ற செயல், பணவிரயம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | பெரியோர் சகவாசம், இல்லச்சிறப்பு. | காலை 7 மணி |
| வெள்ளி- | மனக்குறை நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| சனி- | தனலாபம், உயர்ந்தநிலை. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்–செவ்வாய், அதிஷ்ட இலக்கம்–9

### கர்க்கடகம்: — சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | உறவினர் உதவி, மனத் தைரியம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வீண் கவலை, மனக் குறை அதிகம். | காலை 8 மணி |
| புதன்- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | துயர்நிலை நீங்கும், முன்னேற்றம். | காலை 9 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, அற்ப பலன். | பகல் 11 மணி |
| சனி- | கடன் பயம், பணத்தட்டுப்பாடு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்–புதன், அதிஷ்ட இலக்கம்– 6

### மகரம்: — சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| திங்கள்- | கடன்தொல்லை, மனப்பயம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | வீண்குறை கேட்டல், தொழில் மந்தம். | பகல் 11 மணி |
| புதன்- | துயர் நீங்கும், காரியானுகூலம். | காலை 6 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயணம், அந்நியர் சகவாசம். | காலை 7 மணி |
| வெள்ளி- | தொழில் விருத்தி, துயர் நீங்கும். | பகல் 12 மணி |
| சனி- | செலவு மிகுதி, ஆடம்பர வாழ்க்கை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்–திங்கள், அதிஷ்ட இலக்கம் –7

### சிம்மம்: — சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் சேதம், மனப்பயம். | காலை 8 மணி |
| திங்கள்- | தன்னம்பிக்கை, வீண் வாக்குவாதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, செலவு அதிகம். | காலை 6 மணி |
| புதன்- | உறவினர் கலகம், மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், பொருள்பேறு. | காலை 9 மணி |
| வெள்ளி- | பயனுள்ள செயல், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- | வீண்குறை கேட்டல், தொழில் மந்தம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்–வியாழன், அதிஷ்ட இலக்கம்–4

### தனு: — சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- | மனக்கவலை நீங்கும், பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | உறவினரால் மகிழ்ச்சி, தொழில் விருத்தி. | காலை 8 மணி |
| புதன்- | காரியானுகூலம், பணத்தடை நீங்கும். | காலை 9 மணி |
| வியாழன்- | மனக்கவலையதிகம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | தொழில் நிலை முன்னேற்றம், பணவரவு. | பகல் 11 மணி |
| சனி- | பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்–புதன், அதிஷ்ட இலக்கம் –5

### விருட்சிகம்: — சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் உதவி, மனக்கவலை நீங்கும். | காலை 8 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, தொழில் மேன்மை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | தனலாபம், மனக்குறை நீங்கும். | காலை 10 மணி |
| புதன்- | வீண் மனஸ்தாபம், முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | தனலாபம், தொழில் சிறப்பு. | காலை 10 மணி |
| வெள்ளி- | பணக்கஷ்டம், உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| சனி- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்–வெள்ளி, அதிஷ்ட இலக்கம்–6

### துலாம்: — சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்த நிலை, கௌரவம். | பகல் 12 மணி |
| திங்கள்- | தொழில் நிலை சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | மனக்குறை நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| புதன்- | தொழில் மந்தம், பணத்தடை. | காலை 7 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 10 மணி |
| சனி- | தொழில் விருத்தி, பணவரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்–புதன், அதிஷ்ட இலக்கம்– 7

### கன்னி: — சுப நேரம்


(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, கௌரவம். | காலை 7 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, உயர்ந்தநிலை. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | கடன்தொல்லை, மனப்பயம். | காலை 7 மணி |
| புதன்- | புதியமுயற்சி, முதலீட்டு மந்தம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 9 மணி |
| வெள்ளி- | மனப்போராட்டம், அதிகாரவிருத்தி. | பகல் 12 மணி |
| சனி- | தனலாபம், செய்தொழில் விருத்தி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்–திங்கள், அதிஷ்ட இலக்கம்– 3

# மருத்துவ ✝ விந்தைகள்

## அழுதால் இவன் உயிர் பிரியும்!



குழந்தைகள் அழுவது தவிர்க்க முடியாததொன்று. தங்களுடைய உணர்வுகளை-பிரச்சனைகளை வெளிப்படுத்த அவர்கள் கையாளும் ஒரேமுறை அழுகை தான். ஆனால், கனடா-ரொறன்ரோவைச் சேர்ந்த 17 மாதக் குழந்தை ஜோசப் லிடானோ அழுதால் அவன் உயிர் அக்கணமே பிரிந்துவிடும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

சின்னஞ் சிறிய இந்த அழகிய பாலகனுக்கு இதுவரை இரண்டு பாரிய சத்திர சிகிச்சைகள்- அவனுடைய மூளையில் மேற்கொள்ளப்பட்டன. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஜோசப் 6 தடவைகள் மாரடைப்பினால் அவதியுற்றான். மூளைக்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் நரம்புகளில் ஏற்படும்- 'மொயாமொயா' என்ற அபூர்வமான நோயினால் இவன் பாதிக்கப்பட்டுள்ளான். இறுதியாக இவன் தாக்குண்ட போது இவனுடைய உடலின் ஒரு பகுதி இயக்கம் நின்றுபோய்விட்டது. சத்திர சிகிச்சையின் பின்னர் உடலின் இயக்கம் சீர்செய்யப்பட்டது.

மருத்துவமனையில் பல மாதங்களைக் கழித்த ஜோசப்பை அவனுடைய தாயாரான பாற் டார்லிங் என்பவரிடம் ஒப்படைக்கும் போது மருத்துவர்கள் விடுத்த எச்சரிக்கை இதுதான்: "ஜோசப் அடுத்த 3 மாதங்களில் ஒரு தடவையாவது அழவே கூடாது. அவன் அழுதால் மூளைக்கு குருதியைக் கொண்டு செல்லும் நாளங்கள் இயங்க மறுத்துவிடும். உடனடியாக அவனுடைய உயிர் பிரிந்துவிடும்" என்று கண்டிப்புடன் கூறியுள்ளனர்.

குழந்தையை அழாமல் பார்த்துக் கொள்வது என்பது 'பகிரதப் பிரயத்தனமாகும்'. இருப்பினும் ஜோசப்பின் தந்தையான ரொம் லிடானோவும் தாய் பாற்றும் மாறி மாறிக் கண் விழித்து குழந்தையின் அருகிலேயே உள்ளனர். குழந்தை தூங்கி எழும் போது அவர்களில் ஒருவராவது அவன் கண் எதிரே நின்று ஏதாவது வேடிக்கை காட்டி அவனை அழாமல் பாதுகாக்கின்றனர். நள்ளிரவானாலும் குழந்தை வீட்டைவிட்டு வெளியே போகவேண்டும் என்று கருதுமானால் உடனடியாக வெளியே கொண்டுவந்து விடுகின்றனர். அதிகாலை 2.00 மணிக்கும் தங்கள் காரில் குழந்தையை வைத்து சவாரி செல்லவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகிறதாம்!

## சரியா-தப்பா?

இன்றைய நமது சமூகத்தினர் மத்தியில் அநேகருக்கு நிலவிவரும் நீரிழிவு நோயைப் பற்றி மக்கள் மத்தியில் சரியும் பிழையுமான இரு கருத்துக்கள் நிலவி வருகின்றன. அவற்றில் சில கீழே தரப்படுகின்றன.

### பிழையான கருத்து

01. சிறு நீர்ப் பரிசோதனை மூலம் நீரிழிவு நோயை கண்டுபிடித்துவிடலாம்.
02. நீரிழிவு நோய்க்கான மாத்திரைகள் உட்கொள்ளுதல் அல்லது இன்சுலின் ஏற்றிக்கொள்ளும் பட்சத்தில் உணவு கட்டுப்பாடு முக்கிய மானதல்ல.
03. நீரிழிவாளர் சீனிக்குப் பதிலாக வெல்லம், பாணி போன்றவை பாவிக்கலாம்.
04. இன்சுலினுக்கு பழக்கப்பட்ட நோயாளருக்கு மாத்திரைகள் பயனளிக்க மாட்டாது.

### சரியான கருத்து

01. இரத்தப் பரிசோதனை மூலமே நீரழிவை கண்டுபிடிக்க முடியும். (அதிலும் இரவு ஆகாரத்துடன் பரிசோதனைக்கு இரத்தம் எடுக்கும் வரை எதையும் அருந்தாதிருத்தல் அவசியமாகும்)
02. நீரிழிவாளருக்கு எவ்வாறான சிகிச்சை அளிக்கப்பட்டாலும் உணவுக் கட்டுப்பாடு மிகமிக முக்கியமானதாகும்.
03. சீனியைப்போல் கருப்பட்டி, வெல்லம், பாணி இவை அனைத்துமே நீரிழிவாளருக்கு பாதிப்பையே ஏற்படுத்தும்.
04. இன்சுலின் ஊசி மருந்துக்கு உடல் பழக்கப்படுவது கிடையாது. ■



## சுவரில்லா சித்திரம்



'சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்' என்ற முதுமொழியைச் சொல்ல முன்னர் இவரை ஒரு தடவை பார்த்துவிடுங்கள். மேலை நாடுகளில் உடலை வைத்து என்னென்ன செய்யலாம் என்று படு தீவிரமாகத்தான் யோசிக்கத் தொடங்கிவிட்டார்களாக்கும்!

## புற்றுநோய் சற்றும் வராமலிருக்க... புற்று நோயைக் கட்டுப்படுத்தும் விட்டமின் பதார்த்தங்கள்:

மாம்பழம், பப்பாசி, தோடம் பழங்கள், கரட், பூசணிக்காய், புதிய காய்கறிகள் மற்றும் கீரை வகைகளிலும் செறிந்து காணப்படும் விட்டமின் ஏ-ஈ ஜீவ பதார்த்தங்கள் புற்று நோயைக் கட்டுப்படுத்தவல்ல ஆற்றலைக் கொண்டுள்ளதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

புகைப்பிடிக்கும் பழக்கத்தை கொண்ட மக்களில் பலர் இந்த ஜீவ பதார்த்தங்களை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு இப்பார்த்தங்கள் அடங்கிய மாத்திரைகளை உட்கொண்டு வருகின்றனர். இவ்வாறு மாத்திரைப் பாவனையில் ஈடுபடும் மக்களில், புகைபிடிக்கும் பழக்கமற்றவர்களுக்கு சிறிது பயன் ஏற்பட்டாலும்கூட புகைப்பிடிக்கும் பழக்கமுள்ளோருக்கு இம் மாத்திரைகளால் எந்த பயனும் கிடைக்கப் பெறுவதில்லையென ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

பின்லாந்தை சார்ந்த 2800 புகைபிடிப்பாளர்களை கொண்டு கடந்த எட்டு வருட காலம் நடத்தப்பட்ட பரிசோதனை மூலம் இந்த உண்மை தெரிய வந்துள்ளதாக அவ் வைத்திய ஆராய்ச்சி அறிக்கை மேலும் தெளிவு படுத்தியுள்ளதாக, 'நியூஸ்வீக்' சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது. ■

## அன்புள்ள அத்தான் வணக்கம்!

## 52 வருசம் தாமதமான காதல் கடிதம்



வேரா

வோல்டர் மேசன் றோயல் பிரித்தானிய கடற்படை வீரன்.

உலகப் போர் மூண்டபோது வோல்டர் போருக்குச் சென்றான்.

தோளில் ஆயுதம் வைத்திருந்தான். மனதில் தன் காதலி வேரா என்ற அழகியை சுமந்துகொண்டிருந்தான்.

வோல்டரைப் பிரிந்த வோரா போர்முனைக்கு தன் பிரிய காதலனுக்கு கடிதம் எழுதினாள்.

'அன்புள்ள வோல்டர்! நலமா? நலமில்லை நான். காரணம் அருகிலில்லையே நீ!

'முதலில் என் முத்தங்களை வாங்கிக் கொள். இந்தா! என்ன போதாதா?

'இது அட்வான்ஸ் மாதிரித்தானே? நேரேவா. ப்ளீஸ் விரைவாய் வா. ஒட்டுமொத்தமாகத் தருகிறேனே.

'வோல்டர்! விழிப்பாயிரு. எனக்காக நீ சேதமில்லாமல் திரும்பி வரவேண்டும்....'



காதலர்களாக வோல்டரும் வேராவும்

என்றெல்லாம் எழுதியிருப்பாள் என்று கற்பனைதான் பண்ண வேண்டியிருக்கிறது.

காரணம் என்னவென்றால்...வேரா எழுதிய கடிதம் காதலனுக்கு உடனே கிடைக்கவில்லை.

இப்போதுதான் கிடைத்திருக்கிறது. அதாவது 52 வருடங்கள் கழித்துத்தான் 'கிடைத்திருக்கிறது.

கடிதம் கிடைத்தபோதும் வோல்டர் அதை உடைத்துப் பார்க்க மனமின்றி வைத்திருக்கிறார்.

ஏனென்றால் வேரா இன்று உயிரோடில்லை.

அவள் இறந்து உருண்டுவிட்டன எட்டு ஆண்டுகள்.

ஆனால் வேரா காதல் நிறைவேறாமல் சாகவில்லை.

வோல்டரை கைப்பிடித்து இரு மகன்களை பெற்று சந்தோசமாக வாழ்ந்துவிட்டுத்தான் கல்லறையில் ஓய்வாகத் தூங்கப் போனாள்.

சரி, கடிதம் 52 வருடம் தாமதமான காரணம் என்ன?

1942ம் ஆண்டு வேரா எழுதிய கடிதம் புயலில் சிக்கிய படகுபோல யுத்தச் சூழ்நிலை காரணமாக அங்குமிங்கும் அலைந்தது.

எப்படியோ அலைந்து தபால் இலாகாவின் சுறுசுறுப்பு (?!!) காரணமாக 1986ல் வோல்டரின் நண்பரான றேயின் கரத்தில் கிடைத்தது.

முகவரியில் வோல்டர் என்றிருந்த மையால் 'றே' கடிதத்தை எடுத்துக் கொண்டு வோல்டர் வீட்டுக்குச் சென்றார்.

ஆனால், கடிதத்தை கொடுக்க முடியவில்லை. அன்றுதான் வோல்டரின் காதலியாக கடிதம் எழுதிய வேரா, வோல்டரின் மனைவியாக மரணமாகியிருந்தார்.

கடிதத்தை கொடுக்காமல் அனுதாபம் சொல்லிவிட்டு வந்த 'றே' அவசரமாக வெளியூர் செல்லவேண்டி ஏற்பட்டது. கடித விவகாரத்தையும் மறந்துவிட்டார்.

சமீபத்தில் தனது வீட்டில் எதையோ 'றே' தேடிக்கொண்டிருந்தபோது கடிதம் கண்ணில்பட்டுவிட, உடனே அதை எடுத்துகொண்டு வோல்டரிடம் ஓடினார்.

முத்திரையையும், முகவரி எழுதப்பட்ட கையெழுத்தையும் வைத்து வேரா 42ல் எழுதிய கடிதம் என்று கண்டுகொண்ட வோல்டர் கண்ணீர்விட்டார்.

தற்போது வெவ்வேறு ஊர்களில் உள்ள தனது இரு புதல்வர்களும் குடும்பத்தினரோடு வந்து ஒன்றாகக் கூடும்போது கடிதத்தை உடைத்துப் பார்க்கலாம் என்று, கண்ணை இமை காப்பது போல் கடிதத்தை பாதுகாத்து வருகிறார்.

தாமதமான கடிதம் பற்றி வோல்டர் சொன்ன 'கொமன்ற்' இது: "வேரா எழுதிய கடிதம் இப்போதாவது கிடைத்துவிட்டது. ஆனால் 1942ல் நான் வேராவுக்கு எழுதிய கடிதங்கள் மட்டும் போன இடம் தெரியவில்லை."



# அங்கம் 39

இந்திரா துடித்துப் போனாள். நாக்கு உலர்ந்து போய் தாகமாக இருந்தது. தலைசுற்றி கண்கள் இருண்டு கொண்டு செல்வது போல இருந்தது.

'மயங்கிவிட்டால் நடப்பது எதுவும் தெரியாமல் போய்விடும்.

'கூடாது! மயங்கிவிடக்கூடாது. சாகலாம். சாவது மேல். ஆனால் மயங்கிக் கிடக்க, இந்த மிருகங்கள் என்னை சின்னாபின்னமாக்கிவிடும். மயக்கம் விலகி அதனை அறிந்து வாழ்நாள் முழுக்க துடிப்பது கொடுமை.'

இந்திரா மனஉறுதியை சேகரித்துக் கொண்டாள்.

முடியும்வரை எதிர்த்துப் போராடுவது என்று மனதுக்குள் முடிவைப் பதிவு செய்தாள்.

தரையில் இருந்து எழாமல் சுற்றிலும் கவனித்தாள்.

பிடுங்கி எறிந்த பூங்கொடி போல் தரையில் கிடந்த இந்திராவை வெறுப்போடு நோக்கினான் ஹரிகரன்.

அவன் கரங்களில் ஒரு நடுக்கம். பதட்டமாக இருந்தான்.

ரோமர்-பிரிய நாய் செத்துப் போனதை ஜீரணிக்க முடியாமல் கல்லுக்குள் ஈரமாய் வேதனைப்பட்டான்.

'நாயே செத்துப் போனபின், அதுவும் முகம் சிதறி துடிதுடித்து செத்துப் போனபின் இவள் மட்டும் சுகமாய் சாவதா? விடமாட்டேன்.'

வக்கிரம் மனிதில் கொதிப்பேற்றியது. 'இன்னமும் என்ன செய்து கொண்டிருக்கிறான் இந்த ஜவாஹர் ராஸ்கல்?' மனது அவசரப்பட்டது.

ஜவாஹர் ஹரிகரன் அவசரப்படுவான் என்று தெரிந்தது போல் வேகமாக வந்துகொண்டிருந்தான்.

ஜவாஹர் தனியே வரவில்லை. அவன் முதுகுக்குப் பின்னால் ஒருத்தி வந்து கொண்டிருந்தாள்.

இளமையாக, அழகாக இறுக்கமான 'மிடி'யில் இடுப்புக்குக் கீழே கனபரிமாணங்கள் யாவும், யாரும் விசாரிக்கத் தேவையின்றி விளக்கமாய் அளவுகள், திரட்சிகள் சொல்லி ஊகிப்புகளுக்கு உந்துதல் கொடுக்க- ஹோலில் இருந்தவர்களில் ஹரிகரன் தவிர எல்லோரும் அவளை இரசித்தார்கள். தணிக்கை செய்யப்படவேண்டிய நினைவுகளை நெஞ்சுக்குள் வளர்த்தார்கள்.

ஜவாஹரின் கரத்தில் சின்னதாய் ஒரு போத்தல் இருந்தது.

ஜவாஹரிடம் இருந்து ஹரிகரன் அதை வாங்கிக் கொண்டார்.

வாங்கிக்கொண்ட ஹரிகரன் ஜவாஹரோடு வந்தவளைப் பார்த்தார். "வா இங்கே!"

அவள் அருகில் வர, கீழே கிடந்த இந்திராவைக் காலால் உதைத்து,

"எழும்பு... எழும்படி"

இந்திரா வேண்டுமென்றே கண்களை மூடிக்கொண்டு, மயங்கிவிட்டது போல் நடிக்க நினைத்துக் கொண்டு அசையாமல் கிடந்தாள்.

ஹரிகரன் உதைக்க இந்திரா அசையாமல் கிடக்க, ஜவாஹர் குனிந்து அவள் மூக்கருகே கைவைத்துப் பார்த்துவிட்டு, மார்பில் தொட்டான்.

அருவருப்பாய் இருந்தது. ஆனாலும் அசையாமல் கிடந்தாள்.

"நடிக்கிறாளடா ஜவாஹர், மீதித் துணிகளையும் அகற்று."

ஜவாஹர் அவள் இடுப்பில் தொட்டான்.

இந்திரா வெறுப்பாகி, இனியும் நடித்தால் அசிங்கமாக்கி விடுவார்கள் என்று நினைத்து, ஆவேசமாய் எழுந்து ஜவாஹர்ரை தள்ளிவிட்டாள்.

ஹரிகரன் கோபமாகி இந்திராவின் முகத்தில் காலால் உதைக்க, தாடையில் பட்டு உயிர்போவது போல் வலித்தது.

"திமிர்! உனக்குத் திமிரடி. அப்போதே சம்மதித்திருந்தால் பூ மாதிரி கவனிக்கப்பட்டிருப்பாயடி. இப்போது பார் அவிழ்த்து எறிந்த கசங்கிய சேலை மாதிரி கிடக்கிறாய்."

ஹரிகரன் சொல்லிவிட்டு ஜவாஹரோடு வந்தளின் தோளில் கைவைத்தார்.

"இவளைப் பார். முதன் முதல் தொட்டபோது துள்ளினாள். இல்லையென்று சொல்லவில்லை. இப்போது தொட்டால் போதும் பிசின் மாதிரி ஒட்டிக்கொள்ளுகிறாள்."

ஹரிகரன் இப்போது சிரித்தார்.

ரோமர் செத்தபின் அவர் சிர்த்தது இப்போதுதான்.

"லீலா நான் சொன்னால் நீ எதையும் செய்வாய் இல்லையா?"

என்றார், முதல் தடவையாக அவள் பெயர் சொல்லி அழைத்து.

லீலா உதட்டில் மதுப் புன்னகை ஏந்திக் காட்டினாள்.

"லீலா நீ இப்போது பிறந்த நாளை நினைத்துக் கொள்."

லீலாவுக்குப் புரியவில்லை. பசுபதி கைதட்டி ஆரவாரித்து,

"ஹரி! நீ கில்லாடியடா. இன்றைய நாள் இத்தனை விசேடமாக இருக்கும் என்று நான் நினைக்கவேயில்லை."

ஹரிகரன் பசுபதி சொன்னதை ஒரு புன்னகையால் ஆமோதித்துவிட்டு,

"லீலா இன்னுமா புரியவில்லை உனக்கு? பிறந்தநாள் உடையோடு நில் என்கிறேன்."

பசுபதிக்கு இருப்புக் கொள்ளவில்லை. 'இவன் ஏன் சுற்றிவளைத்து நேரத்தை 'வேஸ்ட்' பண்ணுகிறான் மடையன்?'

"லீலா உன் உடைகளுக்கு ஓய்வு கொடுத்துவிடு. அதைத்தான் ஹரி சொல்லுகிறான்."

என்றார் அவசரமான தொனியில் பசுபதி.

லீலா தயக்கமாக- ஆனால் வெட்கப்படாமல் ஹரிகரனைப் பார்க்க,

"யோசிக்காதே டியர்! எல்லோரும் நம்மவர்கள்தான். கழட்டு!!"

லீலா ஒவ்வொன்றாய் இழந்து ஒன்றுமில்லாதவளானாள்.

இந்திரா ஒரு பூச்சியைப் பார்ப்பது மாதிரி லீலாவைப் பார்த்தாள்.

மிருகங்கள் யாவும் சப்புக்கொட்டி விழி மூடாமல் இரசிக்க, ஜவாஹர் அடுத்தது என்ன என்பது போல ஹரிகரனைப் பார்த்தான்.

"இந்தா" போத்தலை லீலாவிடம் கொடுத்தபடி, "உள்ளே இருப்பது அசிட். பட்ட இடம் கருகும்- எரியும். இதனை நீ ஊற்றவேண்டும்."

லீலா பயந்து போய் திடுக்கிட்டு பார்க்க,

"உன் உடலில் அல்ல. உபயோகமான பொருளை யாராவது உடைத்து சேதப்படுத்துவார்களா என்ன? நீ உபயோகமான பொருள்! நீ ஊற்ற வேண்டியது இவள் முகத்தில்!"

ஹரிகரன் சொல்லி முடிக்க எல்லோரும் உறைந்து போனார்கள்.

துணியில்லாத லீலா தயங்கவில்லை. ஓரடி முன்னால் எடுத்துவைத்தாள்.

"நில் லீலா!"

ஹரிகரன் கூறிவிட்டு இந்திராவைப் பார்த்தார்.

அவளிடம் எவ்வித உணர்ச்சியும் தெரியவில்லை.

முகம் கல்லாக இருந்தது. லீலாவையே வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கண்களில் மட்டும் ஒரு கொடூரம் வந்துவிட்டது போல் தெரிந்தது.

"இந்திரா! இப்போதும் ஒன்றும் கெட்டு விடவில்லை. இது உனக்குத்தரும் இறுதியிலும் இறுதியான சந்தர்ப்பம்! பளிங்கு மாதிரி அழகாக இருக்கிறது பார் உனது கன்னம். அது கருகி, அசிங்கமாகி, காலமெல்லாம் நீ கண்ணீர் வடித்து, கதறி, ஒரு மூலைக்குள் நீ மடங்கி... தேவையா இதெல்லாம்?"

இந்திரா சலனமேயில்லாமல் இருந்தாள். ஹரிகரன் சொன்னது எதனையும் காதில் வாங்கியதாக முகத்தில் எந்த மாற்றக்குறியும் காட்டாதவளாக இருந்தாள்.

"என்னம்மா இந்! வேடிக்கை காட்டுகிறேன் என்று நினைக்கிறாயாக்கும். நோ! சோ.... உன் முடிவைப் பரிசீலிப்பதானால் உடனே செய்! சொல்ல வெட்கம் என்றால் வேண்டாம். எழுந்து என் அறைக்குப் போ!"

இந்திரா மௌனித்தாள். மௌனம் ஹரிகரனை கோபப்படுத்தியது.

"நீ திருந்தமாட்டாய். திமிர் அடங்க 'அசிட்' வார்க்காவிட்டால் உனக்குப் புத்தி வராதடி."

லீலாவிடம் திரும்பி, "ம்.... செய்!"

லீலா முன்னேறினாள். எல்லோரும் உறைந்து போயிருக்க லீலா தன் நிர்வாணத்திற்காக வெட்கப்படாமல், தான் செய்யப் போகும் காரியத்திற்காக கவலைப்படாமல் முன்னேற, திடீரென்று இந்திரா எழுந்தாள்.

அதே நொடியில் மின்சாரம் அடங்கியது.

ஹோல் முழுக்க இருள் புகுந்து ஆக்கிரமித்தது.

ஹரிகரன் உட்பட அனைவரும் பதட்டமாக,

லீலா "அய்யோ அ..ம்....மா"

என்று அலறினாள். ஹரிகரன் உஷாராகி,

"ஜவாஹர்! இந்திராவை விடாதே. ராட்சசி."

இருட்டுக்கு கண்களைப் பழக்கப்படுத்திக்கொள்ள ஒரு நிமிசம் கரைய, யாரோ ஓடுவது மட்டும் கேட்டது.

இந்திராவாகத்தான் இருக்க வேண்டும். ஜவாஹர் காலடி சப்தத்தை குறிவைத்து ஹோலின் பின்புறமாய், தானும் தாக்கப்படலாம் என்ற எச்சரிக்கை உணர்வு உடலெங்கும் சுமந்து நகர்ந்தான்.

எதிரே யாரோ ஜவாஹரில் மோத, ஜவாஹர் உஷாராகி இரு கைகளையும் விரித்து மோதிய உருவத்தை பின்னோக்கி தள்ளுவதற்கிடையே,

"யார் அது? நான் பசுபதி."

என்றது மோதிய உருவம். பயந்த குரல்.

பின்புறமாய் ஓடிய இந்திரா ஹோலின் முடிவுவரை சென்று அதன்பின் எப்படி வெளியேறுவது என்று தெரியாமல் தவித்து-

ஒவ்வொரு அடியாக எடுத்துவைத்து முன்னேற-

காலடியில் எதுவோ இடறுபட,

இந்திரா தடுமாறி கீழே விழுந்த சத்தம் ஜவாஹரின் செவியில் பட்டுவிட-

அவன் அந்தத் திசையில் கண்களை விரித்துப் பார்த்தபடி முன்னேறி, இருளில் பாதி மட்டும் கரைந்திருந்த இந்திராவை இனம்கண்டு-

"அ....டி....யே...ய்"

என்று நீளமாய் கூவியபடி பாய்ந்து, கீழே கிடந்த இந்திராவைத் தூக்கினான்.

அப்போதுதான் நினைவு வந்தவராய் ஹரிகரன் தனது ஜீன்ஸ் பொக்கற்றில் இருந்து 'லைட்டர்' எடுத்து 'கிளிக்' பண்ண, மெல்லிய வெளிச்சத்தில் ஜவாஹரின் பிடியில் இந்திரா தெரிந்தாள்.

"வெரி குட் ஜவா!"

என்றபோது மின்சாரம் உயிர்த்தது. பசுபதி பெரியளவான ஒரு பெருமூச்சை வெளியேற்றினார்.

லீலா சுவர் ஓரமாய் ஒரு கையால் வயிற்றை தடவிக்கொண்டு, மறுகையில் 'அசிட்' போத்தலைப் பத்திரமாய் வைத்துக்கொண்டு நின்றவள் மின்சாரம் உயிர்த்தபின் முன்னே வந்தாள்.

"உன்னையும் அடித்துவிட்டாள். ராட்சசி உதைத்துவிட்டாள். யோசிக்காதே இனி என்ன செய்கிறாள் பார்க்கலாம்."

ஹரிகரன் சொல்லியபடி இந்திராவை நோக்கி வேகமாய் வர ஜவாஹர் அவள்மீதிருந்த பிடியைத் தளர்த்தினான்.

ஹரிகரன் ஆவேசம் வந்தவராய் இந்திராவின் இரு கன்னங்களிலும் மாறி மாறி அறைந்தார். வயிற்றிலே எட்டி உதைத்தார்.

இந்திரா பின்புறம் சரிய சுவர் அவள் முதுகை தாங்கி விழாமல் நிறுத்தி வைத்தது.

இந்திரா துடிக்கவில்லை. துவளவில்லை. ஒரு சொட்டுக் கண்ணீர்கூட விடவில்லை.

"லீலா வா! ஜவாஹர் இவளைத் தூக்கிப் போய் உள்ளே கட்டிலில் போடு!"

தூக்கினான். இந்திரா திமிறவில்லை. உள்ளே ஹரிகரனின் கட்டிலில் கந்தல் துணிபோல் வீசப்பட்டாள்.

லீலாவோடு வந்த ஹரிகரன் உரத்துச் சிரித்தார்.

"இந்தக் கட்டிலுக்கு வரத்தானே நீ மறுத்தாய்! இப்போது இந்தக் கட்டிலில் உன் கட்டழகே காணாமல் போகப் போகிறதடி! லீலா போ! ஜவாஹர்."

அவன் புரிந்து, இந்திராவின் அருகே சென்று அவள் இருகைகளையும் தன் கைகளுக்குள் சிறைப்படுத்த,

லீலா அசிட் திராவகத்தைப் பதட்டமேயில்லாமல்-

இந்திராவின் கன்னத்தில் கவிழ்த்தாள்!

இந்திரா துடித்து அலறியபோது அந்த பங்களா முழுக்க அதிர்ந்தது போல் இருந்தது.

□□

காயத்திரிக்கு கதை சொன்ன இப்போதும் இந்திரா அலறினாள். அந்த நினைவால் துடித்தாள்.

அவள் அலறியதால் வெளியே மோட்டார் சைக்கிள் வந்து உறுமி ஓய்ந்த சத்தம் எதுவும் இந்திராவுக்கோ காயத்திரிக்கோ கேட்கவில்லை.

அவன் இறங்கினான். இறங்கி திடமாய் நின்று சுற்றிலும் நோட்டமிட்டான்.


இந்திரா வீட்டின் சின்ன நாய்க்குட்டி ஓடிப்போய் ஏற்கனவே பரிச்சயம் போல அவன் காலடியில் நின்றது.

(தொடர்ந்து வரும்)

# கொலை விழும் நேரம்

"அன்னை பெற்றாள் பெண்ணென்று
அதனால்தானே துயரின்று
கண்ணைத் தந்த தெய்வங்களே
கருணை தந்தால் ஆகாதோ...!"

-கவியரசு கண்ணதாசன்-



## பேனா நண்பர் அரங்கம்



- எஸ். வில்பிரட்
- 23
- 145/24, ஜெம்பட்டா வீதி, கொழும்பு-13.
- பத்திரிகை, புத்தகம் வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.



- எம். இக்பால்
- 22
- 45/5, டி அல்விஸ் பிளேஸ், களுத்துறை தெற்கு.
- தொலைக்காட்சி, பத்திரிகை, கதைப்புத்தகம்.



- எவ். மேரி பிளாஞ்சட்
- 7ம் வட்டாரம், மூதூர்.
- வழமையான பொழுது போக்குகள்.



- எம். ரசீனா பீபீ
- 19
- 1169/10, முள்ளிப்பொத்தானை, கந்தளாய்.
- வானொலி, பத்திரிகை.



- எஸ். வைத்தியநாதன்
- 23
- F.A.A.C.Co., W.L.L. P.O.BOX-25809 SAFAT-13119 KUWAIT.
- பத்திரிகை வாசித்தல்.



- எல். நிஸார்
- 27
- AL-SEDEAS B. FACTORY P.O. GHRAN 21943 JEDDAH - K.S.A.
- வழமையானவை.

## வீர மக்கள் தின கவிதைப் போட்டி

'ஐக்கியமே பலம்' என்ற தலைப்பில் சுவிற்ஸர்லாந்திலுள்ள ஐக்கியத்தை வலியுறுத்துவோர் தினமுரசு மூலமாக நடாத்திய கவிதைப்போட்டி முடிவுகள்-

தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (PLOT) செயலதிபர் அமரர் க. உமாமகேஸ்வரனின் நினைவு தினத்தை முன்னிட்டு இப்போட்டி நடத்தப்பட்டது.

ஆறுதல் பரிசுபெறும் நூறு அதிஷ்டசாலிகளில் மேலும் 25 பேரின் விபரம் கீழே. ஏனையோரின் பெயர் விபரங்களும் அடுத்து வரும் முரசுகளில் இடம்பெறும்.

51. சித்தி ஜெஸ்மின் கரீம், சாய்ந்தமருது-10.
52. சு. சசிகுமார், மஸ்கெலியா.
53. என். அன்ஸார், திருகோணமலை.
54. ஆர். குணசேகரன், பண்டாரவளை.
55. நா. புருஷோத்தமன், வவுனியா.
56. எச். நிஹாரா, புத்தளம்.
57. செல்வி. எஸ்.மலர், தலவாக்கலை.
58. க. பாக்கியராசா, அக்கரைப்பற்று-8.
59. திருமதி.ப. அருளேந்திரன், திருகோணமலை.
60. ஜெ. வசந்தமோகன், கொழும்பு-13.
61. ஏ. ஹமீதா, கந்தப்பளை.
62. கி. குலசேகரன், கரவெட்டி.
63. ஏ. மஜீத், அக்கரைப்பற்று.
64. சி. விஜயகுமார், உடப்புசல்லாவ.
65. பி. சிவபாக்கியம், கொழும்பு-14.
66. அ. கிருபானந்தம், மட்டக்களப்பு.
67. அ. குமணன், கல்முனை.
68. கா. வல்லிபுரம், களுவாஞ்சிக்குடி.
69. ந. சிறீதரன், வவுனியா.
70. செ. திரேஸ்மேரி, செங்கலடி.
71. எஸ். சிவமூர்த்தி, செங்கலடி.
72. திருமதி.வி.லட்சுமியம்மா, நானுஓயா.
73. எஸ். ராதிகா, மன்னார்.
74. ந. ரதீஸ்வரன், தம்பிலுவில்-02.
75. எஸ். சிவாஸ்கரன், மட்டக்களப்பு.

—அன்புடன்—

ஐக்கியத்தை விரும்புவோர் -சுவிஸ்-

**வெளிநாடுகளில் புகலிடம் தேடியுள்ள நம்மவர்கள் இலக்கியம் படைப்பதை மறக்கவில்லை. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்களால் பாரிசிலிருந்து வெளியிடப்பட்டுள்ள கதைத் தொகுப்பிலிருந்து இக்கதை பெறப்படுகிறது.**

# வெள்ளைப் புறா ஒன்று கையில் வராமலே..

கனடாவிலிருந்து -ஜயசுதன்-



மனசு குதூகலித்தது!

'யுரேக்கா' எனக் கூவியபடி அது நிர்வாணமாகக் குதித்தோடியது. இளங் காலையில் மொட்டவிழ்ந்த ரோஜா முகம். அதிலிருந்து திருட்டுத்தனமாக என்னையே ஆலிங்கனம் செய்யத் துருதுருக்கும் இரண்டு கண்கள் என்ற பொன் வண்டுகள் பொன்னை உருக்கி உச்சந்தலையில் வழிந்தோட வார்த்தாற்போன்று பாளம் பாளமாகப் பளபளக்கும் கழுத்தளவோடிய காந்தக் கூந்தல். இவையாவும் சேர்ந்து என் நிஷ்டையைக் குழப்பிவிட்டன.

'வாழ்நாள் பூராவும் அந்த அழகு தேவதையின் கடைக்கண் கடாக்ஷத்திற்காக அவளது காலடியில் ஆயுட் கைதியாகவே கட்டுண்டு கிடக்கலாம்.

மனசு அங்கலாய்க்கிறது!

அந்த வெள்ளைக்காரப் பெண் புறாவின் தாபம் ததும்பும் கண்ணெறிகையை எதேச்சையாகக் கண்டுகொண்ட கணம் முதலாக என் இதயம் பீரங்கியாய், அவளுக்காக அடையாள அணிவகுப்பு மரியாதை வேட்டுக்களை தொடர்ந்தும் தீர்த்துக்கொண்டே இருக்கிறது.

'சீ.....சீ..... மனசே நீ திருந்தவே மாட்டாயா...?'

மனசின் கீழ்மாடியிலிருந்து யாரோ குறுகுறுப்பது போன்றும் ஓர் அசூசை.

நான் கனடாவில் கரையிறங்கி, ரொறொன்ரோவில் நிரந்தரமாக நங்கூர மிட்டு மூன்று மாதமாகவில்லை. இந்த 'ஈட்டன்ஸ் ஷொப்பிங் கொம்பிளெக்சுக்கு' இன்று இரண்டாவது தடவையாக வந்திருக்கின்றேன்.

முதன்முறை என்னை இங்கு கூட்டி வந்து, மாரிகால அட்டைகள் போல, சதா மேலும் கீழுமாக ஊர்ந்துகொண்டிருக்கும் தன்னியங்கல் மாடிப்படிகளில் என்னை ஏற்றி இறக்கி, 'கடைகாட்டிப் போன' என் நண்பன் இன்று வரவில்லை.

உலகிலுள்ள அனைத்து ஆடம்பரப் பொருட்களும் இந்த ஈட்டன்ஸினுள் அடக்கம் எனலாம். அந்தளவு பிரம்மாண்டமானது! கனடிய அரசாங்கம் மாதாந்தம் அளந்து தரும் 'வெல்ஃபெயர்' பணத்தில் ஒட்டுண்ணிச் சீவியம் நடாத்தும் இந்த நாட்களில் நான் ஈட்டன்ஸில 'ஷொப்பிங்' செய்ய நினைத்ததற்கும் சோமாலிப் பையன் ஒருவன் 'சொக்லேட்' வாங்கிச் சாப்பிட ஆசைப்பட்டதற்கும் அவ்வளவு பெரிய வித்தியாசம் இல்லை!

ஏதோ தரங்கூடியதுகளுக்குள் விலை குறைந்தது ஏதாவது தட்டுப்படாதா என்ற அற்ப ஆசையில் துணிமணிகளுக்கு நடுவே சுழியோடிக்கொண்டிருந்த என்னை நோக்கி...மறுபடியும்...மறுபடியும்... அதோ பெண்கள் பகுதியில் நிரைநிரையாகத் தொங்கிக்கொண்டிருக்கும் ஆடைகளினாலான வேலி இடுக்குகளின் ஊடாக அவள், விழிகளால் என்னை விசாரித்தபடி!

சொல்லுக்குள் அகப்படாத இன்பசுகத்துடன், நெஞ்சுக்குள் இலேசான படபடப்பு! ஒரே நேரத்தில் என் காதுக்குள் ஓராயிரம் உய்யலாக்கள்!

அருகாக சுவரில் பொருத்தப்பட்டுள்ள ஆளுயர நிலைக்கண்ணாடியில் தெரியும் என் மாயவிம்பம் ஆய்வுக்குட்படுகிறது.

அகதிகளுக்கே உரிய, அவநம்பிக்கை தோய்ந்த பயப்பிராந்தியையும் மீறி என் முகத்தில் 'அறிவு ஜீவித்தனம்' ஏதாவது பளிச்சிடுகின்றதோ? வாளிப்பான என் உடலின் வாலிப முத்திரைகளில் தன்னைப் பறிகொடுத்திருப்பாளோ? ஏன் பூர்வ ஜென்ம பந்தம்கூடக் காரணமாயிருக்கலாம்தானே?

விருப்பம் துளிர்ப்பதற்கான காரணங்கள் வேடிக்கையானவை. சில வேளைகளில் விநோதமானவையும்கூட.

'முட்டாள்! கண்டதும் காதல் கனடாவிலும் சாத்தியம் என்ற நினைப்போ உனக்கு?" மனசுக்கடியிலிருந்து வரும் எச்சரிக்கையா? அல்லது நையாண்டியா?

என் வீட்டுக்குள்ளேயே எனக்கு எதிரி வேறு!

நீலவான் ஆடைக்குள் முகம் புதைத்து நின்று, நிலவென்று அழகு காட்டும் அவளது சுடர்விழிகளின் யாசிப்புக்கு வேறு என்னதான் அர்த்தமோ?

உடுப்பு தேடும் பாவனையில் இப்போது என் கால்கள் அவளைத் தேடுகின்றன. நான் கிட்ட நெருங்குவதை உணர்ந்துகொண்டதாலோ என்னவோ அவள் எட்ட எட்ட ஓடி உடை வரிசைகளுக்குள் ஒளிந்து கொள்கிறாள்.

'இந்த நாட்டிலை ஒராளை இன்னொராளுக்குப் பிடிச்சுக் கொண்டால் நேரடியாகப் பேசி, ஒரு 'டேட்டிங்' ஒழுங்குசெய்து, ஒரு 'பார்' அல்லது ஒரு 'கிளப்'புக்குப் போய் ஆடிப்பாடி வேண்டின மாதிரி அனுபவிச்சுப்போட்டு அடுத்தநாளே விட்டிடலாம். விருப்பமெண்டால் தொடரலாம். ஊரில வருஷக்கணக்காக, வேர்க்க விறுவிறுக்க சையிக்கிள் சீட்டிலை உழுந்தரைச்சு, அலைஞ்சு திரிஞ்சு சரக்குச் சுழட்டின மாதிரி அங்கை செய்யத் தேவையில்லை,

நான் இங்கு வந்து சேர்ந்த புதிதில் என் நண்பன் முன்கூட்டியே என் காதில் போட்டு வைத்த புத்திமதி.

இத்தனைக்கும் மாறாக இவளிடத்தில் மட்டும் எப்படி எங்கள் தமிழ்த்தனம் புகுந்துகொண்டதோ? இங்குமா காவியப் பாங்கில் கண்ணொடு கண்ணோக்கல்? இப்போதுமா? இவளிடத்திலுமா?

வந்த நோக்கம் திசைமாறி, நான் இப்போது அவளைத் தேடுகிறேனா? அடக்கி ஒடுங்கியிருந்த ஓமோன்களைச் சீண்டி வேடிக்கை காட்டுகிறாளா, இந்தச் சிங்காரி?

மழைக்கால மின்னலாய்த் தோன்றி மறைந்தும், மறைந்து தோன்றியும் என்னை அலைக்கழித்துக் கண்ணாமூச்சி விளையாடுகிறாள். ரொம்பவும் பிடிவாதக்காரியாக இருப்பாளோ? பிடிவாதக்காரிகளைத்தான் எனக்கும் வெகுவாகப் பிடிக்குமே!

'ஒன்று மட்டும் நிச்சயம். ஏதோ ஒரு விதத்தில் நான் இவளுக்கு மிகவும் தேவைப்பட்டவனாகிவிட்டேன். நான் இங்கிருந்து வெளியேறும்போது அவள் என்னைப் பின் தொடர்ந்து வருகிறாளா பார்ப்போம்' மனசு தனக்குள் மெதுவாகச் சொல்லியது.

'காஷ் கவுண்டர்' அருகே பெர்ஃபியூம்' பகுதியில் 'சாம்பிள்' ஆக வைக்கப்பட்டிருந்த புட்டியை எடுத்து எனது 'ஜாக்கெட்டுக்கு விசிறியடித்தேன். ரம்யமான 'வூடு' வாசனை!

அந்த மயக்கத்தில் மீண்டும் ஒருமுறை அவளைத் தேடிக் கண்கள் சுழல்கின்றன.

அவள் என்னை ஏமாற்றவில்லை. அதோ சுழல் தாங்கிகளில் தொங்கும் 'ஸ்வெட்டர்'களுக்கு நடுவே நின்று என்மீது கடைக்கண்ணால் கணைதொடுக்கிறாள். 'பெர்ஃபியூம்' புட்டியைத் தூக்கிக்காட்டி, அவளுக்கு 'ஸ்ப்றே' பண்ணுவதுபோல சின்னதாய் ஒரு சில்மிஷம்! தோளில் தொங்கப் போட்டிருந்த 'ஹாண்ட்பாக்'கினால் தன் முகத்தை மூடியபடி நாணத்தால் முறுவலித்துப் பின் மீண்டும் மறைந்து கொள்கிறாளோ!

நான் புறப்படத் தயாரானேன்.

எனக்கெனத் தெரிவுசெய்த ஒரேயொரு 'ரீ ஷேட்டை'க் கவுண்டரில் கொடுத்துப் பணம் செலுத்துகிறேன்.

மனசு என்னவோ இன்னமும் அவளைத் தேடி அலைகிறது!

'ஈட்டன்ஸ் பாக்' ஒன்றினுள் ரீ ஷேட்டையும் 'ரிஸிட்'டையும் போட்டு மிச்ச சில்லறைகளை என் கையில் திணிக்கும்போது, 'ஈட்டன்ஸில் ஷொப்பிங் செய்ததற்கு நன்றி' என்று 'காஷியர்' சிட்டு உதிர்த்த வார்த்தைகள்கூட இலேசாகத்தான் காதில் விழுகிறது. ஆர்வமற்ற நன்றிச் சிரிப்புடன் வாசலை நோக்கி அடி எடுத்து வைக்கிறேன்.

என்ன அதிசயம்!

என்னைச் சுற்றிச் சுழன்ற அந்தச் சுந்தரி. எங்கிருந்தோ பறந்து வந்து என் கையைப் பற்றிக்கொண்டாள்.

என் இதயம் ஒரு கணம் தரித்துத் துடித்தது!

ஆவெனத் திறந்தவாறு அணிந்திருந்த என் 'ஜாக்கெட்'டின் உட்புறப் 'பொக்கற்'றினுள் சொருகி வைத்திருந்த 'வின்ரர் க்ளவுஸ்' சோடியை அவள் வெளியே உருவி எடுத்து அதை மேலும் கீழுமாகப் புரட்டிப் பார்க்கிறாள்.

'என்ன செய்கிறாய் நீ?"

இறுகி உறைந்து போன என் முகத்தைப் பார்த்தே, என் கேள்வியை அவள் ஊகித்திருக்க வேண்டும். 'ஹாண்ட்பாக்'கிலிருந்து அட்டை ஒன்றை எடுத்து என் முகத்துக்கு நேராகப் பிடித்தாள்.

அவளது அழகான படத்துக்கு அருகாக பெயரும் பதவியும் பொறிக்கப்பட்ட அடையாள அட்டை அது.

'ஈட்டன்ஸின் களவு தடுப்பு அதிகாரி'

எலும்பே விறைத்துப் போகும் இந்த வின்ரர் குளிரிலும் எனக்கு வியர்த்துக் கொட்டியது.

மூன்று மாதமாகப் பாவித்து புது மெருகை இழந்துபோன எனது 'க்ளவுஸை'ப் பார்த்தவுடனேயே அவளுக்குத் தெரிந்துவிட்டது. எங்கோ தவறு நடந்துவிட்டதென்று.

'நான் உனக்காக மிகவும் வருந்துகிறேன். ஆனால் ஒன்று. உன்னிடம் நான் இப்படிக் கடுமையாக நடந்து கொண்டதற்கும் உம்மவர்தான் காரணம்.'

சற்று நிதானித்து, மன்னிப்புக் கோரும் பாவனையில் சொல்லியபடி, எனது பழைய க்ளவுஸை என் கைகளுக்குள் திணித்துவிட்டு தொடர்ந்தும் தன்வேலையில் ஈடுபடவென, உள்ளே நடந்து கொண்டிருக்கின்றது எனக்கு வலை விரித்த அந்த வெள்ளைப்புறா!

கூடிநின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அத்தனை பேர் கண்களிலும் ஓர் அற்ப ஜந்துவாய்க் கூனிக் குறுகிச் சமைந்துபோய் நிற்கிறேன் நான்!

மனசின் கீழ்மாடியிலிருந்து யாரோ அழுவது தெரிகிறது.

யாருக்காக என்பதுதான் தெரியவில்லை!

# "காதலிக்கு ஒரு கடிதம்"

மன்னார்-ராகில் ஏ.காசிம்



எனதன்புக் காதலி 'ருத்ரா'வுக்கு
உன் காதலன் 'ராசுக்குட்டி' எழுதிக் கொள்வது!

'கன்னிப் பருவத்திலே' ஏற்படுகிற காதலுக்கு யாருமே விதிவிலக்கு இல்லை போலும். அதனால்தான் உங்க வீட்டுப் பாட்டிக்கு பல்வலி மருந்து வாங்குவதற்காய் நீ வந்தபோது எதிர்பாராமலிருவரும் மோதிக்கொள்ள நாலு கண்கள் கதைபேச... நம் உள்ளங்களோ 'மௌன கீதங்கள்' இசைக்க...பிறகென்ன இரவில் மட்டுமின்றி பகலிலும் 'தாவணிக் கனவுகள்'தான். தாடி வளர்த்த, தற்கொலை புரிந்த சிலரைப் பார்த்து காதலையே வெறுத்திருந்த எனக்கு இல்லை இல்லை காதல் ஒரு 'சுந்தர காண்டம்' என புரிய வைத்தவளே நீதான். அதை உன்னிடம் நான் கூறியபோது "ஆமாங்க மத்தவங்க போலில்லாமல் புதுமைக் காதலர்களாய் வாழ்ந்து 'புதிய வார்ப்புகள்' என ஆவோம் என்றாய். நானும் ஆமோதித்தேன். ஆனால் உன்னைச் சந்திக்க வீட்டுக்கு நான் வரும்போது மட்டும் 'இன்றுபோய் நாளை வா' என விரட்டாமல் நீ விரட்டுவதுதான் விளங்காத புதிரானது. இவ்வேளையில் வேதனையில் துடிக்கும் நான் 'சுவர் இல்லாத சித்திரங்கள்'போல் ஆனதை சொல்லியழுதபோது நீ ஆறுதல் கூறினாய்.

ஏமாற்றத்தோடு இருந்த என்னை எதிர்பாராமல் ஒருநாள் வந்து, எங்க 'வீட்டிலே விசேஷங்க' என நீ சுப்பிட நானும் விழுந்தடிச்சி ஓடிவந்து பிரியமாய் நீ வச்ச பிரியாணியை விழுங்காம உன்னையே விழுங்குவது போல் பார்க்க, நீ அதை ரசிக்க...நமக்குக் குறுக்கே கரடிபோல உன் 'அம்மா வந்தாச்சு' வந்ததோடு முடிஞ்சதா? வசைமாரி வேறு. ஆடிப்போயிட்டேன் நான். ஆனால் நீ துணிஞ்சிட்டே-உன் அம்மாவைப் பார்த்து "இதை யாருன்னு நினைச்சி இப்படி சத்தம் போடறே? என்னுடைய காதலன் இவரு. மொத்தத்திலே 'இது நம்ம ஆளு' என நீ அழுத்தமாய் சொல்ல உன் பொல்லாத அம்மாவும் நில்லாது போய்விட அப்பாடி நமக்கெதிராய் வீசிய எதிர்ப்பு மழையின் 'தூறல் நின்னு போச்சு' அப்படின்னு நிம்மதியாய் நாமிருக்க மீண்டும் உன் அம்மா ஒரு பொண்ணை அழைத்து வந்து என் மனைவின்னு சொல்ல... அந்தப் பொண்ணும் சேர்ந்து 'பொய்சாட்சி'சொல்ல..,. நீ என்னை ஒரு மாதிரியாய் பார்க்க...நான் அவளைப் பார்த்து நீ யாரோ நான் யாரோ என கத்த... அவளோ என்னைப் பார்த்து "நான் யாரோ அல்ல உன் மனைவி. உன் பிள்ளைக்கு 'ஆராரோ ஆரிரரோ' பாடின தாய்" என திருப்பிக் கத்த அங்கு நின்றவர்களின் பார்வையின் சூடு தாங்காமல் என் இரத்தம் கொதித்தது.

மீண்டும் அவள் உன்னைப் பார்த்து "தங்கச்சி ஊரு உலகத்திலே யாருதான் இப்படி நடக்கல. நீ வேணுமின்னா இவரோட 'சின்னவீடு' போல வாழ்ந்திட்டுப்போ. நாமயிருவரும் 'பாமா ருக்மிணி'யாய் இவருக்கு இருப்போம். ஆனா இவரு மிண்டும் ஒருத்தியை தேடிக்காம நாம கவனமாய் 'முந்தானை முடிச்சு' போட்டு ஆசாமியைக் கட்டி வைக்கணும். என்று கூற அத்தனை பேரும் சிரிக்க... நீ என்னை முறைச்சி பார்க்க சத்தியமாய் சொல்றேன் அப்ப 'என் இரத்தத்தின் இரத்தமே' கொதித்துப்போனாலும் ஒன்றும் பேசாது அப்படி பேசியிருந்தாலும் அது 'ஒரு கை ஓசை'யாகவே போகும் என்பதை உணர்ந்து ஓடிவந்துவிட்டேன்.

அப்படி நான் ஓடிவந்தாலும் எப்போதும் உன் நினைவுதான். இது நடந்து ஒருவாரமாகிவிட்டது. உன்னைப் பார்க்காத 'அந்த 7 நாட்கள்' அப்பப்பா எனக்கு நரகம்தான். அன்பே என் உள்ளம்திறந்து காட்டிவிட்டேன். அதில் சிறிதும் கள்ளம் இல்லை என்பதை நீயும் உணர்ந்திருப்பாய். எத்தனை சுட்டாலும் 'பவுணு பவுணுதான்' அது போலத்தான் நானும் என்பதை உன் அம்மா சொல்லும் ஒரு நாளும் வரும். 'ஒரு ஊரிலே ஒரு ராஜகுமாரி' என்பதுபோல என் உள்ளத்திலும் நீ ஒருத்திதான். நமக்காக ஒரு விடியல் நல்லதாய் 'விடியும்வரை காத்திரு' அதுவரை உன்னிடமிருந்து விடைபெறும்நான் எல்லோராலும் 'எங்க சின்னராசா' என அழைக்கப்படும் உன் அன்பு 'டார்லிங் டார்லிங் டார்லிங்'.



# டிக்கட் எடுக்கணும்...

மன்னார் தாஹிர்.எம்.ஸம்ஸீர்

கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையம்.......!

ஞாயிற்றுக்கிழமை என்பதால் பரபரப்பாக இருந்தது. பயணிகள் முட்டிமோதிக் கொண்டு டிக்கட் வாங்குவதில் அவசரமாக இருந்தனர். சரியாக 2.05க்கு வவுனியாக்குப் போகும் ரயில் வரும்.

"டிக்கட் வாங்கிட்டியோ...?

எனது நண்பன் சுரேஷ் கேட்டான். சேட்டிற்குள் இருந்த லேஞ்சியை உருவி எடுத்து, முகத்தில கோலமிட்ட வேர்வையை அழுத்தித் துடைத்த படியே சொன்னேன்.

"ஒரு மாதிரியாக வாங்கிட்டன்.. ஐய்யோ என்ன சனம்மப்பா அது...? டிக்கட் வாங்கிறதுக்குள்ள உசிரே பெயிட்டு வந்த மாதிரி இருக்கு... சரி... கோச்சி வர இன்னும் 10 நிமிஷந்தான் கிடக்கு.... வா பிளட் போர்முக்கு போவோம்...."

டிக்கட்டை காட்டி விட்டு, 5வது பிளட் போர்முக்கு போனோம். என் மனதில் இனந்தெரியாத சந்தோஷம். நாளைக் காலையில் எட்டு மணிக்கே கலைவிழா தொடங்கும். பிரதம பேச்சாளராக வர இருக்கும் என்னை எத்தனை கண்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கும். நாளைக்கு மேடையையே ஒரு கலக்கு கலக்க வேண்டும் என் மனம் சொல்லிக்கொண்டது.

"நீ வவுனியாவில இருந்து எப்ப வருவா....?" நண்பன்.

"விழா முடிஞ்சி அடுத்த நாளே வந்திடுவன். நீ நான் சொன்ன வேலையெல்லாம் செஞ்சி வை.... மறக்காதே என்ன....? இந்தா கோச்சி வந்திட்டுது நான் பெயிட்டு வாறன்"

முட்டி மோதிக்கொண்டு பயணிகள் ஏறினார்கள்.

சீட் பிடிப்பதில் அவ்வளவு அவசரம். ஒரு மாதிரியாக எனக்கும் "சீட்" கிடைத்து விட்ட மகிழ்ச்சி, யன்னல் ஓரமாக உட்கார்ந்தேன்.

இப்போது கோச்சி போய்க்கொண்டிருந்தது. இனிமையாக தவழ்ந்து வந்த தென்றல் இதமாக இருந்தது. 'ட்ரவலிங் பேக்கை' திறந்து வரும்போது வாங்கி வந்த தினமுரசை எடுத்தேன். இராஜதந்திரியின் அலசலின் சுவையில் மெய்மறந்து மூழ்கி விட்டேன். திடீரென்று ஒரு சலசலப்பு..... எதிரே இருந்த தாடி வைத்திருப்பவரிடம் விசாரிக்க,

"டிக்கட் செக்பண்ணிக்கிட்டு வாறாங்க" என்றார்.

இங்கும் எனது "சிறப்பு சொற்பொழிவை" ஆற்ற நினைத்தேன்.

"நம்மட நாட்டுலதான் இப்படி டிக்கட் எடுக்காமக் கூட ஏமாற்றுறாங்க..... அதனால தான் நாடு உருப்படாம இருக்கு. யப்பான் போன்ற நாட்டுலே மனச்சாட்சியோட நடக்கிற மனுஷங்க... அதனால டிக்கட் செக் பண்ண வேண்டிய அவசியங்கூட இல்லையாம்....."

நான் சொல்லிக்கொண்டே போகிறன் எனது சொற்பொழிவு அனைவரையும் கவர்ந்திருக்கும். அருகில இருந்தவர்கள் எல்லோரும் என்னை மரியாதையோடு நோக்கினர். எனக்கும் பெருமையாக இருந்தது.

காக்கி உடுத்திருந்த டிக்கட் பரிசோதகர் பக்கத்தில் இருந்தவர்களுடைய டிக்கட்களையும் செக் பண்ணிக் கொண்டிருந்தார். இப்போது என் முறை வந்தது. பொக்கட்டிலிருந்து டிக்கட்டை உருவி எடுத்து நீட்டினேன். பார்த்து விட்டு, ஆவேசம் நிறைந்த பார்வையால் என்னை மேய்ந்தார்.

"மே...... மொக்கத்த.....?" என்று திருப்பி நீட்டிய டிக்கட்டை கூர்ந்து நோக்கனேன்.

"அடக் கடவுளே....... என்ன அநியாயமடா இது? என்ட நண்பன் சுரேஷுக்கு எடுத்த பிளட்போர்ம் டிக்கட்தான் இது. என் டிக்கட் மாறி அவண்ட கைக்கு போட்டுது......"

# நிலவு காலிக்கின்றது.....

அக்குறணை-ஹீரா அனஸ்

சிறுகதை

"மோனை சிவராசு! உதிலை எப்பன் பூமணியின்ரை கடை துறந்திருக்கோ வெண்டு எட்டிப்பார் பாப்பம்." தங்கம் மகனிடம் சொன்னாள். "ஓ மெணை அம்மா பெற்றோல்மேக்ஸ் எரியுற வெளிச்சம் தெரியுது. துறந்துதான் இருக்கினம் போல கிடக்கு" சிவராசா சொல்லிவிட்டு கிணத்தடிக்குப் போனான். சிவப்பிரகாசத்தார் துவாயை உதறித் தோளில் போட்டுக் கொண்டு நாலுமுழ வேட்டியை மாற்றி உடுத்து விட்டு விறாந்தைச் சுவரில் அவர் கொழும்பில் இருந்து வாங்கி வந்த மெய்கண்டான் கலண்டரில் மரணயோகம்- கரிநாள் ஏதாவது நாளைக்கு இருக்கிறதா என்று பார்த்தார்.

நாளுக்கு மிளகாய்க் கன்று நடுவதற்காக நாற்றுகள் எல்லாம் தயாராக வைத்திருந்தார். 'நாளைக்குக் காலையிலை நாளுக்குக் கண்டு நடவேணும்' மனதில் எண்ணியபடி வாசல் படியில் நிலையோடு சாய்ந்து உட்கார்ந்து கொண்டார்.

சிவராசா கால்முகம் கழுவிக் கொண்டு வந்து சாரம் மாத்தினான். ஷேட்டுப் பழையதுதான் எண்டாலும் கரி அயண் பொக்ஸினால் பகல் அயண் பண்ணி வைத்திருந்தாள் தங்கச்சி விஜிதா. "மோனை உதிலை குசியினியிலை இருக்கிற கலனை எடுத்துக் கொண்டு போய் பூமணியின்ரை கடையிலை ஒரு போத்தில் மண்ணெண்ணையும், ஒரு சண்லைட்டும், ஐநூறு சீனியும் வாங்கி வா மோனை." வயதுக்கு வந்த பெடியன் வேலை சொல்லிச் செய்விக்கக் கூடாதோ என்னேவா எண்டு அடிக்கொரு தரம் மோனை, மோனை என்று கூப்பிட்டுக் கொள்ளுவாள் தங்கம். அப்படிக் கூப்பிடும் போது ஒரு பிரத்தியேகமான பாசம் சுரந்து வருவது என்னவோ உண்மைதான்.

'மண்ணெண்ணை, சன்லைட், சீனி- அம்மா லேசாச் சொல்லிப் போட்டா, ஆனால் உதுகளை வாங்குறதுக்கு எங்கடை சனம் பட்டபாடு கொஞ்சநஞ்சமே. ஏதோ இப்ப கொஞ்சநாளாய் அரசாங்கப் பக்கத்தாலை பொருளாதாரத் தடையை கொஞ்சம் இளக்கினதாலை சாமான்களை வாங்க முடியுது' எண்ணியபடி சிவராசா கடையை நோக்கி நடந்து போனான்.

எத்தனை காலங்களுக்கென்று இந்த அவஸ்த்தைப்படுவது? பயங்கரமான ஒரு வானத்தின் கீழ் எங்களது இருப்பை உறுதி செய்து கொள்ள முடியாத துர்அதிஷ்டம்.

□□□

நிலவு காலிக்கத் தொடங்குகிறது. நிலவென்றால் எவ்வளவு சந்தோஷம். காற்றுக்குத்தான் தடையில்லையே. எவ்வளவு அருமையாக வீசுகிறது. முற்றத்து வெண் மணலில் கூட்டம் குடும்பத்தோடு அமர்ந்து கொண்டு தின்பண்டங்கள் செய்து தின்பதுவும் கூடிக் களிப்பதுவும். "இண்டைக் கெண்டால் தங்கத்தின்ரை கையாலை செய்த 'பால்லை வடிச்சது' என்ன உருசை. உவள் 'பனங்காய்க் காய்' சுட்டாளெண்டால் வலு சுவைதான்" எப்போதோ ஒருநாள் சிவப்பிரகாசத்தார் சொன்னது. இப்பொழுதெல்லாம் நிலவுவரும், வெண்மணல் மீது படியும். தென்றலும் வீசும். அதே மக்கள்தான் ஆனால் பேசுகின்ற விடயங்களும், உணர்வுகளும்தான் எத்தனை வித்தியாசம்? வேறுபாடுகள்?

"வா செல்லையா வா!" சிவப்பிரகாசத்தார் எழும்பி முற்றத்துக்கு வந்தார். "வா உதிலை இருப்பம்." தங்கராசர் பக்கத்துத் தோட்டத்திற்கு தண்ணீர் இறைக்கும் மெசின் சத்தம் கேட்டது. "செல்லையா உந்த தண்ணி இறைக்கிற மெசின்ரை சத்தத்தை இப்ப எத்தனை நாளைக்குப் பிறகு கேக்கிறம் இல்லையே?"

"ஓம் சிவப்பிரகாசமண்ணை! எங்கடை நிலங்களெல்லாம் என்ன மாதிரி காய்ஞ்சு கருவாடாப் போனாப்பிறகு மண்ணெண்ணை இப்ப வந்து கிடக்குது."

"என்னதான் எண்டாலும் இப்பவாவது வந்துதே. எங்கடை சனம் இனி எக்கணம் புகையிலை, மிளகாய், கோவா, கிழங்கு எண்டு பயிர் செய்யத் துவங்கீடும் ஓ...."

"ஓமண்ணை எங்கடை மண்ணிலை பொன்னைப் போட்டா பொன் விளையுமெல்லே."

"அப்பிடிச்சொல்லு செல்லையா! இஞ்சை என்னதான் விலையில்லை அட எங்கடை யாழப்பாணத்திலை புல்லும் காசு குடுத்துத்தானே வாங்கவேணும்!"

"அப்ப பின்னை இந்தாங்கோ! தேத்தண்ணியைக் குடிச்சுக் குடிச்சுக் கதையுங்கோ" தங்கம் இரண்டு சில்வர் தம்ளர்களில் தேனீர் கொண்டு வந்து கொடுத்தாள். இரண்டு பேரும் தேனீரை எடுத்துக் குடித்தார்கள். சில நாட்களில் காலையில் வெறுவயிற்றில் பச்சைத் தண்ணீரைக் குடித்து விட்டு எத்தனை நாட்களைக் கடத்தினார்கள். இப்பொழுது சாமான்கள் ஏதோ கிடைக்கின்றன. ஆனால் விலைகள்



பற்றிய மயக்கத்தில் தெளிவில்லாத நிலை தான். அதனால் எல்லோருக்கும் எல்லாச் சாமான்களுமே வாங்கக் கிடைப்பதில்லை. ஏழை எளியதுகளின்ரை பாடு இன்னும் அதே சிரமம்தான்.

முன் நிலவு, குண்டுமணி மிளகாய்க் கண்டுத் தரையைக் கொத்தி பாத்தி கட்டுவதற்கு வந்திருந்தான். அவனின் தோளில் ஒருமுதலை மார்க் மண்வெட்டி இருந்தது. "அப்ப பின்னை வா செல்லையா உப்பிடியே தேக்கடித்துண்டுப் பக்கமா குண்டு மணிக்கு இடத்தைக் காட்டீட்டு வருவம்" என்றபடி எழுந்து முன்னால் நடந்தார் சிவப்பிரகாசத்தார். இப்போது கூலி ஆட்களுக்கும் வேலை செய்யச் சம்பளம் ஒரு தொகை கொடுக்க வேண்டும். முன்னப் போல மலையகத்து ஆட்கள் வவுனியாவுக்கு அப்பால் அதிகமாக இல்லை. முஸ்லிம் ஆட்கள் இல்லாததால் அருவி வெட்டுவதும் பெரிய பொறுப்பாகிப் போய்விட்டது.

குண்டுமணிக்கு இடத்தைக் காட்டினார் சிவப்பிரகாசத்தார். கிழக்குப் பக்கமாகத் திரும்பி இரண்டு கைகளையும் கூப்பிக் கும்பிட்டு விட்டு முதல் வேலையை ஆரம்பித்தான் குண்டுமணி. முதல் வேலையை ஆரம்பித்தவுடன் கைவியளமாய் ஐம்பது ரூபா நோட்டொன்றை குண்டுமணியின் கையில் பொத்தியபடி கொடுத்தார் சிவப்பிரகாசம்.

"அப்ப பின்னை அவன் வேலை செய்யட்டும். வா செல்லையா உப்பிடியே வயல் குடில் மட்டும் போயிட்டு வருவம்" என்று சொல்லிக் கொண்டு நடக்க இருவரும் வயல் குடில் பக்கமாய் போயினர். இடையில் வயலின் மத்தியில் இருக்கும் வயல் பிள்ளையாரைப் பார்த்தவுடன் செல்லையாவிற்குக் கண்கள் இரண்டும் பனித்து விட்டன.

"புள்ளையாருக்கு நிறமணி போட்டுப் பொங்கி எத்தினை வருஷமாச்சு? சக்கரை இல்லை, தேங்காய் நெருப்புவிலை, பயறு இல்லை, மா சாப்பிடுறதுக்கும் கட்டுப்பாடு, இந்த நிலையிலை அபிஷேகத்துக்கு கற்பூரம், சாம்பிராணி, தேங்காண்ணை எண்டு எல்லாத்துக்கும் தட்டுப்பாடு. இந்த நிலையிலை எங்கை நிறமணி போடுறது? அவரை எங்கே குளிர்விக்கிறது?" மனம் நிறையக் கவலை சுமந்தபடி செல்லையர் மௌனமாக நடந்து கொண்டிருந்தார்.

"சிவப்பிரகாசமண்ணை வயல்முழுக்க என்ன மாதிரி செடி கொடியள் எல்லாம் பத்தையாய் வளர்ந்து போய்க் கிடக்குது கண்டியளே? இனி கொஞ்சம் கொஞ்சமாய் லைட், தண்ணி எல்லாம் வருமெண்டெல்லே கதைக்கினம்."

"ஓமோம் செல்லையா? உந்த விஷயங்களின்ரை தடைதான் எங்களை இப்பிடி எல்லாம் அலைக்கழிச்சுப் போட்டுது கண்டியோ."

"என்ன எண்டாலும் எல்லாம் லெக்சன் காலமெல்லே"

"அதுதான் யோசிக்க வேண்டிய விசயமாய்க்கிடக்குது. எல்லாரும் பட்டினி இல்லாம திண்டு குடிச்சு சீவனோடை இருந்தாச் சரிதான்."

"உங்க பார்! கோரைக் கிழங்கை பண்டி என்ன மாதிரி உழுது கிண்டியிருக்கு. பயிர் செய்து போட்டு உந்தச் சனியனின்ரை கோதாரியிலை என்னண்டு காப்பாத்துறது? முந்தியெண்டால் கமக்காரருக்கு துவக்குக் குடுத்திருந்திச்சினம்." எத்தனை விதமான இன்னல்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டு வாழும் வாழ்க்கை இது.

□□□

"புள்ளை விஜிதா செம்புக்குள்ளை எப்பன் தண்ணி கொண்டு வாபுள்ளை." சிவப்பிரகாசத்தார் வயல் எல்லாம் சுத்திவிட்டு வந்த களைப்பில் மகளிடம் சொன்னார்.

"செல்லையா உனக்குத்தண்ணி வேணுமே?"

"எனக்கு வேண்டாமண்ணை"

சிவப்பிரகாசத்தார் வெண்கலச் செம்பை தூக்கி அண்ணார்ந்து மிடறு மிடறாக தண்ணீரைக் குடித்தார்.

"அண்ணை எனக்கெண்டால் முழுசா எல்லாச்சாமானும் வரேல்லை எண்டாப்பிறகு 'சப்' பெண்டு இருக்குது. நம்பிக்கை இல்லை. உப்பிடிக் கொஞ்ச நாளைக்கு உந்தச் சாமான்கள் வரும்..... பேந்து......"

"என்ன சொல்றாய் செல்லையா? எனக்கு ஒண்டுமா விளங்கேல்லை"

"சிவப்பிரகாசம் அண்ணை எனக் கெண்டால் எல்லாம் கானல் தண்ணி போலதான் கிடக்குது" சிவப்பிரகாசத்தார் செம்பை வாங்கில் வைத்தார்.

"முழுசா எப்ப அண்ணை நாங்கள் எல்லாம் முந்தினது மாதிரி வாழுறதும் சந்தோஷப்படுறதும்?"

"செல்லையா? அப்பிடி ஒரு காலம் இனிமேல் வரமாட்டுது எண்டு சொல்லுறியே?"

"அண்ணை உதெல்லாம் உந்த நிலவு காலிக்கிறது மாதிரி என்ன சொன்னாலும் கொஞ்ச நேரத்திலை இருள் வந்திடுமெல்லே அண்ணை."

"ஓ...... முன்னிலவு எண்டால் பின்னிருட்டு. முன்னிருட்டு எண்டால் பின்னிலவு, உதுதானே கதையாய்க் கிடக்குது."

விசயத்தை விளங்கின செல்லையா, "ஓம்....ஓம்.... அண்ணே! அப்ப பின்னை நான் போறனண்ணை" கூறிவிட்டு வீட்டை நோக்கி நடந்தார்.

சிவப்பிரகாசத்தார் அண்ணாந்து வானத்தைப் பார்த்தார். ஒரு முகில்க் கூட்டம் நிலவை மறைத்துக் கொண்டது. தன்னையறியாமல் பெருமூச்சொன்றை விட்டார் சிவப்பிரகாசத்தார்.




'இவளைப்போல ஒரு அழகான பெண்ணை என் வாழ்நாளிலேயே நான் பார்க்கவில்லை..' சத்தியனின் கண்கள் வியப்பில் புருவங்களைத் தூக்கின.

'தேவதை என்றெல்லாம் கூறுவார்களே, அது இவள் தானோ...'

சத்தியனின் மனம் மேலும் எண்ணிக் கொண்டது.

அவன் எவ்வளவுதான் அந்தப் பெண்ணிடமிருந்து பார்வையை அகற்ற நினைத்தாலும் அவனால் அது முடியாமலிருந்தது.

'யாராக இருப்பாள் இந்த அப்ஸரஸ்.....? இதற்கு முன் ஒரு நாளாவது இவளை நான் லைப்பிறரியில் பார்த்ததேயில்லை...

எவ்வளவு அழகாயிருக்கிறாள்....? நூறு பெண்களிடம் பகிர்ந்து அளிக்க வேண்டிய அழகை, பிரம்மன் இவள் ஒருத்திக்கே கொடுத்து விட்டானோ...?'

வலு வலுவென்று பொலிஷ் பூசியது போல் மினுமினுக்கும் கன்னங்களும்...

சாயமடித்துவிட்டாற்போல் ரோஸ் கலர் தேகமும், அவளது ஒரே பார்வையில் எந்த ஆண்மகனும் அவள் மீது ஆசைகொள்வதில் வியப்பிருக்காது...

சத்தியனின் மனக்குதிரைகள் திரும்பத்திரும்ப அவளையே சுற்றிச் சுற்றி வந்தன.

'தினமும் லைப்பிறரிக்கு வருவாளோ... அப்படியானால் நானும் இதே நேரத்துக்கு இனிமேல் வர வேண்டும்.....? சத்தியன் மனசுக்குள் தீர்மானித்துக்கொண்டான். நினைத்தது மட்டுமல்லாமல் அப்படியே தினமும் 'புத்தகம் படிப்பது' என்ற சாட்டில் அவளைப் பார்ப்பதற்கு வந்து போய்க் கொண்டிருந்தான்.

'எத்தனை நாளைக்குத்தான் இப்படியே தொலைவில் நின்று இரசித்துக் கொண்டிருப்பது?' என்று நினைத்த சத்தியன் அவளை நோக்கி தன் முதல் அடியை எடுத்து வைத்தான். வேண்டுமென்றே அவன் லைப்பிறரிக்குள் வரும் போது எதேச்சையாக அவளைக் கடந்து செல்வதுபோல் பார்த்துக் கொண்டு போனான். புன்னகையும் செய்தான்.

ஆனால் பதிலுக்கு அவளிடமிருந்தும் புன்னகை வரும் என்று எதிர்பாராத சத்தியனுக்கு அவளது சிரிப்பு மனசிற்குள் தன்னை 'கதாநாயகனாக' நினைக்க வைத்தது.

இப்போது சத்தியனின் கால்கள் தரையில் நடப்பதேயில்லை.....

'இன்னும் எத்தனை நாட்களுக்கு இப்படிக் கனவுகளுடனேயே வாழ்வது?' மீண்டும் சத்தியனின் மனம் கேள்வி எழுப்பியது.

எப்படியும் அந்த அழகுத் தேவதையிடம் என் காதல் கவிதைகளை படித்துக் காட்டிவிட வேண்டும்.

சத்தியன் அவளுடன் பேச வேண்டிய வார்த்தைகளை 'பாட்டனி' பாடமாக்குவது போல் மனதில் பல தடவைகள் கூறி ஒத்திகை பார்த்துக்கொண்டான்.

'உங்களை முதன்முதலில் பார்த்த அன்றே என் மனசு என்னிடத்தில் இல்லை என்பதை நான் அறிந்து கொண்டேன்.........

அன்று முதல் என் ஒவ்வொரு அசைவிலும் உங்களைத்தான் என் மனசு நினைக்கிறது......

எனக்குத் திருமணம் நடந்தால் அது உங்களோடு தான்......'

சத்தியனின் மனது 'படக் படக்' என்று நூறு முறை அடித்துக் கொண்டாலும் அவன் தன் மனதிலுள்ளவற்றைக் கூறத் தவறவில்லை.

'எனக்குத் தெரியும் உங்களுடைய மனமும் என்னை நேசிக்கிறது என்று, ஆனால் அதை எப்படிச் சொல்வதென்று நீங்...... சத்தியன் பேசிக் கொண்டு போகையில் அவளது பேச்சு,

'ஐ ஆம் ஸாரி, நீங்கள் என்னைத் தவறாக நினைத்துவிட்டீர்கள்' என்ற அவளது வார்த்தைகளால் நிறுத்தப்பட்டது.

சத்தியன் வாய்திறந்து பேசுமுன் அவனது பதிலுக்குக்கூட காத்திராமல் அவள் சென்று விட்டாள். சாட்டையால் அடிபட்டவன் போல சத்தியன் நிலைகுலைந்து நின்றான்.

'ஐ ஆம் ஸாரி' என்று எப்படி இவளால் என்னைத் தூக்கி எறிந்து விட்டு போக முடிந்தது.......

'இத்தனை நாளும் என்னைப் பார்த்து சிரித்ததெல்லாம்.......

'நேரத்தை மாற்றாது எப்போது இதே நேரத்திற்கு அவள் லைப்பிறரிக்கு வந்தது.....

'எப்போதும் என்னுடைய நேர்பார்வை படும் படியாகவே அவள் அமர்ந்திருப்பது...

'இதற்கெல்லாம் என்ன அர்த்தம்......?'

சத்தியனுக்கு நினைக்க நினைக்க அவள்மீது கோபம் கோபமாய் வந்தது.

'நான் உண்டு என்னுடைய படிப்பு என்று லைப்பிறரிக்கு வந்து போய்க் கொண்டிருந்த என்னை என் மனசை கெடுத்தது மல்லாமல் .. இப்போ எதுவுமேயில்லை என்கிறாளே....'

சத்தியனால் இந்த ஏமாற்றத்தைத் தாங்கமுடியாமலிருந்தது.

சவரம் செய்யப்படாத முகமும் மடிப்புக் குலைந்த ஆடையுடனும் சத்தியன் தன் மீது எந்த வித அக்கறையுமில்லாமல் அவள் 'வருவாள் வருவாள்' என்று லைப்பிறரிக்கு வந்து போய்க் கொண்டிருந்தான். ஆனால் அவளோ அதன்பிறகு வரவேயில்லை.

கடைசியில் சத்தியன் நினைத்துக் கொண்டான் 'இனிமேல் எந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை' என்று.

சத்தியன் தன் கவனத்தை படிப்பில் திசைதிருப்ப முயன்றான்.

தன் நண்பன் ராமு அவனைச் சேர்ந்து படிக்க வரச்சொன்னதால் புத்தகங்களுடன் ராமுவின் வீட்டு கோலிங் பெல்லை அழுத்தினான்.

கதவைத் திறந்த பெண்ணைப் பார்த்ததும் சத்தியன் செயலற்று நின்றான்.

"நீங்கள் வந்தால் உங்களை உட்கார வைக்கச் சொல்லி அண்ணா சொன்னவர் வாங்கோ...."

பளிச்சென்று மின்னல் தோன்றி மறைவது போல் கூறிவிட்டு போய் ஒளிந்து கொண்டாள் அவள். சத்தியனால் இன்னும் அவள்போன திசையிலிருந்து பார்வையை அகற்றமுடியவில்லை.

'இவளைப் போல ஒரு அழகான பெண்ணை என் வாழ்நாளிலேயே நான் பார்க்கவில்லை' சத்தியனின் மனம் எண்ணிக் கொண்டது.

'ராமு சொன்ன நண்பன் நான்தான் என்பது இவளுக்கு எப்படித் தெரியும்.....?

'அப்படியென்றால் ஏற்கனவே என்னை இவள் அறிந்து லவத்திருக்கின்றாளோ.....?

'நான் ராமுவிடம் வரும்போதெல்லாம் எங்கோ ஓர் மூலையிலிருந்து என்னை அவதானித்திருக்கிறாள்.

சத்தியனின் மனசு இப்படி நினைக்கையில் துள்ளிக் குதித்தது.

'நாம்தான் இவ்வளவு அசட்டையாக இருந்து விட்டோம்........

'ராமுவிற்கு இப்படியொரு அழகான தங்கை இருக்கிறாள் என்று அறியாமல் இருந்து விட்டேன்.

'அவள் உன் நண்பனின் தங்கை. உன் நண்பனுக்குத் துரோகம் செய்யலாமா?'

சத்தியனின் மனச்சாட்சி அவனிடம் கேள்வி எழுப்பியது.

'இதில் துரோக மொன்றுமில்லையே..... நண்பனின் தங்கையைக் காதலிக்கக் கூடாதுஎன்று சட்ட மொன்றும் கிடையாது....!' சத்தியன் நியாயம் கூறிக் கொண்டான். இதன் பின்பு சத்தியன் ராமு வீட்டிற்கு 'படிப்பதற்கு' என்ற சாட்டில் தினமும் வரத்துவங்கினான். ராமு அழைக்காவிட்டாலும் வேண்டுமென்றே சத்தியன் அவனைத் தேடிக் கொண்டு போவான் "அண்ணா இல்லையே" என்று அவளும் சிரித்துக் கொண்டே பதில் கூறுவாள். ராமுவும் அவனும் படித்துக் கொண்டிருக்கும் சமயங்களில் அவளும் பல சமயம் அவன் பார்வை படும்படி நடந்து திரிவது சத்தியனுக்கு மனதில் இன்னும் நம்பிக்கையை வளர்த்தன. சத்தியனின் கவனம் பாடங்கள் அல்லாமல் அவளது கொலுசுச் சத்தத்திலேயே நிலைகொண்டிருந்தன. திடீரென்று ஒருநாள் ராமு சொன்னதைக் கேட்டதும் அதிர்ந்து போனான் சத்தியன். அவனது தங்கைக்கு திருமணம் நிச்சயமாகிவிட்டதாகவும், மாப்பிள்ளை திரும்பவும் வெளிநாடு போகும் காரணத்தால் அவசரமாய் திருமணத்தை முடிக்க வேண்டியிருப்பதாயும் கூறினான். சத்தியனுக்கு அதிர்ச்சியால் பேச்சு வரவில்லை. அவனுடைய மனசை யாரோ பழுங்கொண்டு அழுத்துவது போல் பிரமிப்பேற்பட்டது அவனுக்கு. அவனால் அதன் வலியை தாங்க முடியவில்லை.

'கடவுளே இனிமேலாவது 'காதல்' என்ற வார்த்தையை என் உதடுகள் உச்சரிக்காமல் இருக்கச் செய்' என்று அவனது மனம் மன்றாடியது.

'காதலே என் மனசிலிருந்து போய் விடு' என்று உரக்கக் கத்தவேண்டும் போலிருந்தது. சத்தியனின் கவனம் படிப்பில் குறைந்தமையால் பரீட்சையிலும் தோற்க வேண்டி ஏற்பட்டது. அவனது வீட்டில் 'நீ படித்தது போதும்' என்று அவனுடைய அப்பா தன் நண்பரின் ஆபிஸில் வேலைக்குப் போகச் சொன்னார்.

"விஷ் யு ஆல் த பெஸ்ட்" என்று கை குலுக்கிய வண்ணம் சத்தியனுடைய மேசையில் அவனை உட்கார வைத்தார் ஆபீசர். சத்தியன் மகிழ்ச்சியுடன் உட்கார்ந்து கொண்டான்.

..அவனது காதில் " டக்..டக்" என்று டைப் பண்ணும் சத்தம் விழவே எதிரே பார்த்தான்.

'இவளைப் போல ஒரு அழகான பெண்ணை என் வாழ்நாளிலேயே நான் பார்க்கவில்லை' சத்தியனின் மனம் நினைத்தது.

# இலக்கிய நயம்

## நட்புக்கு தண்டனை!



### தருவது ரசிகன்



**"கொ**டுத்தேயாக வேண்டும் உமது மகளை!"

கூறியவன் மன்னவன். கூறப்பட்டது அமைச்சருக்கு!

அமைச்சர் அஞ்சி நடுங்கவில்லை. ஆவேசமும் கொள்ளவில்லை.

அனுபவமுதிர்ச்சி அவர் நெற்றியின் சுருக்கங்களில் தெரிந்தது.

எதையும் தெளிவாக ஆராயும் தேர்ச்சி அவர் விழிகளின் தீட்சண்யத்தில் புரிந்தது.

அமைச்சராய், அருமைத் துணையாய் இருபதாண்டுகள் அரசனோடு நிழலாய் இருந்ததில் அவன் பலவீனம் அமைச்சர் அறியாததல்ல.

ஆனாலும் அடி மடியில் கைவைப்பான், அருமை மகள் மீதே கண்வைப்பான், ஆணவமாய் பெண் கேட்பான் என்று நினைத்ததில்லை அவர்.

ஆனால் கேட்டுவிட்டான்; கண் போட்டு விட்டான்; கடுகளவும் தயக்கமின்றி அவர் விடையறியும் வேகம் காட்டிவிட்டான்.

கோபம் செல்லாத இடம் இது! மோத முடியாத பலம் அவனிடம்! அமைச்சர் சாந்தமாய் தன் முதிர்ந்த உதட்டால் புன்னகைத்தார்.

"மன்னவா!"

"என்னவோ?"

"கேட்டதும் கிடைப்பதற்கு அல்லது கொடுப்பதற்கு என் மகள் பொன்னுமல்ல-பொருளுமல்ல!"

"அப்படியானால் அவள் என்னவோ அதைச் சொல்லும்?"

கேலி நிரம்பிய கேள்வி.

"பெண்!"

"ஹா ஹா... ஹா.."

இடியென நகைத்தான் முடியுடை வேந்தன்.

"பொன் என்றால், வெறும் பொருள் என்றால், அதை அறிய கண் என்ற இரண்டு இல்லாமலோ போனது எனக்கு? போதும் நிறுத்தும்! புலம்பல் வெறும் புலம்பல்! எனக்குத் தேவை விடை! சுற்றிவளைத்து உமது புத்தியை என்மீது தொடுத்து போட நினைக்காதீர் தடை!"

"மன்னா! பொன் என்றால் பொருள் என்றால் இருப்பவரிடம் கேட்டு பெற்று விடலாம்."

"ஓஹோ. ஆனால் பெண் என்றால்...?"

"அவள் சம்மதமும் தேவை. தந்தை என்ற உரித்து மட்டும் அவள் கருத்துக்கு மாறாக நடக்கும் உரிமையை தந்துவிடாது மன்னா!"

"ஹா ஹா... ஹா.."

மீண்டும் நகைத்தான். ஆணவமான சிரிப்பு. அதிலே கலந்திருந்தது செருக்கு. எது செய்தாலும் எவர் கேட்கமுடியும் என்ற அதிகாரத் துடுக்கு.

"அமைச்சரே! நான் உமது சம்மதத்தைத் தான் கேட்கிறேன். அதற்குக் கூறும் விடை முதலில்!"

"ஆனால் மணமுடிக்கப்போவது என் மகளல்லவா மன்னா?"

"ஆனால், அவள் மறுத்தால் பிணமாகப் போவது நீர் அல்லவா அமைச்சரே!"

"மிரட்டுகிறீர்கள்."

"உண்மை. முற்றிலும் உண்மை!"

"எட்டாக் கனிக்கு ஏனிந்த ஆசை? வேண்டாம் மன்னா!"

"ஹா ஹா... ஹா.." உடல் குலுங்க நகைத்துவிட்டு சொன்னான்,

"கிட்டாதாயின் வெட்டென மறப்பவனல்ல நான்! எட்டாதாயின் ஏறிப் பறிப்பேன். அப்படியும் அது கிட்டாதாயின் எவருக்குமே கிடைக்காமல் போகும் வழி செய்வேன்! வாழ்ந்தால் உன் மகள் அது என்னோடு! மறுத்தால் அவள் வாழமுடியாது எவரோடும்!"

அமைச்சர் அதிர்ந்தார். 'ஊரோடு பகைத்தால் வேரோடு கெடும்.' இவன் ஊரையே பகைத்துக் கொண்டவன். முடியோடும், கொடியோடும் முற்றிய செருக்கோடும் வீழப் போகிறவன். ஆனாலும் அதற்கு முன் என் மகள் கெட்டுப்போக, அந்த இளம் தளிர் பட்டுப்போக சுடுநீராய் மாறிவிடுவானே இந்த மாபாவி என்று நினைத்தார்.

"மன்னா! எனக்கு இரண்டு நாள் அவகாசம் கொடுங்கள். மகள் மனம் மாறி மணமுடிக்க சம்மதம் வாங்க!"

மன்னவன் உடனே மலர்ந்தான். கோபப் பட்டவன் இப்போது குளிர்ந்து போனான். பாய்ந்து வந்து அமைச்சரை ஆரத் தழுவினான்.

"நீரே அமைச்சர்! நீரே இனி என் மாமன்! மாசற்ற பொன்னாம் மறுவற்ற நிலவாம், மருளுவதில் மானாம், செல்ல மொழி பேசும் இதழ் தேனாம், என் இதயராணி அவளே உம் மகள்! பட்டத்து ராணியுமவளே. அவளைச் சுற்றிவரும் தேனி இனி நானே! சென்றுவாரும் அமைச்சரே! நீர் கொண்டுவரும் செய்தித் தேனுக்காய் காத்திருக்கும் என் செவிகள்!"

அமைச்சர் அகன்றார். மன்னவன் கனவில் மிதந்தான்.

□□

**ம**ஞ்சத்தில் மயில். மையல் கொண்ட மன்னவன் அவள் அருகில்.

வாய்நீர் பட்டுக்கிடந்தது முத்துமாலை. அது தவழ்ந்து இடைவெளியில்லாமல் குவிந்தும் திரண்டுமிருந்த பதினொருவிரல் அகல அழகுகளில்!

சிவந்து திரண்டு கனிந்திருந்தன இதழ்கள்.

வட்ட வடிவம்தான்- தசை திரண்ட கோலம்தான், முகம்பார்க்கும் கண்ணாடி போல் தோற்றம்தான் என்று சொல்லிக் கொண்டிருந்தன கன்னங்கள்.

அங்குலம் என்று பார்த்தால் இரண்டு தான். ஆனால் அழகுதான் அவள் மேவாய்.

சங்குபோல் இருக்கும் கழுத்து நான்கு விரல் அளவே அதன் பொலிவு. அதிலே தெரியும் மூன்றுவரிக் கோடு.

என்றெல்லாம் திருவிளையாடல் புராணத்திலே பரஞ்சோதியார் சொல்லும் உருவ இலட்சணங்கள் யாவும் ஒருங்கே யமைந்த வடிவத்தாள். ஓரவிழியால் பார்த்தாலே போதும் சொர்க்கம்தான்.

மன்னவன் மயங்கினான்.

"என் நெஞ்சத்தில் வந்தாய் முன்னே! என் மஞ்சத்தில் வந்தாய் பின்னே! என் உயி நீ தான் பெண்ணே! எனை நீ வெறுத்திருந் தால் விரகதாபத்தில் வெந்திருப்பேனடி என் கண்ணே!"

அணைக்க கரம் நீட்ட அழகோவியம் அசைந்து புரண்டது மஞ்சத்தில்.

"கையருகில் வந்த பின்னும் கைக்கட்டோ எனக்கு? காவியமே உன் புதிர் அறிய பொங்குதடி பொல்லாத ஆசை! ஓவியமே ஒதுங்காதே! எரியுதடி இன்பத்தீ. அதில் என்னை எரிக்காதே! கரச் சிறைக்குள் சிக்காமல் என் கனவுகளை பறிக்காதே!"

மன்னவன் மன்றாடினான். அல்ல அல்ல மயக்கத்திலே புலம்பினான். கனவினிலே பிதற்றினான்..

□□

**வி**டிந்ததும் வந்தது செய்தி! கொண்டு வந்தது நம்பிக்கையான ஒற்றன்.

"அமைச்சரும் மகளும் நாட்டைவிட்டு தப்பி ஓடுகிறார்கள் வேந்தே! என்ன செய்வது? தடுப்பதா? தடுத்தும் கேளாமல் அடி எடுத்து வைத்தால் இருவர் சிரசுகளையும் அறுப்பதா? இடுக உத்தரவு!"

இடிகேட்ட நாகமாய் துடித்தான் மன்னன்.

"போங்களடா போங்கள்! திரும்பிவர வேண்டும் அவர்கள்! மறுத்தால் வெளியேறட்டும் உயிர். வெறும் கூடாகட்டும் உடல்!"

□□

**வ**ந்திருப்பதோ வலிமையான படையணி! எதிர்த்துப் போராட வாளேந்தி தடுத்து விரட்ட வயதின் தளர்ச்சி அனுமதிக்காது.

மன்னவன் உத்தரவால் வந்து எல்லையில் படைகள் தடுக்க அமைச்சர் சூழ்நிலை கணித்தார்.

அமைச்சர் மகள் எதிர்நின்ற வீரனின் உறைக்குள் இருந்த உடைவாளை உருவினாள்.

விபரீதம் உணர முன்னரே அந்த உடைவாளை திருப்பி தன் மார்பில் செருகினாள்.

"ஐயோ மகளே!"

அமைச்சர் கதறினார். செல்ல மகளின் செவ்விரத்தம் பார்க்க முடியாமல் மயங்கிச் சரிந்தார்.

அமைச்சர் முகத்தில் நீர் தெளித்து மயக்கம் தெளிவித்து மடியில் தலை தாங்கியபடி படையணித் தலைவன் சொன்னான்.

"மன்னியுங்கள் அமைச்சரே! நாம் என்ன செய்வோம். அரச உத்தரவு!"

அமைச்சர் அவன் முகம் நோக்கி இறுதிவார்த்தைகளை உதிர்த்தார்.

"தவறு மன்னன் மீதல்ல. என் மீதுதான்."

"என்ன சொல்கிறீர்கள் அமைச்சரே?"

அணித் தலைவன் வியப்புற்றுக் கேட்டான்.

"ஆய்ந்தறியாமல், குணமறியாமல் கோமான் என்று நம்பி கூடியிருந்தேனே அது தவறு! நய வஞ்சகம் அவன் நாவில் இருப்பது தெரியாமல் நட்புக் கொண்டேனே அது பெரும் தவறு! என் தவறு என்னை அழித்துவிட்டது. நான் அழிவதால் கவலையில்லை. கெடு நட்பு கொடுத்த தண்டனை என்று விழி மூடியிருப்பேன். என்னால் என் மாணிக்கம் மண்ணில் அழிந்து போனதே! அய்யகோ! அதுதான் ஆறாத துயரம் எனக்கு! கெடு நட்பும் ஒரு பொறிதான். சிக்கிக்கொண்டால் மீள்வது அரிது! என் முடிவே அதற்கொரு சான்று."

அமைச்சர் உயிர் பிர்ந்தது.

கெடு நட்பு பற்றி திருவள்ளுவரும் சொன்ன கருத்து இதுதான்:

**"நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்**
**வீடில்லை நட்பாள் பவர்க்கு."**

அதிகாரம்-80, குறள்791.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-75

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ | 3 |
| | ■ | | ■ | ■ | 4 | |
| ■ | 5 | | 6 | ■ | | |
| 7 | | ■ | 8 | | | |
| | | 9 | | ■ | | ■ |
| | ■ | | | ■ | ■ | 10 |
| 11 | | | ■ | 12 | | |

**இடமிருந்து வலம்**

1. இதனாலும் கண்ணீர் வரும்.
7. முதல் வணக்கத்திற்குரிய மூவரில் ஒருவர்.
8. பண்டிகைக் காலங்களில் இதன் முழக்கத்தைக் கேட்கலாம்.
11. இதை இழந்த பறவைகளைத் துன்பப் படுவோருக்கு உதாரணமாகச் சொல்லுவார்கள்.
12. கஞ்சத்தனமுள்ளவர்களை இப்படியும் அழைக்கலாம்.

**மேலிருந்து கீழ்**

1. இன உணர்வு இப்படி மாறினால் இனப்பகையே மிஞ்சும்.
2. திருடர்களுக்கு இந்தச் சொல் பிடிக்காது.
3. திரையுலக நடச்த்திரங்கள் பற்றி இது அடிக்கடி வெளிவரும்.
4. சோம்பலும் இதனை ஏற்படுத்தும்.
5. இது கௌரவமும் கொடுக்கும், ஊக்குவிப்பும் கொடுக்கும்,
6. மனதில் இருக்கக் கூடாத ஒன்று.
7. இருட்டில் தொலைத்தால் எடுப்பது கஷ்டம்.
9. இதுவும் ஒரு இலாபகரமான தொழிலாகி வருகிறது.
10. மனைவி இவரை அம்மா என்பார். கணவர் அப்படி அழைக்க முடியாது.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 19.11.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

குறுக்கெழுத்துப் போட்டி இல-75
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

*சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.*

### குறுக்கெழுத்துப் போட்டி இல-73க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 கூ | டா | 2 ர | ம் | ■ | 3 சீ | ■ |
| ர் | ■ | வை | ■ | 4 ச | ரு | 5 கு |
| மை | 6 தா | ■ | 7 வ | ■ | டை | ம் |
| ■ | 8 வ | ல | ய | ம் | ■ | மா |
| 9 கா | ர | ■ | லி | ■ | 10 கா | ள |
| 11 க | ம் | 12 ச | ன் | ■ | த | ம் |
| ம் | ■ | னி | ■ | 13 நெ | ல் | ■ |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.73இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. திருமதி.ஆர்.சுஜாதா கொழும்பு-14.
2. எஸ்.ஜெயராஜ் வவுனியா.
3. செல்வி. பாத்திமா பாயிஸ் ஓட்டமாவடி.
4. வை. அஹமட் லெப்பை ஹொரவப்பொத்தானை.
5. இராஜேந்திரா களுவாஞ்சிக்குடி.
6. சபூக் அஹமட் பாணந்துறை.
7. எஸ்.மனோகரன் மட்டக்களப்பு.
8. எம். அரபாத் கண்டி.
9. எம். நஸீரா மூதூர்.
10. எஸ். அகல்யா முந்தல்.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## ஸ்போர்ட்ஸ் > அன்றொரு நாள் 29.12.83

# கவாஸ்கரின் சாதனைச் சதம்



**சென்னை.டிச.28.**

**உ**லகின் கிரிக்கெட் ஆட்டத்தில் இந்தியாவின் தலைசிறந்த ஆட்டக்காரரான கவாஸ்கர் இன்று சென்னை சேப்பாக்கத்தில் உலக சாதனையை நிகழ்த்தினார்.

மேற்கிந்தியத் தீவுகளுடனான ஆறாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இன்று பிற்பகல் அவர் சதத்தை எட்டியபோது வானமே அதிரும்படி இரசிகர்கள் ஆரவாரம் எழுப்பினர். டெஸ்ட் போட்டிகளில் இது அவருடைய 30வது சதமாகும். உலகில் யாரும் கிரிக்கெட் டெஸ்டுகளில் 30 சதம் அடித்தது கிடையாது.

கிரிக்கெட் ஆட்டத்தில் 'மன்னர்' என்று கருதப்படும் அவுஸ்திரேலிய வீரர் டொனால்ட் பிரட்மன் டெஸ்ட் போட்டிகளில் 29 சதம் அடித்து இதுவரை உலக டெஸ்ட் வரலாற்றில் தலையாய இடம் வகித்து வந்தார். 1928ல் தமது முதல் செஞ்சரியை அடித்த பிரட்மன் தமது 29வது செஞ்சரியை 1948ம் ஆண்டு அடித்தார்.

அதன்பிறகு கடந்த 35 ஆண்டுகளில் யாராலும் இந்த விஷயத்தில் பிரட்மனை மிஞ்ச முடியவில்லை. சமீபத்தில் டில்லி டெஸ்ட்டில் தமது 29வது சதத்தை அடித்த கவாஸ்கர் இன்று சென்னையில் 30வது சதத்தை அடித்து பிரட்மனை மிஞ்சி தன்னிகரற்ற இடத்தைப் பிடித்துள்ளார்.

கவாஸ்கர் 1970-71ம் ஆண்டில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக அந்நாட்டில் விளையாடிய டெஸ்ட்டில் தனது முதல் சதத்தை அடித்தார். இப்போது அவரது உலக சாதனை சதத்தையும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராகவே அடிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கவாஸ்கர் டெஸ்ட் கிரிக்கெட்டில் ஏற்கனவே வேறு சில உலக சாதனைகளையும் புரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வரிசையாக மூன்று இனிங்சிலும் சதம் அடித்த சாதனையை, கவாஸ்கர் இரண்டு தடவை புரிந்துள்ளார். இந்த சாதனை புரிந்துள்ள கிரிக்கெட் வீரர் உலகில் கவாஸ்கர் ஒருவர் தான்.

ஒரு டெஸ்ட்டில் இரண்டு இனிங்சிலும் ஒருவர் சதம் அடிப்பது என்பது அபூர்வமாகும். கவாஸ்கர் மூன்று டெஸ்ட்டுகளில் இவ்விதம் இரண்டு இனிங்சிலும் தலா 1 சதம் அடித்தார். உலகில் இவ்வித சாதனை புரிந்துள்ள ஒரே கிரிக்கெட் வீரர் கவாஸ்கர்தான்.

கவாஸ்கர் இன்று ஆட்டம் முடிந்த பின்னர் நிருபர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் இன்று 30வது சதத்தைப் பூர்த்தி செய்தபோது தாம் ஆனந்தக் கண்ணீர் வடிக்கவில்லை என்றார். "அது என்னுடைய பாட்டிங்கைப் பாதித்திருக்கும்" என்றார்.

உலக சாதனை ஏற்படுத்த உதவிய தமது கிரிக்கெட் மட்டையை இன்று அவர் தேனீர் இடைவேளையின் போது மேற்கிந்திய தீவுகள் அணியின் விக்கட் காப்பாளர் ஜெவ் டுஜோனிடம் அன்பளிப்பாகக் கொடுத்து விட்டார். இது பற்றி நிருபர்கள் கேட்டனர்.

"நான் (டுஜோன்) விக்கட் கீப்பராக இருக்கிற டெஸ்ட்டில் நீங்கள் 30வது செஞ்சரியை அடித்தால் உங்கள் மட்டையை அன்பளிப்பாகக் கொடுப்பீர்களா? என என்னிடம் டுஜோன் தனியே பேசுகையில் கேட்டிருந்தார். அவருக்கு அளிப்பதாக வாக்களித்தேன்," என்று கவாஸ்கர் சொன்னார்.

**(இந்தியக் கிரிக்கெட் குழுவின் முன்னாள் கப்டன் சுனில் கவாஸ்கர் சாதனைபடைத்த போது இந்திய தினசரியான 'தினமணி'யில் 29.12.83 வெளியான செய்தி இது. வரலாறுப் பதிவான செய்திகளை திரும்பிப் பார்ப்பதும் ஒரு சுவையல்லவா?")**

**இவ்வாரம் (13.11.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

# மகாபாரதம்

அங்கம் 54

**காலத்தின் குரல்:** ஆணும் பெண்ணுமற்ற அலியாகக் கடவதென்று கட்டுக்கடங்காத காமத்தீயால் காய்ந்த ஊர்வசி சாப மிட்டாள்! கட்டழகன் காண்டீபன் களையிழந்து துடிதுடித்தான். ஆச்சாரியார் துரோணர் அன்புக்கோர் சீடன் அர்ச்சுனனுக்கேற்பட்ட அதிர்ச்சியுறு சம்பவத்தால் அங்குசத்தால் அல்லலுறும் யானை நிகரானான். சாபத்தின் வேகம் தணிந்து குறைந்தால்தான் சோகம் மறந்து சகமடைவான் காண்டீபன்.

-காட்சி தொடக்கம்-

தேவலோகம்– இந்திரன் சபை.

**இந்தி:** அர்ச்சுனன் உன்னை அவதூறு சொன்னானோ? அப்சரச கன்னி நீ! அழகின் அவதாரமும் நீ! தாயாகவோ மாற்றான் தாரமாகவோ ஆகும் தகுதி உனக்கில்லை என்றால் ஆசை உனக்கெழுந்ததென்ன? ஊர்வசியே எண்ணிப் பார்! பார்த்தனுக்கு நீ கொடுத்த சாபத்தைக் குறைத்துவிடு! ஒரு வருடம் மட்டுமவன் அலியாய் உலவட்டும்!

**ஊர்:** ஆசையினாலெழுந்த ஆத்திரத்தில் அறிவிழந்தேன்! மன்னித்தருளுக என்று மண்டியிட்டுக் கோருகிறேன். தங்களின் ஆணைப்படி தண்டனையைக் குறைக்கின்றேன்.

□□□

அர்ச்சுனன் வருகின்றான்.

**அர்ச்:** வணக்கம் கூறுகிறேன் வாஞ்சையுள்ள பிதாவே!

**இந்தி:** நீடூழி வாழ்க! நின்புகழும் ஓங்குக!

**அர்ச்:** அவ்வாறு வாழ்த்தாதீர் அமரர் புரிக்கரசே! ஆணும் பெண்ணுமற்ற அலியாக வாழ்வதற்கு ஆர்வமில்லை எனக்கு!

**இந்தி:** அஞ்ஞாத வாசத்தின் ஆண்டொன்றில் தானும் இக்கோலம் உன்னை இயல்பாகக் காத்திடுமே!

**அர்ச்:** ஓராண்டுக்காக ஆயுள் முழுவதும் நான் அலியாக உலவிடவோ?

**இந்தி:** அவ்வாறெதுவும் ஆகாது அருமைந்தா! ஓராண்டு மட்டும்தான் அலியாய் நீ உலவிடலாம். யாரும் அறியாமல் மறைந்து வாழும் காலத்தில் இச்சாபம் உனக்கு உவப்பாகத்தான் உதவும்!

**காலத்தின் குரல்:** படைத்தல், காத்தல், அழித்தல் முத்தொழிலுக்குரியவர்கள் மும்மூர்த்திகளென்பதனால் வணக்கத்துக் குரியவரே! பெருமையும் பெரும் புகழும் பரம்பரைச் சொத்தல்ல. செய்யும் செயலாலே சேரும் புகழ் மட்டும் சிறப்புதனைப் பெற்றிருக்கும். மகாபாரதக் கதையில் மதிப்புக்குரியவளாய் பாஞ்சாலி உருவகிப்பாள். பரந்தாமன் கிருஷ்ணனும் வணக்கத்துக்குரியவன் தான்! இந்தப் பெருங்கதையின் நாயகனும் அவனே தான்! ஆகவேதான் அவனை அடிக்கடி காண்கின்றோம்!

□□□

துவாரகை–சுபத்திரையின் அந்தப்புரம்–மகன் அபிமன்யுவின் குறும்புகளை சுபத்திரை அடக்க முனைகிறாள்.

**சுபத்:** நின்றுவிடு அபிமன்யு! நிற்கவில்லையானால் உன்னை அடித்தே அடக்கிடுவேன்!

**கிருஷ்:** ஓ அபிமன்யுவா?... அன்புத் தங்கை சுபத்ரா! யாரை நீ தேடுகிறாய்?

**சுபத்:** நான் யாரைத் தேடுகிறேன்..? நன்றாக நீ அறிவாய்..! எங்கே அந்தக் குறும்புக்காரப் பையன்?

**கிருஷ்:** குறும்புக்காரன் என்றா கூறுகிறாய் உன் மகனை! சின்னவனாய் நான் வளர்ந்த நந்தகோன் கிராமத்து நங்கையர் எனக்கு வைத்த நயமான பேர் அதுதான்! வெண்ணை திருடி உண்பேன் வெறுங் குடத்தைப் போட்டுடைப்பேன். என்னால் என்தாய் யசோதை பட்ட பெரும்பாடு பாரே அறிந்தகதை!

**சுபத்:** பழைய கதை பேசி என்னை பைத்தியமாயாக்காதே! என் மகனைத் தேடுகிறேன். எங்கொழிந்து கொண்டுள்ளான்? அவன் இன்று நன்றாக அடி வாங்கப் போகின்றான்.

**அபிமன்:** (இரகசியமாக) கண்ணான மாமா எனைக் காட்டிக்கொடுக்காமல் காப்பாற்றுங்கள் இப்போ!

**சுபத்:** ஓஹோ இங்கேதான் ஒட்டி ஒளிந்து கொண்டுள்ளாயோ...?

**கிருஷ்:** அபிமன்யு இப்போ என் அடைக்கலப் பொருளானான். அன்புத்தங்கை சுபத்ரா! அவனை அடியாதே! அளப்பரிய பெரும்புகழை அடையப் போகும் அவனை அர்ப்பமாக எண்ணாதே! அவனாலேதான் உந்தன் அரும் புகழும் அவனி மெச்சும்! அர்ச்சுனனை அடைந்ததும் நீ அபிமன்யு தோன்றுதற்கே!

**சுபத்:** அவன் தாழ் பணிந்திப்போ ஆசி பெற்றிடவோ அண்ணா?

**கிருஷ்:** தாயன்புதனை ஊட்டி தகுந்தாற் போல் வளர்த்து விடு! அபிமன்யு! நீயும்தான் அன்னைதனை அழவைக்க எண்ணுவது அழகல்ல! ஆண்டவனுக் கடுக்காது!

**அபிம:** அப்பாவைப்போல் நானும் வில்வித்தை கற்பதற்கு விரும்புகிறேன் மாமா! அம்மா விடுவதில்லை அவரிடமே கூறுங்கள்!

**கிருஷ்:** மாபெரும் வீரர்களின் வரிசைதனை எதிர்த்தே வீரப்போர் புரிந்து புகழினைப் பெற்றிடுவான்! முக்கால வரலாறும் முழுமையாகப் போற்றும் மாண்புதனைப் பெற்றிடுவான்!

**சுபத்:** போர் பற்றிக் கூறுகின்றீர்! எந்தப் போர் என்று எடுத்துரைக்கலாகாதோ?

**கிருஷ்:** உண்மைக்கும் பொய்மைக்கும் இடை நடுவே எழும்புமொரு உக்கிரமமானதொரு போர் பற்றி இயம்புகிறேன்! இருளுக்கும் ஒளிக்கும் இடை நடுவே வெடிக்கும் அந்த இறுதிப்போர் தன்னில் நடு நிலையில் நிற்பதற்கு எவராலும் முடியாது. ஏதாவதோர் பக்கம் எல்லாரும் சார்பார்கள்!

**சுபத்:** உன் நிலைமை என்ன அண்ணா?

**கிருஷ்:** அத்தனையும் இப்போ அறிவதற்கு ஆகாது. அன்பு மகனுக்கு அரும் பயிற்சியுடன் சேர்த்து ஆசிகளும் கொடுத்திடப் பார்! நான் கூறும் போர் தன்னில் ஒரு நாள் முழுவதையும் உன் மகனே நடத்திடுவான்!

**சுபத்:** வெற்றிபெறுவானா அப்போரதனில் என் மகனும்?

**கிருஷ்:** அபிமன்யு காட்டும் அரும் வீரச் செயல்கள் அத்தனை வீரர்களின் போற்றுதலைப் பெற்றோங்கும்!

<u>பின்னணிப் பாடல்:</u>

பாரதத் திரு நாட்டின் பெரும் புகழுக் கணிகலனாய்
பார்த்தனவனின்றெடுத்தா னொரு புதல்வன்- வீரமதில்
விண்ணவர்க்கும் பின்னிற்கா- வேழம் நிகர்த்தவனாம்
கண்ணாவான் பாண்டவப் பேரணிக்கே!

-காட்சி மாற்றம்-

அஸ்தினாபுரம்–பீஷ்மரும் துரோணரும் துன்பமேலீட்டால் தலை கவிழ்ந்துள்ளனர்– விதுரர் அவ்விடம் வருகிறார்.

**பீஷ்ம:** வாரும் விதுரரே! அஸ்தினாபுரத்துக்கு அண்மித்து வருகின்ற அழிவை நினைத்து நீரும் கண்ணீர் விட்டழுது கவலை துய்க்கக் கோருகிறோம்!

**விதுர:** கவலை கொள்வதுடன் கண்ணீர் வடித்தாலும் அவலநிலை என்றும் அகன்றிடப் போவதில்லை!

**பீஷ்ம:** மரணப் படுக்கையிலே கிடக்கின்ற மாதவளை மருத்துவர் கை விட்டு விட்டால் மாதவள் ஈன்றெடுத்த மைந்தனவன் என்ன செய்வான்? கண்ணீர் விட்டே அழுது கவலைதனைக் கொள்வதன்றி வேறேதும் மார்க்கமுண்டோ? மகாத்துமனே கூறிடுங்கள்! அஸ்தினாபுரி நோக்கி ஆர்ப்பரித்து வரும்போரை அணை போட்டுத் தடுத்திடவும் உரிய வழி ஏதுமுண்டா?

**துரோ:** போர் ஒன்றை எதிர்நோக்கும் எண்ணம் இல்லாவிட்டால் தேவர்களின் அஸ்திரங்கள் தேடிச்சென்றே பார்த்தன் திரட்டுவதன் அர்த்தமென்ன?

**விதுர:** தீர்மானம் எடுப்பதற்கு உரிமை இல்லையா அவர்க்கு?

**பீஷ்ம:** உரிமைகளைப் பற்றி இங்கே உரையாடவில்லை மகனே! போர் ஒன்று வருவதையே விரும்பி வரவேற்கவில்லை. இதுவே இன்று எந்தன் விருப்பமதுவாகுமப்பா.

**விதுர:** அமைதியுடன் இருப்பேன் நான். ஆனாலும் வரலாறு அமைதியுறப் போவதில்லை! கங்கா புத்திரர் பீஷ்மர் போரை வெறுத்ததற்குக் காரணத்தைக் கோரும் அது!

**துரோ:** வினாவுக்கு ஏற்ற விடையளிக்க விதுரருக்கு நிச்சயமாய் முடியும்! முதியவராம் பிதாமகரை வினா விடுத்து வதைக்காதீர்!

**பீஷ்ம:** விதுரர் வினாக்களை வீசுவது நல்லதுதான்! யுத்தமொன்று வருவதனை நான் விரும்பாதிருப்பதற்கு நல்லதொரு காரணமும் இல்லாமல் இல்லை அப்பா! பாண்டவரின் பக்கமதில் உண்மை நிறைந்திருந்தும், போர் ஒன்று வருமானால் நேர்மைக்கு மாறான துரியனையே சார்ந்து நின்று போர் புரிய வேண்டுமன்றோ? மூத்தவனாம் நானிருக்க என் முன்னே திரௌபதியை துகிலுரியச் சொன்ன மூர்க்கனவன் அணி சேர்ந்து போர் புரிதல் நலமாமோ? அன்றந்த அவை தனிலே நான் பட்டபெரும் காயம் மாறவே இல்லையப்பா!

**விதுர:** போர்தன்னைக் கவசமாக போர்த்த நினைக்கின்றீர்! உண்மையதன் உயர்வறிந்து அந்த உண்மையின்பால் சார்ந்து நின்றால் உங்கள் நிலையில் இன்னும் உயர்வடைய நியதியுண்டே!

**பீஷ்ம:** சத்தியவதித் தாயை என் தந்தை விரும்பியதால் சபதமதை மேற்கொண்டேன். மேற்கொண்ட சபதத்தை மீற முடியாதே! பாண்டவரின்மீதுள்ள என் பாசம் தாழ்ந்ததென்றும் உன் பாசம் மட்டும் உயர் நிலை உள்ளதென்றும் உண்மைக்குப் புறம்பாக உணர்வு கொள்ளல் நல்லதல்ல. உண்மைக்கும் பொய்மைக்கும் உள்ள இடைவெளியை உணராதவன் நானல்ல. யுத்தமொன்று வருமானால் யுதிஷ்டிரனை வாழ்த்திடவே என் உள்ளம் துடித்து நிற்கும். ஆனாலும் எந்தன் ஆயுதங்களும் நானும் துரியனுக்கே துணைநிற்கும். விதுரர் மகாத்துமனே! ஒன்றை மறவாதீர்! அஸ்தினாபுரம் அன்று இரு கூறாய் ஆன போதே என் இதயமும் பிழந்து இரு கூறாய் போனதன்றோ?

-காட்சி மாற்றம்-

அஸ்தினாபுரம்–துரியோதனன் அரண்மனைக்கு கர்ணன் வருகின்றான்.

**கர்ண:** துரியோதனா! நண்பா! தலை கவிழ்ந்து கிடப்பதற்கு தக்க காரணம் உண்டோ?

**துரி:** அங்க நாட்டுக்கதிபா! அருமையுள்ள நண்பா! மரணம் என்பதே உண்மை! மாற்றதற்கு வேறு இல்லை! மரணத்தைக் கண்டு அஞ்சும் மாபெரிய கோழை இந்தத் துரியோதனன் அல்ல என்ற உண்மைதனை நீ அறிவாய்! ஆனாலும் அந்த பீமன் கையால் மடிய எனது மனம் ஒப்பவில்லை. பதின்மூன்று ஆண்டுகளும் பறந்தோடிப் போகிறது. அன்றந்த அவை நடுவே பீமனிட்ட சபதக்குரல் ஓங்கி ஒலிக்கிறதே!

**கர்ண:** பீமனைப் பற்றி உனக்கு வீண் பயம் ஏன் நண்பா!

**துரி:** பயம் என்ற சொல்லுக்கு எனக் கர்த்தம் புரியாது! குரு துரோணாச்சாரியரும் கூறவில்லைக் கருத்தை. பாண்டவருக்கும் எந்தன் தம்பியர்க்கும் பயத்தின் பொருள் எதுவும் தெரிந்திருக்க நியாயமில்லை!

**கர்ண:** அப்போ... உன் குரலில் ஏன் நடுக்கம்?

**துரி:** பீமனும் வீரன் தான். குரு துரோணாச்சாரியரின் கீழிருந்து கற்றவர்கள் அவர்களுடன் நாங்களும்தான்! போரென்று வந்துவிட்டால் வெற்றி தோல்வி இரண்டையுமே எவரும் அடைந்திடலாம். யுத்த பூமியில் வந்து சித்து விளையாட மாமா சகுனியால் முடிவே முடியாது! ஆகவேதான் சொன்னேன் அழிவுதனை ஏற்றாலும் பீமன் எனை வீழ்த்துவதை ஏற்கவில்லை என் மனது.

**யுயுத்சு:** *(துரியோதனனின் தம்பிமாரில் ஒருவன்)* அண்ணி திரௌபதியின் துகிலை உரிவதற்கு திட்டமிடுமுன்னரன்றோ தீர்மானிக்க வேண்டும்! அவர்களும் எமது சகோதரர்கள் தானன்றோ!

**துரி:** நீ எந்தன் சகோதரனா? பாண்டவர் தம் ஒற்றனா? அவர்கள் எமக்கு என்றும்



உடன் பிறப்பே அல்லர்!

**துச்சா:** முற்றிலும் உண்மையண்ணா! கானகத்திலே இருந்து ஐவரை அழைத்து வந்து தான்பெற்ற பிள்ளைகள் இவர்கள் தான் என்று சிற்றன்னை அன்று சொன்னார். எப்படித்தான் இக் கூற்றை ஏற்க முடிந்ததுவோ?

**கர்ண:** வேறெவரின் பிள்ளைகளை தன் உதிரத்திலே உதித்த தனயரென்று கூறுவதை தாய் விரும்பமாட்டாள். பேரரசி குந்தி மாதா பொய் கூற மாட்டார்கள். தாய்மையை இழிவு செய்தல் தரக்குறைவானதன்றோ!

**துரி:** அஸ்தினாபுரி நாட்டை அவர்களிடம் அளித்திடவா?

**கர்ண:** அஸ்தினாபுரிமீது உனக்குரிய உரிமைகளை உடைத்தெறிய முடியாது. தாய்மைக்கு மதிப்பளிக்க வேண்டுவதே என் கூற்று.

**துரி:** அப்படியே ஆகட்டும்! ஆனால் இவன் யுயுத்சு விதுரரைப் பின்பற்றி பாண்டவர்கள் பக்கத்தில் பாய்கின்றான் பார்த்தாயா? இவனை இப்போதே இங்கிருந்து விரட்டிடுங்கள்.

**யுயுத்:** போகின்றேன் அண்ணா! போவதற்கு முன்னர் ஒன்று சொல்லிவைக்க எண்ணுகிறேன். அழிவு வரும்போது அதன் ஓசை தெரிவதில்லை!

யுயுத்சுவைத் தாக்க துரியோதனன் முற்பட கர்ணன் தடுக்கின்றான்.

**கர்ண:** எவர் கருத்தையும் காதில் வாங்குவதே நன்று. பிறர் கூறும் விமர்சனத்தில் பேருண்மை தொக்கி நிற்கும்! எதிர் தரப்புக் கருத்துக்களை ஏற்றுத் தெளிவதற்கு உன் காதுக்கு நற்பயிற்சி நிச்சயமாய்த் தந்திடப்பா!

**துரி:** என் கருத்தை எதிர்ப்பதற்கு உனக்குத் துணிவிருந்தால் ஏன் எதிர்க்கவில்லை நீ?

**கர்ண:** என் இலக்கு ஒன்றேதான்! உன் அருகே இருந்த வண்ணம் அர்ச்சுனனை அழிக்கவேண்டும்!

-காட்சி மாற்றம்-

வனத்தில் பாண்டவர்களிடம் தேவலோகத்திலிருந்து அர்ச்சுனன் வந்து சேர்கிறான்.

**யுதிஷ்:** மாளிகையானாலும் மண்குடிசையானாலும் நீ அருகே இல்லாமல் மகிழ்ச்சிக்கிடமேதுமில்லை!

**அர்ச்:** அதுவேதான் என் நிலையும்! சொர்க்க லோக வாழ்க்கையிலும் சோதரர்கள் நீங்களின்றி சோபிக்கவில்லை அண்ணா! உடலங்கே உழன்றாலும் உயிருங்கள் அருகினிலே எப்போதும் உலவியது.

**யுதிஷ்:** தெய்வீக ஆயுதங்கள் கிடைத்தனவா தம்பி!

**அர்ச்:** அத்தனையும் பெற்று வந்தேன். அஸ்திரங்களை ஏவும் அருமுறைகளும் கற்றேன்!

**சகாதே:** பாசுபத அஸ்திரத்தை பெற்றிருந்தால் எங்களுக்கும் பயன்படுத்தும் புதுமைதனை பார்க்க ஆவல் அதிகமுண்டு!

அர்ச்சுனன் பாசுபத அஸ்திரத்தை எடுத்து வில்லில் நாணேற்றி அதனை ஏவ முயலும்போது நாணின் ஒலியோடு அசரீரி எழுகிறது.

**அசரீரி:** தெய்வீக அஸ்திரங்கள் விளையாட்டுப் பொருட்களல்ல. மனித நலத்துக்காய் மட்டும்தான் ஏவிடலாம். தவறு ஏதும் நேர்ந்தால் இத்தலமே அழிந்துவிடும். அஸ்திரம் மறைகிறது. அனைவரும் வணங்குகின்றனர்.

-காட்சி மாற்றம்-

அஸ்தினாபுரி–துரியோதனனின் பயிற்சிப் பாசறையில் அவனுடைய தம்பிமார் வளைந்து நின்று துரியோதனனை கதாயுதத்தினால் தாக்குகின்றனர். அவன் மேலும் அதிக வலுவாகத் தாக்கும்படி கூறுகிறான். கர்ணன் அங்கே வருகிறான்.

**கர்ண:** போருக்கான பயிற்சிகளில் மும்முரமாய் இறங்கிவிட்டீர்! சுற்றியுள்ள கடமைகளில்,கவனம் தவிர்த்துவிட்டீர்! சால்வ நாட்டு மன்னவனின் சுயம்வர அழைப்பினையும் சிந்திக்க மறந்துவிட்டீர்!

**துச்சா:** அங்க மன்னர் கூறுவது அத்தனையும் உண்மை அண்ணா!

**துரி:** எப்பக்கம் திரும்பிடினும் அர்ச்சுனனும் பீமனுமே அகக்கண்ணை உறுத்துகிறார். அப்புறமோ இப்புறமோ என் கவனம் சிதறவில்லை!

**கர்ண:** சிந்து மன்னன் ஜெயத்ரதன் செய்தி தன்னை ஏன் மறந்தாய்? சுயம்வர விழாவுக்கு சிந்து மன்னன் செல்கையிலே உடன் உன்னை அழைத்து சென்றிடவே வருகின்றான்.

**துரி:** ஜெயத்ரத மன்னனுக்கு நான் விளக்கம் தந்திடுவேன். தேவலோக அஸ்திரங்கள் அத்தனையும் பெற்ற அந்த அர்ச்சுனனும் வந்துவிட்டான்! எக்கணமும் பாண்டவர்கள் போர் முழக்கம் செய்திடலாம். ஆகவேதான் நான் இங்கு இருப்பதும் அவசியமாம்! அரசியலின் அந்தரங்கம் புரிந்தவன்தான் ஜெயத்ரதன்!

-காட்சி மாற்றம்-

காட்டுப் பாதையில் ஜெயத்ரதன் இரதத்தில் வருகின்றான். அப்பாதையில் திரௌபதி தனியாகச் செல்கின்றாள். பாண்டவர்களின் சித்தி மகள் துஷியாலாவின் கணவனான சிந்து மன்னன் ஜெயத்ரதன் திரௌபதிக்கு தம்பிமுறையாவான்.

**ஜெயத்:** சாரதியே! இரதத்தைச் சற்று நிறுத்தப்பா! திரௌபதியா தனி வழியே செல்கின்றாய்? தாதிமார் சூழ வர தந்தப் பல்லாக்கிலேறி தரமோடு பவனிவரும் தகுதியுள்ள நீ இங்கே தவக்கோலம் பூண்டு இன்று தனி நடப்பதைப் பார்க்க முடியாதிருக்கிறதே! அரண்மனையைத் துறந்து ஆரண்யம் ஏகியதை என்னுள்ளம் தாங்காது வேதனைதான் ஓங்கிடுதே!

**திரௌ:** மகிழ்ச்சியும் துன்பமும் மாளிகையிலும் இல்லை, மண் குடிசையிலும் இல்லை. மனத்தளவில்தான் எந்த மகிழ்ச்சி நிறைவுண்டு. அரண்மனையில் கண்ட ஆனந்தம் அத்தனையும் ஆரண்யத்திலுமுண்டு!

**ஜயத்:** என்றாலும் எந்தன் இதயம் தவிக்கிறது. என்னுடனே வந்துவிடு! ஏற்றமிக வாழ்வுனக்கு இயல்பாக நான் தருவேன்!

**திரௌ:** என் கணவர் தங்கையினை வாழ்க்கை துணையாக ஏற்றவன் நீ! எந்தன் தம்பிக்குச் சமானம் நீ! தகாத வற்றைப் பேசுகிறாய்! இந்திரப் பிரஸ்தத்தின் அரியணைக்கு உரியவரின் அன்புடைய பத்தினி நான்! அடாதவற்றை உதிர்த்து அலங்கோலப்படவேண்டாம்! பஞ்ச பாண்டவர் தமது பலங்கொண்ட ஆயுதங்கள் அத்தனைக்கும் உள்ள சக்தி எனக்குண்டு என்பதனை மறந்து போனாயோ நீ!

**ஜெயத்:** ஆத்திரத்தினால் உந்தன் அழகும் அதிகரிக்கும் அதிசயத்தை அன்றோ நான் அகமகிழ்ந்து இரசிக்கின்றேன்.

**திரௌ:** மணமான பெண்மணியை தாயாக ஏற்கும் தனிப் பண்பை மறவாதே!

**ஜெயத்:** காலத்தை வீணாக்கி கவலையை அணைக்காதெனது காதலை ஏற்றுக் கொள். இக்கானகந்தன்னில் எம்மைக் கவனிக்க எவருமில்லை! பார் பெண்ணே!

ஜெயத்ரதன் திரௌபதியை இழுத்து தன் இரதத்தில் ஏற்றிக்கொண்டு விரைகிறான்.

□□□

பாண்டவர்கள் குடிசைக்கு வந்து பார்த்து திரௌபதியைக் காணாது தவிக்கின்றனர். பீமனும் அர்ச்சுனனும் திரௌபதியைத் தேடிச் செல்கின்றனர். இடையில் திரௌபதியின் மண்கலசம் தரையில் உடைந்து கிடக்கிறது.

**பீமன்:** பாஞ்சாலியின் மண் பானை உடைந்து கிடக்கிறதே!

**அர்ச்:** காலடியும் காண்கின்றோம்.

**பீமன்:** இரதம் சென்ற தடத்தினையும் காண முடிகிறதே!

ஓடிக்கொண்டிருந்த பீமனும் அர்ச்சுனனும் வழியில் வந்த வயோதிபரிடம் விசாரிக்கின்றனர்.

**அர்ச்:** இப்பக்கம் எவரையும் இரதந்தனில் பார்த்தீரா?

**முதியவர்:** மன்னவன் ஒருவன் மங்கை ஒருத்தி தனைக் கடத்திச் செல்வதைப் பார்த்தேன்! அந்த மன்னவன் தன்னை அந்த மங்கை வெறுப்புடனே அடித்தும் உதைத்தும் திமிறி வெளியேற முனைவதையும் பார்த்துத் துணுக்குற்றேன்!

பீமன் அதே வழியில் ஓடிக்கொண்டேயிருக்க அர்ச்சுனன் தனது வில்லை எடுத்து பாணம் ஒன்றைத் தொடுக்கின்றான். ஜெயத்ரதன் இரதத்தின் முன்பாய்ந்த அம்பு பெரும் தீச்சுவாலையாகி நின்று தேரைத்தடுக்கிறது. தொடர்ந்து வரும் பாணங்கள் காவலரைக் கொல்கின்றன. ஜெயத்ரதன் தேரை விட்டே இறங்கி ஓட்டம் பிடிக்கின்றான். பீமன் துரத்தி வந்து அவனைப் பிடித்து அடித்து உதைக்கின்றான்.

**திரௌ:** கோழையைப்போல் எங்கே ஓடுகிறாய் அடா தம்பி! காண்டீபம் தனில் பிறந்து பறந்துவரும் கணைகளது பெருமைதனை இப்போது அறிந்தாயா? அறிவிலியே?

**அர்ச்:** அடித்தது போதும் அண்ணா! அவனைத்தண்டிக்க அண்ணன் இருக்கையிலே தண்டிக்கும் தனி உரிமை எமக்கில்லை அன்றோ!

ஜெயத்ரதனை இழுத்து வந்து யுதிஷ்டிரரின் முன்னே விடுகின்றான் பீமன்.

**யுதிஷ்:** என்ன தம்பி பீமா! ஏனிப்படிச் செய்தாய்!

**பீமன்:** பேசுதற்கு ஏதுமில்லை! மரண தண்டனை வழங்கி மாசுதனைக் களையுங்கள்! பாஞ்சாலியை இவன் கபடமாகக் கடத்திவிட்டான்!

**யுதிஷ்:** தங்கை துஷாலாவின் கணவன் இவனுக்கு தண்டனை வழங்க தகுதியில்லை எமக்கு!

**சகாதே:** உறவுமுறை பார்த்துத்தான் நீதி அளிப்பதென்றால் அது நேர்மை ஆகாது. மாற்றான் மனைவிதனை மையலுடன் கவர்ந்தோன் மன்னவனே ஆனாலும் மரண தண்டனைதான் நீதி!

**யுதிஷ்:** நீதியையும் அநீதியையும் நேர்காண நினைக்குமுன்னர் நிதானித்து நிலை அறிதல் நியாயம் எனப்படுகிறது. கானகத்தின் நடுவினிலே தனியான குடிசையிலே துணையின்றி பாஞ்சாலி தனித்திருக்க விட்டதனால் நாமும்தான் தவறு விட்டோம். பாதிக்கப்பட்டவள் பாஞ்சாலி என்பதனால் தண்டனை எவ்வாறு அமையவேண்டும் என்பதையும் பாஞ்சாலி கூறட்டும்!

**திரௌ:** குற்றமிழைத்த இந்தக் கெடுமதியாளன் உங்கள் அடிமையாக இருக்கட்டும்! மரண தண்டனை வழங்கி துஷாலாவை விதவையாக்கி விடுவதும் அழகல்ல!

**ஜெய:** நான்செய்த தவறுக்கு மரண தண்டனை தந்து நீதி நிலை நாட்டுங்கள்!

**திரௌ:** குற்றமிழைத்தவனின் கோரிக்கைதனை ஏற்று தண்டனை வழங்குவது தர்மத்தின் செயலல்ல!

பீமன் ஜெயத்ரதனின் தலை முடியைச் சிரைத்து விடுகிறன்.

-காட்சி மாற்றம்-

சகுனியின் இருப்பிடத்துக்கு கர்ணன் வருகின்றான்.

**கர்ண:** வணக்கம் மாமா! தங்கள் வாழ்த்துக்களைத் தாருங்கள்! எங்களைப்போன்ற முட்டாள்கள்தான் என்றும் கவலையுடன் சோர்ந்திருப்பர் என்றெண்ணி இருந்தேன் நான்! இன்றுங்கள் நிலையினிலே கவலை தோய்ந்து கிடப்பதென்ன?

**சகுனி:** கவலைகள் எல்லாமே ஒரே சீராய் அமைவதில்லை. பாண்டவரின் வன வாசம் முடிவடைந்துவிட்டதிப்போ! எவராலும் அறியாத அடையாளமது மாறி மறைந்து வாழும் காலமிது. துரியோதனன் முன்போல் என்னை மதிப்பதில்லை. என்மீது ஏனோ நம்பிக்கை வைப்பதில்லை. உன்னை மதிக்கின்றான். உன்வார்த்தை அவனை உணரவழி வகுக்கும். அஞ்ஞாத வாதத்தில் பாண்டவர் இருக்கையிலே பிடிக்கமுடியாவிட்டால் போரைத் தவிர்ப்பதற்கு வேறேதும் மார்க்கமில்லை! ஒற்றர்களை அனுப்பச் சொல். யுத்தமேதுமின்றியே துரியனவன் வெற்றிபெற வேண்டுவதே என் விருப்பம்!

<u>பின்னணிப் பாடல்:</u>

**வாய்மை உறையுமிடம் தூய்மை குடியிருக்கும்**
**தூய்மை துலங்குமெனில் தோல்விக்கு மேது இடம்?**

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.





தருவது லியோ டெ

# பி...பி...பிரமாண்டம்!








கட்டிடக் கலையில் பெயர் பெற்ற நாடு பிரான்ஸ். இந்தக் கட்டிடமே அதற்கு சான்று தருகிறதல்லவா?

தினமுரசு வாரமலர்

வன்முறைக்கு கண் இல்லை. இந்தியா என்றால் இந்திரா என்ற அரசியல் சரித்திரத்தை இரத்தத்தில் மூழ்கடித்தது வன்முறை. ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 31ல் இந்தியா தான் இழந்துபோன புதல்வியை நினைத்துக் கொள்கிறது.

# வன்முறையின் மாபெரும் குற்றம்!



பெரோஸ் காந்தியை திருமணம் செய்தது. இரண்டு ஆண் மக்களைப் பெற்றது. பேரக் குழந்தை களோடு கொஞ்சியது என்று



அனைத்துமே இந்திரா ஒரு மனுஷி என்பதன் அடையாளங்கள். அவர் அவதாரமல்ல. ஆனால் அற்புதமான தலைவி. இலங்கை இனப்பிரச்சனையில் ஈடுபாடுகொண்டதால் மட்டுமல்ல, உலக மக்களை நேசித்த அடிப்படையிலும் அவர் நமது அன்புக்குரியவர்!

உடை வடிவமைப்பாளர்கள் மத்தியில் ஏற்பட்ட போட்டியால் இப்படியொரு கலையான காட்சி. தேனீர் குவளை போல் ஆடை தயாரித்து அசத்திவிட்டார்கள். பிடி உடை இருக்கிறது. இதைப் பிடி உடை என்று அழைக்கலாமோ?

# பிடி உடை!



# இடைமெலிது! திடம் வலிது!!

இத்தாலி தலைநகர் ரோமில் கார் தள்ளும் காரிகை. காரில் என்ன கோளாறு கரிசனையோடு விசாரிப்போருக்கு இந்தத் தகவல். தள்ளும் அழகுப் பெண்ணின் பெயர் கிளவுடியா ஷிப்பர். மாடல் அழகி உலாவும் தான் ஃபியட் கார் கண் காட்சி ஒன்றுக்கான விளம்பர உத்தியே இது. கோளாறல்ல. கோலாகலம்.

